The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Tanjore.

Vol. XIV. No. 3.

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1960 Śaka 1882

Annual Subscription Rs. 4.

The following back numbers of the Journal of The Tanjore Sarasvati Mahal Library, are available for sale :—

Vol.	IX.	Parts I, II & III.	Price Rs.	2/-
,,	X.	,,	...	4/-
,,	XI.	,,	...	4/-
,,	XII.	,,	...	4/-
,,	XIII.	,,	...	4/-

(Postage Extra)

As only a very few copies are available, book your orders early.

Copies can be had of:—

The Honorary Secretary,

T. M. S. S. M. Library, Tanjore.

(Madras State)

The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,

Honorary Secretary,

T. M. S. S. M Library, Tanjore.

Vol. XIV. **No. 3.**

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1960 S'aka 1882

Annual Subscription Rs. 4.

CONTENTS.

No.		Pages
1.	Editorial	
2.	British Admirers of Mahārāja Serfoji —Sri T. J. Rāma Rao, Major N. B. Gadre & Sri S. Ganapathi Rao	12+2=14
3.	வேதவிஜ்ஞானம்-VII. அக்நியா (अघ्निया) —நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்.	13—24
4.	திருக்கோவையாரிற் கண்ட திருக்கோவில்கள்-2. —வித்துவான் திரு இராம. கோவிந்தசாமி பிள்ளை.	25—38
5.	निघण्टुसमुच्चयः—Sri P. V. Varadarāja S'arma, M. A.,	9—16
6.	தன்வந்தரி வைத்யம்—Dr. S. Veṅkatarājan, L. I. M.,	113—136
7.	वैयाकरणसिद्धान्तकौमुदी-भट्टोजिदीक्षितकृता An Analysis in English by late Sri P. V. Nāganātha S'āstri (continued from Vol. XIV. No. 2) —Sri N. S. Dēvanāthāchāriar	163—170
8.	आपस्तम्बस्मार्तप्रयोगः —Sri S. Sundarēs'a S'āstri & Sri V. Sundara S'arma	9–16
9.	सूक्तिमालिका-श्रीनारोजीपण्डितविरचिता द्राविडानुवादेन सहिता ஸ்ரீ நாரோஜீ பண்டிதரால் இயற்றப்பட்ட ஸூக்திமாலிகை தமிழ் மொழிபெயர்ப்புடன் —நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்	41—48
10.	Minor works of Sri Veṅkatāchāriar 1. यमकरामायणम् 2. हनूमत्स्तोत्रम् with Ṭippaṇi by Sri D. T. Tātāchārya S'irōmaṇi, M. O. L., —Sri N. S. Dēvanāthāchāriar	27—32
11.	Our Exchanges.	2

THE JOURNAL OF
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

VOL. XIV. A. C. 1960 S'aka 1882 No. 3

EDITORIAL

In this issue of our Journal we have introduced an interesting feature and hope to continue it in later issues. In 1951 and 1952, under the order of the Government of Madras the Tanjore Raj Records then housed in the Tanjore Palace buildings since 1855 or earlier, were classified and listed. These records are in Modi script and the Government transferred the more important papers to Madras for preservation at Madras Record Office. The remaining bundles were handed over to the Sarasvati Mahal Library. In recent years, with the grants made by the Madras Government we have been sorting and cataloguing these Modi manuscripts with the valuable help and guidance of Major N. B. Gadre, A. I. R. O., B E., M. I. E., I. S. E. (Retd.) a tireless and selfless scholar and an indefatigable worker. Drawing upon the materials made available to us from these bundles, we publish in this issue an article on the British admirers of King Serfoji. In the next issues we propose to publish articles under the captions "Side Lights on Annexation of Tanjore in 1855" and "Peeps into King Amar Singh's Administration and finance" and also deal with other allied topics.

We are aware of the limits of materials and scholarship at our disposal but in the absence of abler scholars coming forth to contribute the greater weight of their erudition and stock of materials to bring to light obscure sources of knowledge of this kind, we ventured to make a small beginning in this direction with our small resources.

There are also other articles meriting attention in this issue and we commend them to our readers.

S. GOPALAN,
Editor.

GLIMPSES OF TANJORE HISTORY

BRITISH ADMIRERS
OF
MAHARAJA SERFOJI

Please see in this connection our Editorial at the commencement of this issue.

A portion of the Modi letter of Tanjore Raj Records.



BRITISH ADMIRERS OF MAHARAJA SERFOJI

(*By* MODI-PANDIT T. J. RAMA RAO &
MAJOR N. B. GADRE)

In spite of the small size of his kingdom and in spite of the very scanty powers actually wielded by him even in that small kingdom, the name and fame of Maharaja Serfoji of Tanjore have spread today over the seven continents. This is due to King Serfoji's excellent creation, the Saraswathi Mahal Library, which is one of the Wonders of Asia (and of the World), and wins over all hearts that can approach and give a closer look to its manuscripts, irrespective of the visitor's caste, creed, or nationality.

This had obviously been visualised by contemporary British Officers of the East India Company; and very appropriately had those gentlemen proceeded to get the Maharajasaheb elected to the Membership of the Royal Asiatic Society— a rare honour in those days for a native of India. The authors regret their inability to publish the actual diploma, or even the original English letter which heralded its arrival; but readers will probably need no more proof than the Marathi document found in Tanjore Raj Records of the Saraswathi Mahal Library, published on pages 2 and 4 and 6 that follow. The authors do hope that some day in future the original diploma will some how be located and suitably exhibited at the Library.

English and Tamil translation of the Marathi find have been appended for convenience of readers who do not happen to know Marathi. Paragraph numbers do not appear in the original Marathi document; but they have been added in English and Tamil, to facilitate the author's remarks. Before dealing with the document itself, a little introduction to its writer, Mr. Benjamin Turien, will not be out of place.

Mr. Turien, the writer of the original English letter dated 20th Feb. 1824, had worked as Resident at Tanjore once in King Amarsing's reign and again during King Serfoji's reign. He was instrumental in reinstatement of King Serfoji on the throne of Tanjore on which he had been placed by his adoptive father King Tulaja Raja on Vasantapanchami day during 1887 A. D., but from which he had been ousted out by his uncle Amarsingh, for eleven years. Mr. Turein also piloted the "Treaty" of 1800 A. D. between Tanjore King and East India Company. Soon thereafter, Mr. Turien proceeded to England; and prior to 1803 he is seen sending books, animals, and jewelry from London to King Serfoji at Tanjore. During 1807 and 1808 also he purchased in London several items of costly jewelry for King Serfoji from Messrs. Greenwald, Jewellers,

Continued on Page No. 11

॥ श्री ॥

टुरीयेन सा० चे पत्राचा तर्जुमा

———:o:———

तंजावरचे हिस हैनेस शरफोजी महाराज साहेब यांस ,

बहिरंगास आणि या देशात अहेत ते प्रवर्तकांस ही हे वेळ महाराज दिसूं अल्या उपमेत महाराजास अत्यंत संतोष होणेस थोड्या काला अगोधरी संभवल्या येक्या संगतीस्तव संन मजकूर जेनवरी तारीख २० घालिजेले सेवटील माझें पत्र महाराजांस पुनश्च मनास अणणेस अणी त्याचा सेवटील भाग माहाराजानीं योजून ध्यानास अणणेस हीं मीं प्रेरिजेत अहे. नीट संपादून नीट ख्याती पावल्या कीर्तीहून माहाराजांस होणेचे समस्त प्रकारचे गौरवा विषयीं अणि प्रयोजेना विषईं हीं अणि महाराजांचे तात्कालिक व अगामी ही यैशी सुख युक्त नांदणूक पातेजली असेलसे त्या नांदणुकेस्तव ही मीं प्रेरिजेलो.

कुंपणीच्यांसी माहाराज ऐकमत्याने अहेत त्यास माहाराजांस संभवला अहे तो पातेरा अणि माहाराजांची चिरकालिक स्थितीचे समस्त श्रमानें माहाराज जाणीवि व शास्त्रें यांस विशेषतः अनुसरून अहेत ते अणि माहाराजाचे नावास अधीक स्मरण प्रगटउन इंदिया देशांत अहेत ते वरकड समग्र राजे अथवा नवाब यां परीस अधीक मणून मानणेस प्रगट दिसवीत अहे. तुम्ही खर्च केले फलम व पुस्तकें अणि सामुग्री सरंजाम व मादरी हीं तुम्ही संपादिलें तें अवघें माहाराजाचे विस्तार अणि औदार्य युक्त ही ऐशा गुणाहून स्वातंत्र्य अधीक उत्पादन करणेचे प्रयोजेन दिसवीत अहे. या वरून च महाराज साहेबांचे स्नेहीत सर अल्कज्यांदर ज्यानष्टन मणणार तुमच्या कार्यांत मनःपूर्वक उपयुक्त होऊन त्या समयानुसारी यैशा यैदंपर्याने न्यू असेटिक सोसेटीइन मेबरस यांचे सन्निधानी माहाराजांचे तितुक्या पातेज्याचे स्थितीस अणि सोसेटी मेबरस यास तितुक्या अंगिकाराचे पद्धतीस हीं ते संगती अणिते जाहले. करिता ते तुम्हांस येक्या महत्वाचे मेबरसे नेमणेचे येक डिफ्लोमा मणिजे, किताबा दिसवणेचे पत्रा कडुन माहाराजांस वंदन करणेस अणि त्या डिप्लोमा माजि विवरण करिजेल्या अहेत त्या अनेक संगतीस माहाराजांची चलंती व कर्तव्य याचे विसेषाकार स्वातंत्र्य सोसेटीयाचे स्थापनेस गणनीय यैश मेबर मणून माहाराजांस केल्या श्लाघ्य अणि अपूर्वं ही अैशा कर्तव्यास माल उपयोगी यैसे त्या डिप्लोमात विवरण करणेचे हीं निश्चयाशीं युक्त जाहले करितां तें तुम्हास येक्षा उजागिरीस जाणतेपणासी हीं युक्त मणून ईरोपदेशांत असणार समस्त जाणत्यास अणि विद्यावंतास ही बख्खीसीं युक्त करील

Purport in English, (not a literal translation) of the Marathi translation of Mr. TURIEN's Letter of the 20th February, 1824.

(Found at bundle reference No. 402/8 (i) in T. M. S. S. M. Library)

Shree.

To

HIS HIGHNESS SHARFOJI MAHARAJA,

Your special attention is invited to my last letter, dated 20th January, —specially to its concluding portion in which I had mentioned a recent event particularly gratifying to Your Highness above everything else, that has come to pass ever since Your Highness came to be known to the outer world and to leaders in this country. I acted therein only on the impulse of honouring and felicitating Your Highness on the reputation that Your Highness has rightly earned, and deserves hereafter, by glorious conduct.

2. The alliance and faith which the Company places in Your Highness arise from the constant and strenuous efforts of Your Highness to strictly follow the correct traditions and Shastras; and obviously they hold Your Highness in greater esteem, above all the other Princes and Nawabs in India. The broad and generous outlook displayed by Your Highness in spending on books and similar other means of advancement call for special and independant appreciation. That is why your friend Sir Alexander Johnstone has taken so much interest in you; and in keeping with modern times, he has recommended to the members of the new Asiatic Society the propriety of electing Your Highness ... ... They have now decided to greet Your Highness with a diploma, i.e., letter of recognition, appointing Your Highness an important Member, and describing the several items of meritorious conduct and extraordinary sense of duty on your part that have prompted them to consider Your Highness such an illustrious Member of their Society. That Diploma will introduce Your Highness to all learned and advanced people in Europe, as a courageous and scholarly leader.

करितां महाराजांची वर्तणूक अणि कर्तव्य ही गत पंचेवीस वर्षापासून संपादिल्यासबदल फल युक्त कृतज्ञतेनें माहाराजानी दया करून अंगीकार कीजे. वरकड येतदेशीय राजे यां परिस माहाराजं च येक दिसाउ असावे मणावयाची श्लाघनीय येशा तुमचे वांछेकडुन तुम्ही त्या प्रकारचे सद्वृत्ताचरणास प्रेरित जाहला मणुन मी जाणत अहे करितां तुमचे थोरवीचे अगत्य सफल जाहल्यास्तव मी तुम्हास उत्तम स्तुतीपर अहे.

या थोरवी विषई तुम्ही सर अलकशाडर ज्योनष्टन यांस तुम्हीं अधमर्ण अहांत. तुमचे वरकड स्नेहित हीं त्याचा विश्वास स्थापयिण्याविषई मनःपूर्वक साधक होते त्यांत गौरवाचे भागास तुम्ही कर्नल बळाकी बरन यांस अधमर्ण अहांत तो भाग बोर्ड अफ कंत्रो याचे प्रसिडिंट अणि अलकशाडर ज्योनष्टन यांचे प्रार्थनेवरुन बलाकी बरन यां कडुन ते करिजेले माहाराजांचें नाव त्या कागदाचे अरंभीं अधिक कितांबाशी युक्त दिसूं येत अहे. हे सेवटील संगती कर्नल बलाकी बरन याचे समाधानासी युक्त अणि स्नेहयुक्त मनोगतास्तव म्या पहिलेच तुम्हांस लिहिला अहे तो निश्चय तुम्ही किती जाणाल कीं तितुका ही तुम्हांस संतोष लाभेल.

माहाराजाची यात्रा अणि त्याजसी मिळालीं कार्यें हीं हे सप्रयोजक अणि श्लाघनीय ही अैशा प्राचीन चलंतीस थोडी वेळ पावेतो हरकत करून तुमच्या चलंतीचा गौरव अणि परिष्कार हीं विस्तार ऐशा बदलवणी तुमचे मनास रुचविती जाहली हा निर्णय त्या रुचीचे पूर्णतेस अथवा यथार्थतेने वेगल्या येकास चालवीनासे तुमचे पूर्व चलंती स्थापना केल्या अनुपम अणि सुंदर इमारती खचवणेस * दिसूं येत अहे. अपुलें मन त्याची सुस्थित अैशा स्थितीस पुनश्च अंगीकारिलसे अणि डिप्लोमा येऊन पावेल तेव्हां सर्वप्रकारें तो अपणास तुम्ही पात्र मणून जाणेलसे येक उत्तम अैशी प्रार्थना अणखीं येकदा लिहिल्यानें तुमचे मनस्ताप परिहार करणेस मजला देखील प्रेरणा करणार तुमचा प्राथमिक अत्यंत अगत्यासीं युक्त हीं अैशा स्नेहिता परी दिसूं येत अहे.

कितेक प्रकाराचीं प्रामादिक भीति सोडुन देण्यार्थ अणि मनाचा हा संताप व बनारसाहुन महाराज फिरले तेव्हां महाराजांस अनुसरली ते पूर्व गुणाची बदलवणी ही माहाराजांस निपटच सोडिनासे असूये म्हणून ही माझा गत. अकटोबर महिन्याची पत्रें अपण पावतोर अपणा भोवताले तितुके अतिशयाने विणिजेली वदलवणी झुगारणें अगत्य तुम्ही चिंतिले नसूये म्हणून ही कितेक सुचणुका लिहिणेस ही तुम्ही मजप्रति क्षमापर व्हाल.

---

* खचवणेस = (रत्न) खचित करणेस=अलंकृत करणेस=शोभविणेस

3. In fulfilment of the past twentyfive years of my gratitude towards Your Highness, for meritorius conduct and sense of duty, this may kindly be accepted I am aware of the keen desire to shine above all the other Native Princes, which prompted Your Highness to this kind of meritorious career; and I congratulate the fructification of that greatness.

4. You owe this exhaltation to Sir Alexander Johnstone And amongst the other friends who were endeavouring to promote your claim, you are specially indebted to Col. Blackburn, for citation of merit in the Diploma. The President of the Board of Control and Sir Alexander Johnstone specially requested Col. Blackburn for that citation. The name of Your Highness appears at the commencement of that paper with more titles, which is due to pleasure and friendship of Col. Blackburn as already indicated by me; and the more you realise this, the more will be your satisfaction.

5. The pilgrimage (to Benares) and connected items undertaken by Your Highness had temporarily halted the normal routine of that praiseworthy career, and for the time being provided an agreeable change of taste. The above decision will help in re-establishing the old career, and in glorifying further the beautiful edifice of your achievements. I pray once more, that by the time the Diploma arrives there, Your Highness would have fully regained your usual peace of mind, and that you will approve the Diploma; and it is only the very keen friendship with you that prompts me to try thus, to remove all uneasiness from your mind.

6. Your Highness will kindly excuse several references in my letters since October last, requesting you to eschew all unreasonable fears, and to stick to the change of attitude which accompanied Your Highness on journey back from Benares. Never think of discarding that change, achieved with so much effort.

7. I had made bold to pray for a particularly useful promise that Your Highness might make to the Governor, who knows even better than yourself your superior objectives and methods. I had myself written to the Governor to trust that promise and its fulfilment. I am full of appreciation for you; and if I am to be of any further use, you may not show any distrust of my advice. You will then be entitled to the honour so honourably earned, and win over outsiders and favourable annotations. The Diploma will yet take several weeks to reach Chennapatan. By virtue of your meritorious career, that Diploma is coming from this country resplendent with all your greatness; and I am confident that you would appreciate the propriety of that paper, and the citation in it, of all your doings.

तुम्ही अणिला अहांत त्या परिस अधिक च तुमचा अभिलाष अणि चलंतीहीं जाणत अहेत त्या गवर्नरास यारीतीचे येक संभवना मणून माहाराजानीं चांगलें येक वाकदत्त करणेस महाराजांस प्रार्थना करण्या विषई मी धजलो या वाकदत्ताचे ईडावर अणि त्याचे साफल्यावर हीं पातेजतीलसे गवर्नरयांस मीच लिहिलो. तुम्हाकडे माझी योचना हरयेक गौरवासी युक्त असून यावरही म्या कामा यावे तर ह्या बुद्धीवादाची असढा तुम्ही दिसविनात तुम्हास येणेचे श्लाघनीय अैशा श्लाघ्यतेची यथार्थ अैशा गणनीयतेस तुम्ही या रीतीनें पात्र जाहल्या बहिरंग माणसें अणि प्रसिद्ध अभिप्रायेहिंसीं युक्त असाल. तो डिप्लोमा चेनपटणास येऊं पावणेस अगाउ कितेक वार जाउ येत. तो डिप्लोमा माहाराजाचे पुण्यप्रभावानें नीट अलंकृत होउन माहाराजाचे समस्त थोरवीने ही भूषित होऊन या देशातून येत आहे करितां तो अणि त्यांतील समस्त कार्यें ही देणेची श्लाघ्यतेचा पूर्ण अैसा गौरव तुम्ही जाणाल मी भरवसलो अहे.

रायल असेटिक सोसेटी यांकडुन येणेचा डिप्लोमा माझा स्नेहित मेस्तर सलवन मजला सांगत आहे त्यापरीं बोर्ड अफ कंत्रोल यांकडुन अति संतोषानें अंगीकृत होऊन त्यावरचे बहिरंग अधिकारी अैसे अफेरस अफ इंदियास इसम्याजष्टीचे मिनष्टर सरखेल अैसे मेस्तरराम प्रसिडिंट मुख्य याचे हतातून तुम्हास येत आहे. मणून म्या तुम्हास कळवावे.

म्या विसेष कायलिहुये.

मोकाम :— लंडन

सन १८२४ इसवी फेब्रूयरी तारिख २०

निशान बेंज्यामेन टुरियेन

मणून असें

8. I would like to add, on the word of my friend Mr. Sullivan, that this Diploma coming to you from the Royal Asiatic Society has been adopted by its Board of Control with extreme pleasure; and that it has been despatched through the foreign Ministry President Mr. Ram, His Majesty's Minister for Affairs in India.

9. What else could I add ....

Dated at London,
this 20th day of February 1824.

(Sd.) BENJAMIN TURIEN.

(மிஸ்டர் டூரியன் அவர்களுடைய 1824-ஆம் பிப்ரவரி-மீ 20உயிட்ட கடிதத்தின் மராத்தி மொழிபெயற்பின் சுருக்கம்)

தமிழாக்கம்:— **எஸ். கணபதி ராவ்**

ஸ்ரீ

மேன்மைதங்கிய சரபோஜி மகாராஜா அவர்கள் சமூகத்திற்கு,

கடந்த ஜனவரி-மீ 20உ மகாராஜா அவர்கள் சமூகத்திற்கு எழுதிய கடிதத்தின் இறுதி பாகத்திற்கு தங்கள் விசேஷ கவனத்தை வேண்டுகிறேன். மேன்மை பொருந்திய மகாராஜா அவர்கள் வெளியுலகிற்கும், நாட்டுத் தலைவர்களுக்கும் அறிமுகமானபின், சமூகத்திற்கு மிகவும் பகிழ்ச்சியையும் கௌரவத்தையும் அளிக்கக்கூடிய சமீபத்தில் நிகழ்ந்த சம்பவத்தை நான் அதில் குறித்துள்ளேன். இவ்விஷயத்தில், மகாராஜா தன் உயர்ந்த நடத்தையால், உரிமையுடன் தற்காலம் அடைந்ததும், மேன்மேலும் அடையப்போகும் மாபெரும் புகழை கௌரவிக்கவும், கொண்டாடவும் தூண்டப்பட்டு நான் இதில் ஈடுபடுகிறேன்.

சாஸ்திரப் பரம்பரையை வழுவாது போற்றுவதில் மகாராஜா அவர்களிடம் காணும் இடைவிடாத ஊக்கம்தான் கம்பெனியாரின் நட்பையும் நம்பிக்கையையும் தோற்றுவிக்கக் காரணம். மற்ற ராஜாக்களையும், நவாபுகளையும்விட கம்பெனியார்கள் மகாராஜாவிடம் அதிக நன்மதிப்பு வைக்கக் காரணமும் இதுவேதான். மகாராஜாவின் பரந்த நோக்கமும், கல்வி மற்ற முற்போக்குத் துறைகளிலும் நூல்களை சேகரிப்பதிலும் தாராளமான மனப்பான்மையும், சமூகத்திற்குத் தனிச் சிறப்பையளிக்கின்றன. இது காரணமாகவே அலெக்ஸாந்தர் ஜான்சன் மகாராஜாவிடம் விசேஷ பற்றுள்ளவராகிறார். தேசகாலவர்த்தமானத்திற்கேற்ப அன்னார் ஏஷியாடிக் சொஸைடியின் அங்கத்தினர்களுக்கு, சமூகத்தைத் தேர்ந்தெடுக்க சிபாரிசு செய்திருக்கிறார். சொஸைடியார் மகாராஜாவிற்கு ஓர் கௌரவ பத்திரம் வழங்கி அதில் மகாராஜாவின் சிறந்த குணங்களையும், செய்கைகளையும் பாராட்டி ஓர் சிறப்புப் பட்டமும், பதவியும் அளிக்க முடிவு செய்திருக்கின்றார்கள். இந்தப் பட்டமானது மகாராஜாவை, ஐரோப்பாவிலுள்ள பண்டிதர்களிடையேயும், முற்போக்காளர்களிடையிலும் ஓர் துணிகரமான தலைவர் என அறிமுகப் படுத்தும்.

சிறந்த குணங்களாலும், கடமையினுலும் கடந்த 25 வருடங்களாய் நன்றிபட்டு நான் இந்தப் பட்டத்தை மகாராஜா அவர்கள் பெரியமனதுசெய்து அங்கீகரிக்கக் கனிந்து வேண்டுகிறேன். ஏனைய சிற்றரசர்களைக்காட்டிலும் புகழையும் மேன்மையையும் பெறவே மகாராஜா அவர்கள் சிறப்பான நடத்தையை மேற்கொண்டவர்கள். அதன் பயனை மகாராஜா அடைந்ததை குறித்து என் வாழ்த்துக்கள்.

மகாராஜாவின் இம் மேன்மைக்குக் காரணபூதமானவர் அலெக்ஸாந்தர் ஜான்சன் அவர்கள்தான். அன்னருக்கு சமூகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. மகாராஜாவிற்குறித்தான இம் மேன்மையை ஸ்தாபிக்க முயன்ற பல நண்பர்களில் முக்கியமானவர் கர்னல் பிளாக்பர்ன் என்போர். மகாராஜா அவர்களுடைய நற்செயல்களை கௌரவப் பட்டத்தில் முக்கியமாகக் குறிக்கவேண்டி முயற்சி எடுத்துக்கொண்டவகையில் சமூகம் மிக்க கடமைப்பட்டுள்ளது. ஸர் அலெக்ஸாந்தர் ஜான்சன், தவிர போர்ட் ஆப் கன்ட்ரோல் (Board of Control) தலைவரும், கர்னல் பிளாக்பர்ன் அவர்களை இந்த நற்பணிக்குத் தூண்டியவர்கள். சர் கர்னல் பிளாக்பர்ன் அவர்களின் நட்பின் பயனுகவே கௌரவப் பட்டத்தின் துவக்கத்தில் காணும் விசேட கௌரவங்களும் பாராட்டுதலும் குறிக்கப்பட்டுள்ளன என ஏற்கனவே தெரியப்படுத்தினேன். இவ்விஷயம் மேன்மேலும் தெளிவாகும்போது மகாராஜா அவர்கள் மட்டற்ற களிப்படைவீர்கள்.

மகாராஜாவின் சிறப்புமிக்க சேவைகள், காசி யாத்திரையின் காரணம் ஒத்திவைக்கப்பட்டு, சமூகத்திற்கு மனே அமைதியைத் தரும் என்பது திண்ணம். மேற்கண்ட முடிவு, பழைய வழக்கங்களுக்கு புத்துணர்ச்சியளித்து, மேலும் மகாராஜாவின் சேவையின் அழகை பன்மடங்கு அதிகப்படுத்தும் என நம்புகிறேன். கௌரவப்பட்டம் மகாராஜாவை அடையும்போது சமூகம் தன் மன அமைதியைத் திரும்பப்பெற்று மேற்கண்ட பட்டத்தை வரவேற்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன். சமூகத்தின் உள்ளத்தில் எழக்கூடிய சஞ்சலத்தை அகற்ற வேண்டி மகாராஜாவின் ஆழ்ந்த நட்பு ஒன்றே என்னை இவ்வழிக்குத் தூண்டுகிறது.

சமூகம் காசி யாத்திரையினின்று திரும்பியபோதடைந்த மனப்பான்மையே உறுதியாகக் கைக்கொள்ளவேண்டும். வீண் அல்லல்களைப்பற்றி கடந்த அக்டோபர் மாதத்தில் என் கடிதங்களில் கண்ட குறிப்புகளை மகாராஜா அவர்கள் மன்னிக்கவேண்டுகிறேன். பெரு முயற்சியின் பயனுயடைந்த அந்த மாறுபாடுகளை மகாராஜா கைவிட நினைக்கவும் வேண்டாம்.

கவர்னரிடம், மகாராஜா அவர்கள் செய்யக்கூடிய சில வாக்குறுதிகளை நான் துணிவுடன் பிரார்த்திக்கிறேன். கவர்னர் அவர்கள் மகாராஜாவின்

மேம்பட்ட திட்டங்களேயும் அவைகளே கையாளும் சமூகத்தின் பெருந்திறனேயும் தெரிந்தவர். வாக்குறுதியை நம்பவும் அதை நிறைவேற்றுவதில் நம்பிக்கைக் கொள்ளுமாறும் நான் கவர்னர் அவர்களிடம் தெரிவித்துக்கொண்டேன். மகாராஜா அவர்களே இந்த சந்தர்ப்பத்தில் மிக்கப் பாராட்டுகிறேன். மேலும் என் தொண்டு அவசியப்பட்டால் என் ஆலோசனேயை நம்பலாம். என்னேப் பூர்ணமாக நம்புவதினுல் மகாராஜா தன் சிறப்பின் பயனுய் அடைந்த மேன்பாடுகளேப் பெற உரித்தவராகுவர். வெளிநாடுகளில் பெரும் புகழ் பெறுவீர்கள். கௌரவப் பட்டம் சென்னப்பட்டணம் வந்தடைய பல வாரங்களாகும். மகாராஜாவின் மேலான நடத்தையினுல் இக்கௌரவப் பட்டம் மகாராஜாவின் சிறப்பிற்கு அணிகலனுக இந் நாட்டினின்றும் வெளியேறுகிறது. சமூகத்தைப் பாராட்டி, சமூகத்தின் புகழை பரவவைக்கும் இக்கௌரவப் பட்டத்தை பெரிதும் லோகிப்பீர்கள் என நம்புகிறேன்.

ராயல் ஏஷியாடிக் ஸொஸைடியின் போர்ட் ஆப் கன்ட்ரோலினுல் மிக்க சந்தோஷத்துடன் ஏற்கப்பட்டது இவ்விஷயம், என் நண்பர் மிஸ்டர் சல்லீவன் அறிவிக்கிறுர். மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியவர்களின் அயல்நாட்டு இலாக்காவிலிருந்து அயல்நாட்டு இலாகாவின் இந்திய தலேவரான மேஸ்டர் ராம் என்பவர் மூலம் இது அனுப்பப்பட்டது.

வேறு விசேஷமில்லே.

லண்டன்
20—2—1829

கை. ஒ. பென்ஜாமின் டூரியன்.

From Page No. 1

The correspondence between King Serfoji in India and Mr. Turien in England continued ceaselessly, and appears to have reached its climax in Turien's letter now under consideration. In another letter of 28th February 1824, Serfoji's letter of 15—3—1823 and Turien's own letters of 5—12—1823, 16—1—1824 and 20—2—1824 are mentioned, with a remark that King Serfoji must have realised therein how his ideas about Col. Blackburn have been fulfilled, followed by a suggestion about disposal of debts in King Amarsing's times.

Turning now to the document under consideration, the superlative terms in para 2 in which Mr. Turien describes the achievements of Serfoji indicate the very high esteem in which contemporary Britishers of the East India Company held their unfortunate ward. Mr. Turien openly says in para 3 that all his efforts arise out of gratitude for the Maharaja.

Paragraphs 4 and 8 of the document enumerate other Englishmen involved in substantiating the election idea. It is interesting to note that Mr. Ram and Col. Blackburn also had been residents at Tanjore in 1811 and 1822. The Brihadeeswar inscription refers to Mr. Blackburn, Resident of 1801, but the authors are doubtful whether this could be the same as Lt.—Col. Blackburn of 1822. Mr. S. Sullivan was on the Home Ministry Affairs of India staff in London continuously from 1821 to 1825. It is difficult to locate how Sir Alexander Johnston came in contact with King Serfoji.

While appreciating the administration and goodwill of British contemporaries, the reader may do well to pay some attention to contents of paragraphs 5 to 7, wherein appears a mention about King Serfoji having felt very worried over some affair before he undertook his Benares pilgrimage. Although he had partially regained his composure on return from pilgrimage, the East India Company was still trying to induce him to forget something and promise something What was that? It may as well be some mental reserve tending to spoil king's relations with the East India Company; but the authors venture another suggestion in the next paragraph.

Sri Venkaswami Rao at page 827 of his "Manual of the District of Tanjore (published at Madras in 1883) mentions on the authority of Serfoji's contemporary Mr. N. W. Kindersley, Special Commissioner, that "His Highness (Maharaja Serfoji)'s treatment of his son (Shivaji) was more like a state prisoner than like an heir to the Musnud". On the other hand papers available to us show that just before the Kashiyatra King Serfoji and Prince Shivaji had paraded together in great pomp in the Dussarah procession; and that Prince Shivaji had been duly declared as successor to Serfoji's Titles and Kingdom. Mr. Thomas Munroe, Governor of Madras, mentions his own support in letters dated 21—6—1882 and

3—12—1822 and satisfaction in letter dated 26—12—1822. In a subsequent letter of 11—8—1824 Governor Munro has even communicated East India Company Directors' approval from London to Shivaji's successorship, as per Directors' letter of 16—3—1824. There is thus an incongruency between Venkaswami Rao and Tanjore Records concerning Serfoji Shivaji relations, on which more light is needed.

Another point of an earlier date is worthy of note here, which has already been referred to by Venkaswami Rao. The Tanjore Raj Records bear no testimony to any short reign by "Saiyaji Bhonsle" between Kattu Raja and Pratapsing during 1739—40; but the East India Company's records do show such a reign. The authors earnestly hope that more experienced research workers in Tamilnad and Maharashtra, with the help of more authentic papers in their own possession and also available at Madras and Delhi, will help in attacking such knotty points and arriving at firm historical conclusions.

அக்நியா (अघ्निया)

நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர், வித்வான்,
ஸரஸ்வதி மஹால், தஞ்சாவூர்.

"आप्यायध्व **मघ्निया** देवभागमूर्जस्वतीः पयस्वतीः प्रजावती रनमीवा अयक्ष्मामावः स्तेन ईशत माघश ॅसो रुद्रस्य हेतिः परिवो वृणक्तु ध्रुवा अस्मिन्गोपतौ स्यात बह्वी-र्यजमानस्य पशून्पाहि"

என்னும் மந்திரங்கள் கிருஷ்ணயஜுர்வேதம் தைத்திரீய ஸம்ஹிதை முதல் காண்டம் முதல் பிரச்னம் முதல் அனுவாகத்தில் ஓதப்படுகின்றன. இவற்றின் கருத்து :—

"கொல்லத்தகாதவையான பசுக்களே! நீங்கள் நன்ருகப்புற்களை மேய்ந்து மடிநிறையப்பால் பெருகிக்கொண்டு தேவபாகத்தை (இந்திரனென்னும் தெய்வத்திற்களிக்கப்படவேண்டிய தயிரை) வளர்க்கவேண்டும். அதிகமான ரஸமுள்ளனவாகவும், பால் நிறைந்தனவாகவும் கன்றுகள் நிறைந்தனவாகவும், க்ரிமி (பூச்சி) தோஷமும் மற்ற நோய்களுமில்லாதனவாகவும் நீங்களிருக்க வேண்டும். உங்களைத்திருடன் கடத்திக்கொண்டு போகாமலிருக்கட்டும். புலி சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் உங்களை அணுகாமலிருக்கட்டும். ருத்திரன் எனப்படும் க்ரூரமான தேவனுடைய ஆயுதம் உங்களைவிட்டு விலகட்டும். இந்த யஜமானனிடத்தில் நீங்கள் நிலைத்துநின்று பல்லாயிரக்கணக்காக வளர்ச்சியுற வேண்டும். யஜமானனுடைய பசுக்களை காப்பாற்று" என்பது.

இங்கு யஜுர்வேதத்தின் தொடக்கத்தில் தர்சபூர்ணமாஸம் எனப்படும் யாகத்திற்கான மந்திரங்கள் ஓதப்படுகின்றன. அவற்றுள் தர்சயாகம் என்பது அமாவாசைக்கடுத்த பிரதமையன்று செய்யவேண்டியது. இந்திரன் என்னும் தெய்வத்திற்குத் தயிர் பால் இவை அவியுணவாக அளிக்கப்படவேண்டியவை இந்த யாகத்தில். அதற்காக முதல் நாள் காலையிலேயே தாய்ப்பசுக்களிடமிருந்து கன்றுகளைத் தனிப்படுத்தி, பசுக்களைப் புல் மேய்வதற்காக வெளியில் ஓட்டுகின்ற போதுதான் ஷி மந்திரங்கள் இடம்பெறுகின்றன. இங்கு பசுக்களை "**அக்நியா**" என்னும் பெயரால் வேதம் வழங்குகின்றது. "கொல்லத்தகாதவை" என்பது இச்சொல்லின் பொருள். பசுவிற்குப் பல பெயர்கள் வேதங்களில் வழங்குகின்றன. அவற்றுள் 'அக்நியா" என்னும் பெயர் முதலிடம் பெறுகின்றது. "न हिंस्यात् सर्वा भूतानि" (எந்தப்பிராணிகளையும் கொல்லக்கூடாது) என்னும்

(உரிமை ஆசிரியருக்கே)

வேதவாக்கியம், "ஜீவஹிம்ஸையை அறவே ஒழிக்கவேண்டு"மென்று வலியுறுத்துகின்றது. இந்தப்பொதுவான விதி காத்திருக்கையில், சிறப்பாக ஒரு பிராணியைக் "கொல்லத்தகாதது" என்று பெயரிட்டழைப்பதிலிருந்து வேதத்தின் உட்கருத்து நன்கு விளங்குகின்றது. "மற்றைப் பிராணிகளைக் கொல்லுவதனால் உண்டாகும் பாவத்தைப்போல் பன்மடங்கு அதிகமான பாவம் பசுவதையால் உண்டாகும். அதனால் ஒருபோதும் இக்காரியம் செய்யக்கூடாது" என்பது வேதத்தின் கருத்து. பசுவைக்கொல்லாமல் இருந்துவிட்டால் மட்டும் போதுமா? அதைப்போற்றி வளர்த்துக்காப்பாற்றவேண்டாமா? எல்லாம் செய்யத்தான் வேண்டும். செய்தேதீரவேண்டும். அவற்றைப்பலகாலும் வேதம் பரக்கப் பேசுகின்றது. பேசுமிடங்களிலெல்லாம் "அக்ந்யா" என்னும் பெயரால் பசுவைக் குறிப்பிட்டு அதன் மேல் பல விஷயங்களையும் விரிவாக வேதம் எடுத்துரைக்கின்றது. அதனால் இப்பெயரில் தனியாக முக்கியத்துவம் பாராட்டப்படுகின்றது.

ருக்வேதத்திற்கு நிருக்தம் எழுதிய யாஸ்கர், பசுவின் பெயர்களை வரிசையாகக் கொடுக்கின்றார் ;—

"अघ्न्या १, उस्रा २, उस्रिया ३, अही ४, मही ५, अदितिः ६, इळा ७, जगती ८, शक्करी ९, इति नव गोनामानि"

(நிருக்தம் 2-11)

என்று. இங்கு ஒன்பது பெயர்கள் பசுவுக்குக் கூறப்படுகின்றன. அவற்றுள் "அக்ந்யா" என்பது முதலிடம் பெற்றுள்ளது. ருக்வேதத்தில் "அக்ந்யா" என்றிருந்தது மற்ற வேதங்களில் "அக்நியா" என்றாயிற்று, சத்யம் சத்தியமானாற்போல.

(1) அக்ந்யா—கொல்லத்தகாதது.

(2) உஸ்ரா—பால் தயிர் வெண்ணை முதலிய ஹவிஸ்ஸுப் பொருள்கள் இதனிடம் வசிக்கின்றன.

(3) உஸ்ரியா—பால் தயிர் வெண்ணை இவ்வரிசையில் மனிதனுக்கு இன்றியமையாத சுகபோகங்கள் இதனால் பெருகுகின்றன.

(4) அஹீ—இதைத் தானம் செய்வதனால் புண்ணியம் பெறலாம்.

(5) மஹீ—தெய்வங்கள் யாவற்றிற்கும் இருப்பிடமாக நினைத்துப் பூஜிக்கப்படுவது.

(6) அதிதி:—எல்லாவுலகங்களையும் பால் கொடுத்துப் போஷித்துக் கொண்டேயிருந்தாலும் அதனால் சோர்வடைவதில்லை.

(7) இளா—எல்லோராலும் புகழப்படுவது.

(8) ஜகதீ—பால் முதலியவற்றை விரும்புகின்றவர்களால் தேடிவந் தடையப்படுகின்றது.

(9) சக்வரீ—தன் யஜமானனைப் பால் முதலியவற்றால் சந்தோஷப் படுத்தவல்லது.

“இவைகள் “கோ”வின் பெயர்கள்” என்று முடிப்பதனால் “கோ” என்பதும் பசுவின் பெயர் என்பதாகின்றது. “அக்ஙியா” என்பதே இவற்றில் முதன்மை பெற்றுள்ளது.

கிருஷ்ண யஜுர்வேதம் தைத்திரீய ஸம்ஹிதை ஏழாங்காண்டம் முதல் பிரச்னம் ஏழாவது அனுவாகம் முடிவில்;

“तस्या उपोत्थाय कर्णमाजपे दिडे रन्तेऽदिते सरस्वति प्रिये प्रेयसि महि विश्रुत्येतानि ते **अघ्निये**! नामानि सुकृतं मा देवेषु ब्रूतादिति”

என்னும் சொற்றொடர் காணப்படுகின்றது.

ஸஹஸ்ரதமீ—என்றழைக்கப்படும் பசுவைத் தானம் பண்ணவேண்டிய விதி முறைகளைக் கூறுமிடமிது. ஸஹஸ்ரதமீ என்பதற்கு “ஆயிரமாவது” என்று பொருள். ஆதிகாலத்தில் பகவான் ஒரு பசுவைத் தவமகிமையால் உண்டு பண்ணினார். வஸுக்கள் ருத்திரர்கள் ஆதித்தியர்கள் என்னும் மூவகைத் தேவர்கள் அதைப்போஷித்து வளர்த்தனர். அதுவும் ஒவ்வொருவருக்கும் முறையே முந்நூற்று முப்பத்து மூன்று கன்றுகளைக் கொடுத்தது. மூன்றையும் கூட்டினால் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது எண்ணிக்கை வருகின்ற தல்லவா? இவற்றிற்கு மூலகாரணமான தாய்ப் பசு, தானே ஆயிரமாவது எண்ணிக்கையைப் பூர்த்தி செய்தது. அதனால் அதற்கு அதுவே பெயராகிறது.

அதைத் தானம் பண்ணும்பொழுது அதன் காதுக்குச் சமீபத்தில் நின்று கொண்டு ஜபிக்கவேண்டிய மந்திரமே மேலே தரப்பட்டது. இடா 1, ரந்தா 2, அதிதி 3, ஸரஸ்வதீ 4, ப்ரியா 5, ப்ரேயஸீ 6, மஹீ 7, விச்ருதீ 8 என்னுமிவை பசுவின் பெயர்கள். முன்கூறிய வழியில் ஒவ்வொரு பெயரும் பசுவின் உயர்ந்த குணங்களைப்பற்றி ஏற்பட்டவை. இவற்றைச் சொல்லி அன்புடன் பசுவை அழைக்கின்றான் யாகம் செய்பவன். அப்போது முந்துற முன்னம் “அக்ஙியே!” என்று கூப்பிட்டு; “கீழ்க்கூறியவையெல்லாம் உனக்குப் பிரியமான பெயர்கள் அல்லவா? இவற்றால் பரிவுடன் கூப்பிட்டு உன்னைத் தானம் செய்கின்றேன். நீ தேவர்களிடம் என்னைப் புண்ணியம் பண்ணியவன் என்று சொல்லவேண்டும்” என்று வேண்டிக்கொள்கின்றான். இதிலிருந்து ஒரு விஷயம் புலனாகின்றது. பெயர்களெல்லாம் ஒரு பொருளை உணர்த்துவதற்காகவே தோன்றியவை யாயினும் அவற்றிலும் ஏற்றத்தாழ்வுண்டு. சில பெயர்கள் பொருளுடன் ஒன்றி

அவற்றிற்கு மிகவும் அந்தரங்கமானவையாக அமைந்துவிடுகின்றன. அப்படிப் பட்ட பெயரை முதலில் சொல்லி, மற்றைப் பெயர்களைப் பிறகு கூறுவது தொன்றுதொட்டு வந்துள்ள மரபு என்பதே அது. இங்கு பசுவிற்கு "அக்நியா" என்பது அவ்வாறான அந்தரங்கமான பெயரென்பது தேற்றம்.

ஏனைய விஷயங்களிலும் இதுபோன்ற வழக்கம் காணப்படுகின்றது. அச்வமேத யாகத்தில் யாகத்திற்கான குதிரையின் வலது காதில் யஜமானன் அதன் பெயர்கள் பலவற்றையும் சொல்லி அழைக்கவேண்டும்.

"विभूर्मात्रा प्रभूपित्राऽश्वोऽसि हयोऽस्यत्योऽसि नरोऽस्यर्वासि सप्तिरसि वाज्यसि वृषासि नृमणाऽसि ययुर्नामासि" (தைத் ஸம். 7—1—12)

என்பது அங்குள்ள மந்திரம். விபூ:, ப்ரபூ:, அச்வ:, ஹய:, அத்ய:, நர:, அர்வா, ஸப்தி: வாஜீ, வ்ருஷா, ந்ருமண:, யயு: என்று பன்னிரண்டு பெயர்களால் இங்கு அச்வமேதக்குதிரை அழைக்கப்படுகின்றது. அவற்றுள் கடைசிப்பெயரான 'யயு' என்பது குதிரைக்கு மிகவும் பிரியமான பெயராம். அதனால் மற்றைப்பெயர் களால் அழைப்பதிற்காட்டில் 'யயு' என்னும் பெயரால் அழைப்பதில் குதிரைக்கு இன்பம் அதிகமென்கிறது வேதம்.

"ययुर्नामासीत्याह । एतद्वा अश्वस्य प्रियं नामधेयम् । प्रियेणैवैनं नामधेयेनाभिवदति ।"
(தைத் ப்ரா - 3-8 9)

"यानशीलो ययु:" என்று இப்பெயருக்குப் பொருள் தரப்படுகின்றது. "எப் பொழுதும் போய்க்கொண்டேயிருக்கும் இயல்புடையது" என்பதே இதன் பொருள். இந்தப்பெயரால் அழைப்பதில் குதிரைக்குத்தனிப்பெருமை உண்டா கின்றதாம்.

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில்

"தொல்லருள் நல்வினையால் சொலக்கூடுங்கொல்? தோழிமீர்காள்!
தொல்லருள் மண்ணும் விண்ணும் தொழநின்ற திருநகரம்
நல்லருளாயிரவர் நலனேந்தும் திருவல்லவாழ்
நல்லருள் நம்பெருமான் நாராயணன் நாமங்களே"

(திருவாய்மொழி 5-9-10)

என்னும் பாசுரத்தில் இதேபோன்ற நிலைமை காணப்படுகின்றது. ஆழ்வார் எம் பெருமானோடே கலந்து பிரிந்து பிரிவாற்றாமை நோவுபடுகிறாளொரு பிராட்டியின் நிலைமையை அடைந்து அருளும் பாசுரமிது நல்ல அருளையுடையவனும் நமக்கு உடையவனுமாகிய "நாராயண"னுடைய இனிய திருநாமங்களை அவனுடைய இயற்கையான அருளால் சொல்லக்கூடுமோ? என்று தோழிமாரைப்பார்த்து ஏங்கிக்கூறும் பாசுரம். இங்கு நான்காமடியில் "நாராயணன் நாமங்களே"

என்றளது. "நாவினுலுய்ய நான் கண்டுகொண்டேன் நாராயணுவென்னும் நாமம்". (பெரி. திரு. 1–1–2) என்கிறபடி "நாராயணன்" என்பதும் எம்பெருமானது திருநாமங்களிலொன்ருயிருக்க, அத்தால் முந்துற முன்னம் எம்பெருமானைக் குறிப்பிட்டு, அவனுடைய நாமங்களென்று மற்றைத் திருநாமங்களை ஆழ்வார் எடுத்துரைக்கின்ருர். "மற்றைத் திருநாமங்களிற்காட்டில் "நாராயணன்" என்னும் திருநாமம் எம்பெருமானுக்கு அந்தரங்கமானது" என்பது இதனுல் தெளிவாகின்றது. "நாராயணன் நாமங்களே—நாராயணசப்தம் யர்மி நிர்தேசம் இஸ்ஸ்வபாவங்களாலே நிருபித வஸ்துவுக்குண்டான குணசேஷ்டிதங்களுக்கு வாசகம் அல்லாத திருநாமங்கள்" என்பது இப்பாசுரத்தின் உரை. அது போலவே பசுவிற்குப் பல பெயர்களிருப்பினும் "அக்நியா" என்னும் பெயரில் தனிச்சிறப்பு ஒன்றுளது. அதனுல் அதுவே முதன்மைபெறுகின்றது.

அக்நியா என்னும் சொல் பசுவைத்தவிர வேறெங்கும் உபயோகிக்கப் படுவதில்லை. பசுவின் பெயராக இது கூறப்படும்போதும்கூட காரணப்பெயராக வரும் நிலை தவிர்ந்து இடுகுறி (रूढि)ப் பெயர்போல் சர்வ சாதாரணமாகவே உபயோகிக்கப்படுகின்றது. சில வைதிகப் பிரயோகங்களை உதாரணமாகக் காட்டுகின்ருேம்.

"महान्तं कोशमुदचानिषिञ्च स्यन्दन्तां कुल्याविषिताः पुरस्तात् ।
घृतेन द्यावापृथिवी व्युंधि सुप्रपाणं भवत्वघ्न्याभ्यः" (ருக்வேதம் 5-84-8)

நன்னீர் பொழியும் கார்முகிலை வருணிக்கின்றது இம் மந்திரம். பர்ஜன்ய ஸூக்தமென வழங்கும் ஸூக்தத்தில் எட்டாவது மந்திரம் இது. இதன் கருத்து:—

"ஓ பர்ஜன்ய தேவனே! நீ ஜலத்தின் மிகப்பெரிய சேமிப்பாகிய மேகத்தை உயரக்கிளர்ந்தெழச் செய்வாயாக. அவற்றின் மூலம் பெருமழையைப் பொழிவாயாக. கால்வாய்களெல்லாம் நீர் நிரம்பிக் கீழ்த்திசையில் பெருகியோடட்டும். ஆகாயத்தையும் பூமியையும் இளகச்செய்வாயாக. அக்நியாக் (பசுக்)களுக்குக் குடிப்பதற்கான நன்னீர் எங்கும் உண்டாகட்டும்" என்பது. மழைக்கடவுளாகிய பர்ஜன்ய தேவனை வேண்டிக்கொள்வதன் முக்கியமான கருத்து, பசுக்களுக்குக் குடிதண்ணீர் பெருகுவதிலேயே முற்றுப்பெறுகின்றது. அவ்வாறு கூறுமிடத்து, பசுக்களை 'அக்நியா" என்னும் செல்லப்பெயராலேயே வேதம் குறிப்பிடுகின்றது.

"ஆழி மழைக்கண்ணு! ஒன்று நீ கை கரவேல்
... ...
வாழ உலகினில் பெய்திடாய்!" (திருப்பாவை–4)

"தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
... ...
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி வாங்கக்
குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து" (திருப்பாவை–3)

என்னும் ஆண்டாளுடைய பாசுரங்களில் இம்மந்திரத்தின் உட்கருத்து நன்கு பிரதிபலிப்பதைக் காணலாம்.

பிருகுகோத்திரத்தில் தோன்றிய "ப்ரயோகர்" என்னும் ஒரு முனிவர், அக்கினி பூஜைக்காக இன்றியமையாத பொருள்கள் தன்னிடம் இல்லாமையைக் கூறிக்குறைப்பட்டுக்கொள்கிறார் ;—

"नहि मे अस्त्यघ्न्या न स्वधितिर्वनन्वति । अथैतादृग्भरामि ते ॥
(ருக்வேதம் 8-102-19)

என்பது அவருடைய வார்த்தை. "ஓ அக்கினிதேவனே! என்னிடம் பசு இல்லை. (பால், தயிர், நெய், முதலியவற்றால் உன்னை ஆராதிக்கும் சக்தியற்றவனென்ற வாறு) அக்னியில் ஜ்வாலைகளை எழுப்புவதற்கான ஸமித்துக்களை வெட்டுவதற்கான கத்தியும் என்னிடம் இல்லை. ஆயினும் இவற்றையெல்லாம் ஓ அக்கினி தேவனே! உனக்காகவே தான் நான் பரிக்கிறேன்" என்பது இதன் கருத்து. "என்னிடம் பசு இல்லை என்னுமிடத்தில், "என்னிடம் அக்நியா இல்லை" என்னும் சொல் சகஜமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

ருக்வேதம் 10வது மண்டலத்தில் 87வது ஸூக்தம் அரக்கர்களால் வரும் பலவகையான துன்பங்களை எடுத்துக்கூறி அவர்களைக் கொல்லுமாறு அக்நி தேவனை வேண்டிக்கொள்கின்றது. அதில்:—

"यो अघ्न्याया भरति क्षीरमग्ने! तेषां शीर्षाणि हरसापि वृश्च"
(ருக்வேதம் 10–87–16)

என்னும் மந்திரம் உள்ளது. "எந்த அரக்கன் அக்நியாவின் பாலைத்திருட்டுத்தனமாகக் கறந்து செல்கின்றானோ, இப்படிப்பட்ட அரக்கர்களுடைய தலைகளை உனது தேஜஸ்ஸினால் வெட்டிவிடு" என்பது இதன் கருத்து. மாடுகள் மேய்ச்சலுக்காகப் போகும்போது அவற்றின் பாலைத்திருட்டுத்தனமாகக் கறந்து கொண்டு போய்விடுமவர்களைக் கொல்லுமாறு வேண்டிக்கொள்ளும்போது "அக்நியா" என்னும் பெயர் சகஜமாக உபயோகிக்கப்பட்டுள்ளது.

"सूयवसाद्भगवती हि भूया अथो वयं भगवन्तः स्याम ।
अद्धितृणमघ्न्ये! विश्वदानीं पिब शुद्धमुदकमाचरन्ती ॥"
(ருக்வே. 1-164-40)

“ஏ அக்ஞியே! (கொல்லத்தகாத பசுவே!) நீ சுவைமிக்க புல்லைத்தின்பாயாக. அதனால் பால் நிறையப் பெறுவாய். பிறகு நாங்களும் செல்வவந்தர்களாவோம். நீ எக்காலமும் உன்னிஷ்டம்போல் திரிந்துகொண்டு வேண்டியவளவு புற்களைத் தின்னவேண்டும். தூய்மையான நீரையும் குடிக்கவேண்டும்.” என்பது ஷை மந்திரத்தின் கருத்து

இங்கும் “அக்ஞியா” என்னும் சொல் சகஜமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. “கொல்லத்தகாதது” என்னும் பெயருக்கேற்ப ஒருவன் பசுவை அடித்துக் கொல்லாமலிருந்து விடுவது மட்டும் தனது கடமை என்று நினைத்து அத்துடன் திருப்தியடைந்துவிடக்கூடாது. பசுவின் பசியாறுவதற்குச் சுவைமிக்க புல், தாகத்திற்குத் தூய நன்னீர், இவற்றையளித்து அதை உபசரிக்கவேண்டும். இதற்கெல்லாம் மேலாக, அதனிஷ்டம்போல் அதை ஸஞ்சரிக்குமாறு அனுமதிக்க வேண்டும். ஜெயிலுக்குள் விலங்கிடப்பட்டிருக்கும் குற்றவாளிக்கு உணவளிக்கப் படுவதுபோல், மானிடர் வாழும் அழகிய மாளிகைகளில் ஒரு சிறு மூலையில் உள்ள கொட்டகையில் நாள்முழுதும் அசையவொட்டாமல் கட்டிப்போட்டு, விதவிதமான உணவுகளை மட்டும் அளிப்பது அதற்கிழைக்கப்படும் கொடிய அநீதியேயாகும். “தங்கச் சங்கிலியால் விலங்கிட்டாலும் விலங்கு விலங்குதானே” என்கிறார் ஸ்ரீ வேதாந்ததேசிகர்:—

“कस्मै स्वदेत सुखसञ्चरणोद्यताय कारागृहे कनकशृङ्खलयापि बंधः ?”
வரதராஜபஞ்சாசத் 29.)

இக்கருத்துக்கள் ஷை மந்திரத்தில் நன்கு பதிந்திருப்பதைக் காணலாம்.

காளிதாஸ மகாகவி தனது உலகப் பிரசித்தமான ரகுவம்ச மகா காவியத்தில் இரண்டாம் ஸர்க்கத்தில், வஸிஷ்ட மகரிஷியின் பசுவை திலீப மஹாராஜன் பூஜித்த விதத்தைக் கூறுமுகத்தால் ஷை வேத வாக்கியத்தின் கருத்தை நன்ருக விளக்கிக் கூறுகின்ருர்.

“आस्वादवद्भिः कवलैस्तृणानां कण्डूयनैर्दंशनिवारणैश्च ।
अव्याहतैः स्वैरगतैश्च तस्याः सम्राट् समाराधनतत्परोऽभूत् ॥”
(ரகுவம்சம் 2-5)

கடல்சூழ்ந்த இம் மண்ணுலகத்தில் தனிக்கோல் செலுத்தும் பேராற்றல் படைத்த அரசர்கோமான் திலீபச் சக்கரவர்த்தி, தனது பட்டத்து ராணியையும் கூடவே அழைத்துக்கொண்டு மக்கட்பேறு பெறுவதற்காக வசிஷ்ட முனிவரின் ஆக்ஞைக் கிணங்க அவரது பசுவைக் காட்டில் திரிந்து மேய்த்துவந்தான், அந்தப் பசு உள்ளங்குளிர்ந்து தனக்குப் புத்திரஸந்தானம் அருளவேண்டுமென்பதற்காக.

“சுவைமிக்க புற்கவளங்களாலும், தினவுபோகச் சொரிந்து கொடுப்பதனாலும், ஈ முதலியவை கடிக்காமல் ஓட்டுவதனாலும், தடையின்றிக்கே

தன்னிஷ்டப்போல் சஞ்சரிக்க விடுவதனாலும் சக்ரவர்த்தியான திலீபன் அந்தப் பசுவை மகிழ்விப்பதிலேயே ஊன்றியிருந்தான்"

என்பது ஷை சுலோகத்தின் கருத்து. முன்பு காட்டப்பட்ட ருக்வேத மந்திரத்திலும், காளிதாஸருடைய இந்த சுலோகத்திலும் "தன்னிஷ்டம்போல் தடையின்றி சஞ்சரித்தல்" பசுமாட்டிற்கு வேண்டிய உபசாரங்களுள் இன்றியமையாததாகக் கருதப்பட்டு முடிவில் கூறப்பட்டுள்ளமை காண்க.

தற்காலத்து மனிதன் என்ன செய்கின்றான்? நாடெங்குமுள்ள மரங்களை வெட்டி விறகாக எரித்துப் பறவை இனங்களை இடமின்றித் தவிக்க விடுகின்றான். ஊரிலுள்ள மாட்டு பேய்ச்சல் புறம்போக்குத் தரிசு நிலங்களையும் அண்மையிலுள்ள காடுகளையும் கைப்பற்றிக்கொண்டு வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்தல், உணவுப்பொருள்கள் பயிரிடுதல் செய்து, கால்நடைகளைப் படாதபாடு படுத்துகின்றான். இதெல்லாம் பசுக்களைத் தெய்வமாகக் கொண்டாடும் இனத்தவருடைய உபசாரங்கள். 'மிகவும் உயர்ந்த பிராணியாகிய பசுவைக் கொன்று தின்பதுதான் கடமை" என்றெண்ணும் இனத்தவரும் நம் புனிதமான பாரத நாட்டில் வந்து சேர்ந்து, ஆங்காங்கு அதற்கெனத் தனி இடமே ஒன்று ஏற்படுத்திக்கொண்டு, தங்கள் "கடமை"யைக் குறைவற நடத்தி வருகின்றனர். இப்பட்டோ? ஷை மக்கள் பொதுவாக ஒன்றுகூடுமிடங்களில் அனைவரும் கூடிக்கொண்டு கேட்கின்றனர். "பசுவின் பால் அதன் மாமிசத்தினின்றுதான் தோன்றுகிறது. அதைப்பருக இணங்குபவர் அதன் மாமிசத்தைமட்டும் ஏன் உண்ணக்கூடாதென்று தடுக்கின்றனர்? இதெல்லாம் குருட்டு நம்பிக்கையேயல்லவா?" என்கின்றனர். மனைவி சகோதரி இருவருடைய உடம்பிலும் பெண்மையின் அமைப்பு ஒரேவிதமாக இருக்க, அவர்களுள் வாசியென்ன? என்ற கேள்வியும் இதுவும் ஒன்றேயாம். இதற்கெல்லாம் மேலாக ஒரு பிரம்மாஸ்திரம் தற்கால மனிதனிடம் இருக்கின்றது. "அதெல்லாம் அந்தக்காலத்துப் பேச்சுக்கள்: சந்திரனைத் தாவிப்பிடிக்கும் இந்தக்காலததில் அதையெல்லாம் உதறித் தள்ளுங்கள்" என்கின்றான். "அந்தக்காலத்துக்கும், இந்தக் காலத்துக்கும் எந்தக்காலத்துக்கும் எல்லாவுலகினருக்கும் நிலைநின்ற நன்மையையே நம் முன்னோர்கள் உபதேசித்துள்ளனர்" என்னும் மறக்கமுடியாத உண்மையை அந்தோ! மதிமயங்கிய தற்கால மனிதன் ஏற்க மறுப்பது கொடிது! கொடிது!!

பாகவத மகாபுராணத்தில் முதல் ஸ்கந்தம் பதினேழாம் அத்தியாயத்தில்; பரீக்ஷித்து மஹாராஜனின் அரசாட்சியில் கிழக்கு ஸரஸ்வதி நதியின் கரையில், ஒருவன் அரசவேஷத்துடன் தோன்றி ஒரு பசுவையும் எருதையும் தடியால் அடித்துச் சித்திரவதை செய்துகொண்டிருந்ததாகவும், அதைக்கண்டு கடுஞ்சினங்கொண்ட அரசன் வாளைக்கையால் எடுத்து அவனை வெட்டப்போனதாகவும், அம்மனிதன், "தானே கலிபுருஷனென்றும் நாடெங்கும் செங்கோல் ஆட்சி

நடைபெறுவதால் தனக்கு எங்கும் தங்க இடமே கிடைப்பதில்லையென்றும் துவாபர யுகம் முடிந்து கலியுகம் தொடங்கிவிட்டதால் எப்படியும் பூமியில்தான் இடம் பெற்றாகவேண்டுமென்றும் தனக்காகச் சில இடங்களையாவது அனுமதிக்க வேண்டு" மென்றும் கெஞ்சிக்கேட்க, பரீக்ஷித்து மகாராஜனும் அதற்கிணங்கி, சூதாட்டம், கள்குடி, விபசாரம், கசாப்புக்கடை இந்த நான்கு வகையான அதர்மங்கள் நடக்குமிடங்களில் வஸிக்குமாறு கலிபுருஷனுக்கு இடமளித்ததாகவும் ஒரு கதை காணப்படுகின்றது. பசுவதை நாட்டில் முதன்முதலாகத் தோன்றும்போது மற்ற நால்வகை அதர்மங்களும் தொடர்ந்து தோன்றி அதை வளர்த்தன என்பது இதனின்று அறியப்படுகின்றது. கி. பி. 1030-ம் ஆண்டில் ஆல்பெருனி (Abu Raihan Alberuni) என்னும் ஒருவர் எழுதிய *நூலில்;

"மிகுந்த மதப்பற்றுள்ளவர்களும் உறுதியான கொள்கையுள்ளவர்களும், தங்களது உயர்ந்த கொள்கைகளுக்காகப் பெருமைப்படுகின்றவர்களுமான பாரத நாட்டு மக்கள் மீது மேற்கிலிருந்து இந்நாட்டில் புகுந்தவர்களாகிய நாம் பெரும் அநீதியிழைத்துவிட்டோம். முகமத் எல்காஸிம் என்பவர், மூல்தானில் இருந்த புனிதமான சூரியன் கோவிலுக்குள்ளிருந்த புகழ்பெற்ற சூரிய விக்கிரகத்தின் கழுத்தில் பசுவின் மாமிசத்துண்டைக்கட்டித் தானே நேரில் மாலையாகத் தொங்க விட்டார். இதுபோன்ற செயல்கள் பலவற்றாலும் மிகவும் அருவருப்பும் துவேஷமும் அடைந்த சிறந்த அறிவுபடைத்த பல்லாயிரக்கணக்கான பாரத நாட்டு மக்கள் பலரும் நமக்கு எட்டாதவாறு உள்நாட்டில் தொலைதூரத்தில் ஓடி விட்டனர். அதனால்தான் அறிவாளிகள் யாருமே இல்லாத வறண்ட பாரத நாட்டின் பகுதியையே நாம் பெற்றோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சக்கரவர்த்தியான திலீபன் மாடுமேய்த்த விதத்தைக் காளிதாஸர் உள்ளபடியே கூறுகின்றார்:—

"स्थितः स्थितामुच्चलितः प्रयातां निषेदुषीमासनबंधधीरः ।
जलाभिलाषी जलमाददानां छायेव तां भूपतिरन्वगच्छत् ॥"

(ரகுவம்சம் 2-6)

"அது நிற்கும்போது இவனும் நிற்பான். அது நடந்தால் இவனும் நடப்பான். அது கிடந்தால் இவனும் வீற்றிருப்பான். அது நீர் அருந்தும்போதே இவனும் விடாய் தீர்த்துக்கொள்வான். பல சொல்லியென்? அதன் நிழல்போல் அரசன் அதைப் பின்தொடர்ந்து சென்றான்" என்பது ஷை சுலோகத்தின் கருத்து.

ஒரு பசுவினிடம் அவ்வரசன் நடந்து கொண்டவிதம், இறைவனிடம் அடியார்கள், கணவனிடம் உத்தமியான பதிவிரதை, ஆசானிடம் அடக்கமுள்ள

* Alberunis India. English translation by Sachan, London.

மாணவன் முதலிய எல்லா வகையினருக்கும் ஈடு இணையற்ற எடுத்துக்காட்டாக இன்றும் திகழ்கின்றது.

பசுவின் இயல்பைப் பெருமையுடன் இரு மந்திரங்கள் வருணிக்கின்றன.

“हिङ्कृण्वती वसुपत्नी वसूनां वत्समिच्छन्ती मनसाभ्यागात् ।
दुहामश्विभ्यां पयो अघ्न्येयं सा वर्धतां महते सौभगाय ॥”

(ருக்வே. 1-164-27)

“பால் தயிர் முதலிய செல்வங்களையெல்லாம் ஏராளமாகக் கொடுத்து காப்பாற்றுவதும், தன் மனத்தில் கன்றுக்குட்டியை விரும்பி “ஹிம்” என்று கத்துவதுமான இந்த அக்நியா இதோ வந்து விட்டது. அச்விநி தேவர்களுக்கு வேண்டிய பாலை இது கறக்கட்டும். (நமது) பெரும் செல்வத்திற்காக இது நன்றாக வளரட்டும்” என்பது கருத்து.

“गौरमीमेदनु वत्सं मिषन्तं मूर्धानं हिङ्ङकृणोन्मातवा उ ।
सृक्काणं घर्ममभिवावशाना मिमाति मायुं पयते पयोभिः ॥”

(ருக்வே. 1-164-28)

“கண்ணை மூடிக்கொண்டிருக்கும் கன்றுக்குட்டியை அணுகித்தாய்ப்பசு கத்துகின்றது. கன்றின் உச்சந்தலையை நாவினால் நக்கிச் சுத்தம் செய்வதற்காக ‘ஹிம்’ என்கிறது. இரண்டு கடவாய்களிலும் நுரைததும்பப் பாலைப்பருகிச் சுரப்பை வளர்க்கும் கன்றை நோக்கி அடங்காக் காதலுடன் சப்திக்கின்றது. அளவில்லாமல் பாலைப் பெருக்குகின்றது” என்பது கருத்து.

“शुचिघृतं न तप्तमघ्न्यायाः स्पार्हा देवस्य ... ..”

(ருக்வே. 4-1-6)

என்னும் மந்திரம், “காய்ச்சப்பட்ட (அக்நியாவின்) பசுவின் பால் ஆரோக்கியத்திற்குச் சிறந்ததும் விரும்பப்படுவதுமாகும்” என்கின்றது.

பசுவின் பெருமைகளை எடுத்துக்கூறி, அதைக் கொல்லாதீர்கள் என்று ஒரு மந்திரம் வேண்டிக் கொள்கின்றது.

“माता रुद्राणां दुहिता वसूनां स्वसाऽऽदित्यानाममृतस्य नाभिः ।
प्रनु वोचं चिकितुषे जनाय मा गामनागामदितिं वधिष्ट ॥”

(ருக்வே. 8-101-15)

“இந்தப் பசு ருத்திரர்களுக்கெல்லாம் தாய். வஸுக்களின் பெண். ஆதித்தியர்களின் தங்கை. அமுதத்தின் இருப்பிடம். அறிவுள்ளவனுக்குச் சொல்லு

கின்றேன், "குற்றமற்றதும் பெருந்தன்மையுள்ளதுமான பசுவைக் கொல்லாதீர்கள்" என்பது கருத்து.

"वचोविदं वाचमुदीरयन्तीं विश्वाभिर्धीभिरुपतिष्ठमानाम् ।
देवीं देवेभ्यः पर्येयुषीं गां आमाऽवृक्तमर्त्योदभ्रचेताः ॥"

(ருக்வே. 8-101-16)

"நமக்குப்பேசும் திறமையையளிப்பதும், இனிமையாக சப்திப்பதும், எல்லா விதமான வாக்குகளாலும் புகழப்பெற்றதும், தேவர்களை ஆராதிப்பதற்காக நம்மிடம் வந்துள்ளதுமான பசுவை, அற்ப அறிவு படைத்த மனிதன் கைவிடுகின்றான்" என்பது கருத்து.

நம்நாட்டில் வணங்கப்படும் முக்கியமான தெய்வங்களெல்லாம் பசுக்களின் பின் செல்பவைகளாக இருக்கின்றன.

"सोऽब्रवीद्वरं वृणा अहमेव पशूनामधिपतिरसानीति"

(தைத். ஸம். 6-2-3)

என்று, ருத்திரன் பசுக்களைக்காக்கும் தொழில் தனக்கே இருக்கவேண்டுமென்று தேவர்களிடம் வரம் கேட்டுப் பெற்றுக்கொண்டான். பசுபதி என்பதுபோல் "அக்ஙியாநாம் பதி:" என்னும் பெயரும் ருத்திரனுக்கு உண்டு.

குன்றெடுத்தாநிரைகாத்த கண்ணன் காலிப் பின்னே வருவதைப் பெரியாழ்வார் பாடிப்பரவசமடைகின்றார்.

"தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும் தண்ணுமை எக்கம்
மத்தளி தாழ்பீலி
குழல்களும் கீதமுமாகி எங்கும் கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு
மழைகொலோ! வருகின்றதென்று சொல்லி மங்கைமார் சாலகவாசல்பற்றி
நுழைவனர் நிற்பனராகி எங்கும் உள்ளம் விட்டுண்மறந்தொழிந்தனரே"

(பெரியாழ். திரு. 3-4-1)

"திவத்திலும் பசு நிரை மேய்ப்பு உவத்தி செங்கனிவா
யெங்களாயர்தேவே!"

(திருவாய்மொழி. 10-3-10)

என்னும் பாசுரத்தில் நம்மாழ்வார், "வைகுந்தத்திலும்கூட உனக்குப் பசு மேய்ப்பதே இனிதாயிருப்பதே" என்று கண்ணனைப் புகழ்கின்றார். தெய்வத் திருமறையாகிய திருக்குறளில் "கொல்லாமை" என்றே ஒரு அதிகாரம் இடம் பெற்றுளது.

நம் நாட்டு மக்கள் இவற்றையெல்லாம் நன்குணரவேண்டும். விரிவைத்

தவிர்க்கவேண்டி இது சம்பந்தமான பல விஷயங்களும் சொல்லாது விடப்பட்டன. சில கருத்துக்களைத் தருகின்றோம்.

(1) பசுக்களைப் பூஜிக்கும் தொன்மையான நம்நாட்டுப் பண்பை மக்கள் அனைவரும் ஒருமித்து வளர்க்கவேண்டும்.

(2) பாலுக்காகவே பசுவைப்பேணுவது என்னும் எண்ணம் தவறு. அந்த இனமே பூஜிக்கத்தக்கது. அதனால் பால் தரும் பசுக்களைப்போல் இருமடங்கு சிரத்தையுடன் பால்மாறிப்போன பசுக்களைக் காப்பாற்றவேண்டும். எக்காரணத்தாலும் அவற்றைக் கசாப்புக்கடைக்கு விற்கக்கூடாது.

(3) அவ்வாறு காப்பாற்றும் சக்தியற்றவர்கள் கோசாலைக்கு ஓட்டிவிட வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் செல்வந்தர்கள் தாமாக முன்வந்து, கிழப்பசுக்களைக் காக்க கோசாலைகளைக்கட்டித் தந்து உதவவேண்டும்.

(4) பசுவதை சட்டபூர்வகமாகக் குற்றமாக்கப்படவேண்டும். நம்நாட்டுப் பழைய சாஸ்திரங்களில் இவ்வாறே உள்ளது. நாட்டின் எந்தப்பகுதியிலும் பசுவதை அனுமதிக்கப்படக்கூடாது. இதற்கு நேர்மாறான கொள்கையுடையவர்களையும் தகுந்த பிரசாரத்தின் மூலம் நம்வழிக்குக் கொண்டுவர வேண்டும்.

கிராமங்களில் பழைய அடங்கல்முறைகளைக் கண்டெடுத்து மாட்டு மேய்ச்சல் புறம்போக்குத் தரிசு நிலங்களைக் கண்டுபிடித்து, அவை தற்காலம் யார் வசத்திலிருந்தாலும் கண்டிப்பாய் மீட்கப்பட்டுப் பழைய நிலையிலேயே வைக்கப் படவேண்டும்.

இதுபோன்ற அவசியமான மற்றும்பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். பசு வளர்ப்பது பால் வியாபாரம் செய்பவரோடு முடிந்துவிடுகின்றது இக்காலத்தில். அது நாட்டுமக்கள் ஒவ்வொருவருடையவும் முக்கியமான கடமைகளில் ஒன்றாக எண்ணப்படவேண்டும். இதற்கெல்லாம் இன்றியமையாதது பொது மக்களின் பேராதரவு. தகுந்த பிரசாரத்தின் மூலம் அதை உருவாக்க வேண்டும். இதற்காக ஆங்காங்கு "சங்கங்கள்" ஏற்படவேண்டும். ஏற்கெனவே தோன்றி நடந்துவரும் சங்கங்கள் பலம்பெறச் செய்யவேண்டும். அண்மையில் வரவிருக்கும் பஞ்சாயத்து ஆட்சியில் இவ்விஷயம் முதலிடம் பெறவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை வணங்கி வேண்டிக்கொள்வோம்.

பாலர் கிழவர் பழஞ்சுரத்தோர் புண்ணுளி
சூலையர் மேகத்தோர் தர்ப்பலத்தோர், ஏலுமிவர்
எல்லார்க்கு மாகும் இளைத்தவர்க்குஞ் சாதகமாம்
நல்லாய் பசுவின்பால் நாட்டு.

திருச்சிற்றம்பலம்

திருக்கோவையாரிற் கண்ட திருக்கோயில்கள் 2

(பண்டித வித்துவான் இராம. கோவிந்தசாமி பிள்ளை, தமிழாசிரியர்,
சரசுவதிமால் நூல்நிலையம், தஞ்சாவூர்.)

பாண்டி நாடே பழம்பதியாக்கொண்ட கூடலிறைவனைப்பற்றியும், அந் நாட்டு வழங்குஞ் செந்தமிழ் மொழியின் சிறப்பினைப்பற்றியும், அவற்றினையுள் ளிட்ட பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் செய்திகள்பற்றியும், ஒருவாறு குறிக்கப்பெற்றன. இனி, அப்பாண்டிய நாட்டிற் பதினுன்கு சிவதிருப்பதிகளுள் ஒன்ருயதும், கோவையாரிற் குறிக்கப்பெற்றதுமாகிய கொடுங்குன்றினைப்பற்றி யாய்வோம்.

இக்கொடுங்குன்றமானது இக்காலத்துப் பிரான்மலையெனப் பெயரிட் டழைக்கப் பெறுகின்றது. பாண்டி நாட்டுத் தலங்கள் பதினுன்காவன :—

கொங்கை யேபரங் குன்றமுங் கொடுங்குன்றுங் கொப்பூழ்
அங்க மேதிருச் சுழியலவ் வயிறுகுற் ருலம்
கெங்கை யேடகம் மேனியே பூவணந் திரடோய்
பொங்கர் வேய்வனந் திருமுக மதுரையாம் புரமே.

(பரஞ்சோதி திருவிளையாடல்)

இப்பாட்டிடைக்கண்ட 1. பரங்குன்று, 2. கொடுங்குன்று, 3. திருச்சுழியல், 4. திருக்குற்ருலம், 5. ஏடகம், 6. திருப்பூவணம், 7. திருநெல்வேலி, 8. திரு வாலவாய் ஆக எட்டும். 9. திரு ஆடானை, 10. கானப்பேர் (காளையார் கோயில்) 11. திரு இராமேச்சுரம், 12. திருவாப்பனூர், 13. திருப்புனவாயில், 14. திருப் புத்தூர் ஆக ஆறும் ஆகிய பதினுன்கும், சிவதிருப்பதிகளாகும். திருவிளையாடற் புராணத்தில் கோவையாரிற் குறிக்கப்பெறும் பாண்டிநாட்டுத் தலம் நான்கு குறிக்கப்பெற்றுள. (பாண்டி நாட்டுச் சிவதிருப்பதிகள்)

14. வெண்பா

"கூடல் புனவாயில் குற்றுல மாப்பனூர்
ஏடகநல் வேலி யிராமேசம் – ஆடானை
தென்பால் குன்றஞ் சுழியல் தென்றிருப்புத் தூர்கானை
வன்கொடுங்குன் றம்பூ வணம்" இஃது

இது, பாண்டிநாட்டுத் தலங்கட்குரிய பாவாகும். குன்றெனக் குறிக்கப்பெறுஞ் சிவதிருப்பதிகளாவன. கொடுங்குன்று, செங்குன்று, கழுக்குன்று, திருமுதுகுன்று,

பரங்குன்று என்பனவாம். குறிஞ்சிக் கிழவனாகிய குமரவேள் குன்றமெனவுங் கூறுகின்றனர். கொடுங்குன்று – வளைவான மலை. செங்குன்று – நேரான மலை. இம்மலை கொங்குநாட்டகத்தது பரங்குன்று மேலானமலை, பரம்பொருளாகிய திருமுருகப்பெருமான் தேவேந்திரன் திருமகளாகிய தேவகுஞ்சரியைத் திருமணம் புரிந்துகொண்டருளிய பதியாகும். கொடுங்குன்று – இம்மலையானது சங்கவிலக்கியங்களுள் பறம்புமலையெனச் சிறப்பிக்கப்பெற்றுளது. திருமுறையில் கொடுங்குன்றம் எனப் பாடப்பட்டுள்ளது. இம்மலையினையும் இம்மலையினையுடைய நாட்டையும், பறம்புமலையெனவும், தண்பறம்பு நன்னாடு எனவும் இந்நாடு முந்நூறு ஊர்களையுடையது எனவுங் கூறப்பெற்றுளது. இம்மலையினையாண்டவன் கடையெழுவள்ளல்களுளொருவனாகிய பாரியென்பானுவன். இவனே, சிறுவீ முல்லைக்குத் தேர் கொடுத்தவன். இச்சிறப்பினை

> " சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
> பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரற்
> பறம்பிற் கோமான் பாரியும் "

என்னுஞ் சிறுபாணாற்றுப்படையான் அறியக்கிடக்கின்றது. தன்னுடைய முந்நூறு ஊர்களையும் மற்றைப்பொருள்கள் எல்லாவற்றையும் பரிசிலர்க்கில்லையென்னாதே யீந்தவன். பேராற்றல் உடையோன். இவனைவெல்லக்கருதிய தமிழ்நாட்டு மூவேந்தரும் போரில் வெல்லொணாமையின் வஞ்சித்துக்கொன்றனர். இவன் இறந்தபின்பு இவன் தோழராகிய கபிலர் சென்று இவன் புதல்வியர்தம்மை மணஞ்செய்து கொள்ளும்படி விச்சிக்கோவையும் இளங்கோவேளையும் வேண்டி, அவர்மறுப்ப அப்பெண்களைப் பார்ப்பாருக்கு மணம் புரிவித்தனர். சைவ சமயாசாரியருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனார்

> " மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக்கிவனென்று
> கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை
> பொடிக்கொண்மேனியெம் புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
> அடுக்குமே லமர ருலக மாள்வதற் கியாது மையுற வில்லையே.

என்று பாடிய பாடலில் பாரி வள்ளலைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இவனுடைய மகளிரும் பாரியாகிய தந்தையரைப் புரைய வள்ளன்மை பூண்டிருந்தனர். இவர்கள் பெயர் சங்கவை அங்கவை யென்பதாகும். இவர்களுள் ஒருவர். மழையில்லாத வறட்காலத்தில் இரந்துவந்த ஒருபாண்மகனை யுண்பித்தற்குச் சோறு பெறாமையிற் பொன்னை யுலையிற் பெய்து சோறாக்கிக் கொடுத்தாள். என்று பழமொழி பாட்டொன்றால் தெரியவருகின்றது. அப்பாட்டாவது:

> (1) மாரியொன்றின்றி வறந்திருந்த காலத்துப்
> பாரிமடமகள் பாண்மகற்கு — நீருலையுட்

பொன்றந்து கொண்டு புகாவாக நல்கினுள்
ஒன்றுரு முன்றிலை யில்" என்பதாகும்.

இக்குன்று கபிலர் என்னும் புலவர் பெருமகனுரால் எங்ஙனஞ் சிறப்பிக்கப் பெற்றுளது. என்பதைககுறித்திடுவாம்.

" தடவுவாய்க் கலித்த மாயிசுழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினும் அருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்,
நீரினுமினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே. எனவும்.

" உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலைவெதிரின் நெல்விளையும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க்கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே. எனவும்,

ஈண்டு நின்றோர்க்குந் தோன் றுஞ் சிறுவரை
சென்று நின்றோர்க்குந் தோன்று மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகு முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே எனவும்

ஒருசார் அருவி யார்ப்ப வொருசார்
பாணர் மண்டைநிறையப் பெய்ம்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்
கல்லலைத் தொழுகு மன்னே பல்வேல்
அண்ணல் யானை வேந்தர்க்(கு)
இன்னு னாகிய வினியோன் குன்றே எனவும்

" பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்
பயிலிருஞ் சிலம்பிற் கலைபாய்ந் துகளவும்
கலையுங் கொள்ளா வாகப் பலவுங்
காலமன் றியு மரம்பயம் பகரும்

யாணர் அருஅ வியன்மலை யற்றே
யண்ணல் நெடுவரை எனவும்

வரும் பாடல்களால் இம்மலையானது கோன்நிலை திரிந்து கோடை நீடினும் தானிலை திரியாது நீர் அருவி சொரிவதும், பல்வளம் பழுநியதும் தேன்சொரியும் சிறப்புத் தனக்கேயுடையதும் ஆகிய சிறப்பினை யுடைத்தென்பதறியக்கிடக்கின்றது.

இப்பிரான்மலையாகிய கொடுங்குன்றமானது திருஞானசம்பந்தப்பெருமானால் பாடியருளப்பட்ட பதிகத்தில்

"வானிற்பொலி வெய்தும்மழை மேகங் கிழித்தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற் கொடுங்குன்றம்
ஆனிற் பொலி யைந்தும்மமர்ந் தாடி யுலகேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான் றிருநகரே.

கொடுங்குன்றே யெனக்கூறப்பெற்றுளது. சங்கப்பாடலில் நெடுங்குன்று நெடியவரை, வியன்வரை, எனப்பேசப்பெற்றுளது. கபிலர் பெருமானுக்கும் காலத்தாற் பிற்பட்ட திருஞானசம்பந்தர் செப்பியருளிய திறம் ஆராயற் பாலதன்றே! பாரிவள்ளலை மும்மண்டில மன்னரும் முற்றுகையிட்டுக் கொன்றனர். பாரி யாருக்குந் தீங்கிழைக்காத செம்மையினன். இரவலருக்குப் புரவலராயிருந்த புண்ணியன். இவன்றன்புகழ் எங்கும் பரவியதைக்கண்டு பொறாமை கொண்ட பெருநில மன்னர்கள் சூழ்ந்து பாரியினைக்கொன்ற காரணத்தால் பின்னர்க் கொடுங்குன்றம் என வந்திருக்கலாம் போலும். செய்த செயலோ கொடுஞ்செயல். செய்யப்பட்ட இடம் இம்மலையினைச்சூழ்ந்த நகரேயாகும். ஆகலின் இப்பெயரமைந்துள தென்றலால் இழுக்கொன்றுமின்றெனத் தோன்றுகின்றது.

"மயில்புல்குதண் பெடையோடுட னாடும்வளர்சாரல்
குயிலின்னிசை பாடுங்குளிர் சோலைக் கொடுங்குன்றம்
அயில்வேன்மலி நெடுவெஞ்சுட ரனலேந்திநின் றாடி
எயின்முன்பட வெய்தானவன் மேயவ் வெழினகரே எனவும்

சாரற்கொடுங்குன்றம், சோலைக்கொடுங்குன்றம், அருவிக்கொடுங்குன்றம், மண்டுங்கொடுங்குன்றம், சூழ்தண்கொடுங்குன்றம், ஆடுங்கொடுங்குன்றம், வைகுங்கொடுங்குன்றம், பழநகர், பெருநகர், எழினகர் நெடுநகர், திருநகர், வளநகர் ஆதம் எனக் கூறியுள்ளார். நகர், ஊர் என்னும் பொருளோடு நில்லாது கோயில் என்னும் பொருள் கோடல் தகும். குன்றமானது, கோயிலாகக் குலாவி நிலவுகின்றதென்று குறிக்கப்பெற்ற சிறப்பினை நோக்கல் வேண்டும். இவ்வூரில் எழுந்தருளிய பரமன் பெயர் கொடுங்குன்றீசர் என்பதும், இறைவியின் நாமம் குயிலமுதநாயகி என்பதும் ஆம் என வழங்கிவருகின்றது.

இனித் திருக்கோவையாரிற் கண்ட கொடுங்குன்றினைப்பற்றி யாராய்குவோம்.

"மாற்றே னெனவந்த காலனை யோல மிடவடர்த்த
கோற்றேன் குளிர்தில்லைக் கூத்தன் கொடுங்குன் றினீள் குடுமி
மேற்றேன் விரும்புமுடவனைப்போல மெலியு நெஞ்சே
யாற்றே னரிய வரிவைக்கு நீவைத்த வன்பினுக்கே". என்பது பாட்டு

நின்று நெஞ்சுடைதல் என்னுந் துறையினையுடைத்து, இச்செய்யுள். அஃதாவது வழி அருமை கூறக்கேட்ட தலைமகன், எய்துதற்கரியாளை விரும்பி நீ மெலியாநின்ற இதற்கு யான் ஆற்றேன் எனக்கூறி, தனது இறந்துபாடு தோன்ற நின்று தன் நெஞ்சுடைந்து வருந்தா நிற்றல் என்பதாம். மனம் உளைதல், (மனம் வருந்தல்) என்பது போந்த பொருள். கிட்டற்கருமையால், இப்பாட்டின் பொருள்:— ஒருவரானும் மாற்றப்படேன் என்று வழிபடுவோனாகிய மார்க்கண்டேயருடைய உயிரினைப்பற்ற வந்த இயமனை. அவன் ஓலமிட்டலறும் வண்ணம் அடர்த்த கோற்றேன், குளிர்ந்த தில்லையம்பதிக்கண் உளன் ஆகிய ஆடல் வல்லான். அவனுடைய கொடுங்குன்றினது நீண்ட குடுமியின் மேலுண்டாகிய தேனினை விரும்பு முடவனைப்போல, எய்துதற் கருமையை நினையாது மெலிகின்ற நெஞ்சமே! அரியளாகிய அரிவை (பெண்) யிடத்து நீ உண்டாக்கிய அன்பால் யான் ஆற்றேன் என்பதாம். மாற்றேன்-மாற்றப்படேன் என்பதாம். சுவைமிகுதியுடைமையாற் கோற்றேன் எனக்குறிக்கப்பெற்றுளது நீ வன்கண்மையுடையையாதலின் இவ்வாறு மெலிந்தும் உயிர் வாழ்கின்றாய். யானத் தன்மையேனல்லேன். இறந்துபடுவேன் என்னுங் கருத்தான் மெலியுநெஞ்சே யான் ஆற்றேன் என்றான். மெய்ப்பாடு இளிவரல், பயன் இரவுக்குறி நயப்பித்தல். ஈண்டும் சங்கவிலக்கியங்களில் வந்தவாறே கொடுங்குன்றின் தேனினைப் பற்றிச் சிறப்பிக்கப்பெற்றுள்ளது. "வானிற் பொலிவெய்தும் மழைமேகங் கிழித்தோடிக் கூனற்பிறை சேரும் குளிர் சாரற் கொடுங்குன்றம்", என்னும் பாடலொடு "கொடுங்குன்றின் நீள் குடுமி மேற்றேன்" என்றவடிகளையும் ஒப்பு நோக்கின் மலையுயர்ச்சி குறிக்கப்பெற்றது புலப்படுகின்றது. இறைவனை கோற்றேன் என்று கூறுகின்றார். பட்டினத்தடிகளாரும்.

நானே பிறந்து பயன்படைத்தேன் அயன் நாரணன்எங்
கோனே யெனத் தில்லையம்பலத்தே நின்று கூத்துகந்த
தேனே திருவுள்ளமாகியென் றிமையெல் லாமறுத்துத்
தானே புகுந்தடியேன் மனத்தே வந்து சந்திக்கவே.

எனப்பாடியுள்ளார். மலையிலுள்ள தேன் உடற்பிணி போக்கும். கோற்றேனாகிய தில்லைக்கூத்தன் உயிர்ப்பிணிப் போக்கலின் தேனென்றும். "தேனைத்

தெனக்கினியான், தில்லைச் சிற்றம்பலவன்" என்பது அப்பர் அருள்வாக்கு. (இத்தலமானது மதுரைக்கு வடகிழக்கு 42 மைல் தொலைவிலுள்ளது) முடவன் கொம்பிற்றேனுக்காசைப்பட்டதுபோல் என்பது பழமொழி. இப்பழமொழி யிங்கெடுத்தாளப்பட்டது. கிடைத்தற்கருமை கிட்டாமை பற்றியாகும். இரவுக்குறி யென்னும் பகுதியில் இத்துறை (நின்று நெஞ்சுடைதல்) யமைந்தள தால் அருமையாயிற்று அருமையினால் நெஞ்சு மெலிவுற்றது. நெஞ்சகத்து நிகழ்வது அன்பு. அன்பினை யுண்டாக்கியது நெஞ்சு. நெஞ்சொடு கிளத்தி யாற்றியிருப்பது ஒருவகையான செயல். அன்பால் அரனை யர்ச்சித்தான் அடர்க்க இயமனை வென்றான் இவ்வரலாறு ஈண்டுரைப்பதற்கென்னை காரணம் என எண்ணிப்பார்த்தல் வேண்டும் நெஞ்சே அவன்மாட்டுவைத்த அன்பினால் அல்லலகற்றியரிய அரிவையை அடைதல் கூடும் என்பதுறுதி. யென்றுரைப்பது போலும் எனப் புலனாகின்றது. கூத்தகந்த தேனே யென்பதுதான் கோற்றேன் குளிர்தில்லைக் கூத்தன் எனவாயிற்று. இதுகாறுங் கொடுங்குன்றெனும் கோயில் பற்றி யொருவாறு குறிக்கப்பெற்றது.

இனிக் குற்றாலமென்னுந் திருக்கோயிலைப்பற்றிய பாடல்களைப் பார்ப்போம். திருக்கோவையாரில், 94, 135 எண்ணுள்ள பாடல்களே குற்றாலத்தினைப்பற்றியனவாம். எல்லாம் வல்ல விறைவன் ஆடுகின்றான் அம்பலத்தே. அம்பலத்தரசாகிய அருமருந்து நம் நாட்டில் பஞ்ச சபையில் பஞ்சகிருத்திய பிரமானந்த தாண்டவம் புரிகின்றான். அப்பஞ்ச சபைகளாவன, இரத்தினசபை, கனகசபை, இரசதசபை (வெள்ளியம்பலம்) தாமிரசபை, சித்திரசபை இவைகள் உள்ள திருப்பதிகளாவன. திருவாலங்காடு திருத்தில்லை, திருவாலவாய், திருநெல்வேலி, திருக்குற்றாலம் என்பனவாம். திருக்குற்றாலத்தினைப்பற்றி யொரு புராணம் உண்டு. இதனையியற்றியவர் திரிகூடராசப்பக்கவிராயராவர். குற்றாலக்குறவஞ்சி, குற்றாலமாலை முதலிய பல பிரபந்தங்களுமுள. குற்றாலமும் மலைதானே ஏன் மலையென வழைக்கப்பெற்றில தெனின். குற்றாலம் என்பதே மலையினைக் குறித்தலின் அழைத்திலர்போலும், இப்பதியினைப்பற்றித் திருஞானசம்பந்தர் தேவாரப்பதிகங்கள் அருளியுள்ளார். இத்திருக்குற்றாலத் தலவிருட்சத்திற்கும் தேவாரப்பதிகம் உள்ளது பிறதலங்கட் கில்லாத சிறப்பாகும். தண்டமிழ் அகத்தியருக்குக் கலியாணசுந்தரக்காட்சி கொடுத்தருளிய தலமாகும். "குற்றாலத்துக் குறியாயிருந்தும்" என்பது திருவாசகம் "உற்றார் ஆருளரோ உயிர்கொண்டுபோம் பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்குற்றார் ஆர்உளரோ" என்பது அப்பர் அருள்வாக்கு. இம்மலை உடல்மருந்து உயிர்மருந்து ஆகிய விருமருந்துக்கும் இருப்பிடமாயிலகு கின்றது. என்பது கண்கூடு. திருஞானசம்பந்தர் தாம் பாடிய தலங்களில் உள்ள அம்மையார் திருப்பெயரினையியைத்துப் பாடுவது ஒருபெருமரபு. எடுத்து காட்டாக "அஞ்சொலாளுமைபங்கன் அருளிலே" எனவும், "வாளார்ந்த கண்

மடவாள் மாமலையான்றன் மடந்தை, தோளாகம் பாகமாகப் புல்லினன்" எனவும் "மருவார் குழலிமாதோர் பாகமாய்" எனவும் மயிலாடுதுறை, ஆக்கூர், திருச்செம்பொன்பள்ளி முதலிய திருக்கோயில் தேவாரங்களில் வந்துள்ளன. அஃதேபோல இவ்வூர் (திருக்குற்றாலம்) ப் பதிகத்தில் பாடப்பெறவில்லை. விடுபட்ட தேவாரத்திலிருக்கலாம் போலும். சத்தியறுபானான்கினுள் தலையாயது கூடலம்பதியாகும். தரணிபீடம் என்று சாற்றப்பெறுவதாய சத்திபீட முடையது திருக்குற்றாலம் பாண்டிநாட்டிற் பொதுவாகவே அம்மையார் ஆலயம் அப்பனுடைய திருவாலயத்தின் வலபாகமே யமைந்துளது. சத்திக்காதிக்க முடைய தென்பது புலனாகின்றது. பாண்டி பதினான்கனுள் ஒன்றெனல் முன்னரே குறிக்கப்பெற்றுளது. வரகுணன் வேப்பங்கனிகளைச் சிவலிங்கமாகக் கருதினான். சம்பந்தரோ பலாவித்தினைச் சிவலிங்கமாகக் கண்டனர்போலும். ஆதலின் பலாவிருட்சத்திற்கும் பதிகம் பாடியுள்ளனர்.

குற்றாலப்பதிகம் : "செல்வ மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும் பீனுங் குற்றாலம்
வில்லி னொல்க மும்மதி லெய்து வினைபோக
நல்கு நம்பான் நன்னகர் போலுந் நமரங்காள்" (சம்பந்தர்)

இறைவன் பெயர் குறும்பலாநாதர். இறைவி நாமம் குழல்வாய் மொழியம்மை. திருமாலே குறுகிக் குற்றாலநாதராயினரென்றும் வரலாறுள்ளது. அகத்தியரா லாக்கப்பெற்றதென்றுங்கூறுவர். ஐந்தருவியுடைய குற்றால மலை காட்சிக்கினியது. கருத்துக்குமினியதே. ஆண்டவனுக்குச் சில நாட்களில் வாசனைத்தைலமும் வெந்நீரும் திருமஞ்சனம் செய்யப்பெறுகின்றது.

குற்றாலத்துக்குறும் பலாப் பதிகம்

"தலைவாண் மதியங் கதிர்விரியத் தண்புனலைத் தாங்கித்தேவி
முலைபாகங் காதலித்த மூர்த்தி யிடம்போலும் முதுவேய் சூழ்ந்த
மலைவா யசும்பு பசும்பொன் கொழித்திழியு மல்குசாரல்
குலைவாழைத் தீங்கனியு மாங்கனியுந் தேன்பிலிற்றுற்றுங் குறும்பலாவே"

என்பதாம். இப்பதிகத்திடை, ஆண்டவன் சந்திரசேகரன், கங்காதரன், உமையொருகூறன், எனுநாமம் பூண்டவன் என்பதும் இப்பரமனுறையும் இடம் முக்கனி விளையும் முதிர்வளமுடைத்தென்பதும். பிறவும் குறிக்கப்பெற்றிருக்குங் குறிப்பென்னே !

திருவாசகம் : "உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே.
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. என்பதாம்

திருக்குற்றாலத் திருப்பதியின்கண் விரும்பி வீற்றிருக்குங் கூத்தப்பெருமானே ! உற்றாரையும் ஊரையும் பேரையும் கற்றாரையும் யான் விரும்பிலேன். கற்பனவும் போதுமானவையே கழல்கள் ஒலிக்கின்ற உனது திருவடிக்கே. இளங்கன்றினையுடைய பசுவின் மனம்போலக் கனிந்துருகுவதையே யான் உன்பால் வேண்டுகின்றேன் என்பது பொருளாம்.

பெரிய புராணம் :

" பற்றார்தம் புரங்கண்மலைச் சிலையாற் செற்ற
பரமனார் திருப்புத்தூர் பணிந்துபோற்றி
புற்றாரும் பணிபூண்ட புனிதனார்தம்
பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடிக்
கற்றார்கடொழுதேத்துங் கானப்பேருங்
கைதொழுது தமிழ்பாடிச் சுழியல் போற்றிக்
குற்றாலங் குறும்பலாக் கும்பிட்டேத்திக்
கூற்றுதைத்தார் நெல்வேலிக் குறுகினாரே ".

எனத் திருஞானசம்பந்தர் வரலாற்றிடைக் குறிக்கப்பெறுவது. இப்பாடல்களால் குற்றாலத்தின் பெருமைபொருவாறறிதல் கூடுமன்றோ !

திரிகூடராசப்பகவிராயர் இயற்றிய திநக்குற்றாலத்தலபுராணச் செய்யுட்களிற் சில வருமாறு :—

1. புந்தியுற நினைந்தார்க்கே யருணகிரி தரிசனைக்கே புலியூர் பேறு
நந்துதவழ் திருவாரூர் பிறந்தார்க்கே யிறந்தார்க்கு நல்குங் காசி
எந்தையார் திருவருளாற் பிறந்தார்க்கு மிறந்தார்க்கு
மெதிர்கண்டார்க்குஞ்
சிந்தையுற நினைந்தார்க்கு மழியாத கதிகொடுக்குந் திருக்குற்றாலம்
(தலச்சிறப்பு)

2. நரிகூட வேடனுக்கு நந்தாத பதமளித்தாய்
பரிகூட நரிநடத்தும் பரமனா ரணமூர்த்தி
அரிகூட அயனறியா அண்ணலே யிரங்காயுன்
திரிகூடங் கண்டவர்க்குத் தீராத வினையுண்டோ !

3. ஏண்டவ ரிருவர் சிவசிவ சிவவென் றேத்திட விருவரி லொருவன்
காண்டக வரிய சரணநூ புரங்கள் கலின்கலின் கலினெனக் கலிப்ப
ஆண்டகை யமரா சயசய சயவென் றார்த்திடச் **சித்திரசபைக்கே**
தாண்டவம் பணிவார் தமக்கெலா முத்தி தருந்தகுந் தகுமென நடித்தான்
(திருநடச்சருக்கம்)

இங்ஙனமாகத் திருமுறையிடத்தும், புராணத்திடத்தும் புகழ்ந்துரைக்கப்பட்ட திருக்குற்றாலம். திருக்கோவையாரிற் கூறப்படுவதாவது:

1. எழில்வா யிளவஞ்சி யும்விரும் பும்மற் றிறைகுறையுண்
டழல்வா யவிரொளி யம்பலத் தாடுமஞ் சோதியந்தீங்
குழல்வாய் மொழிமங்கை பங்கன் குற்றாலத்துக் கோலப்பிண்டிப்
பொழில்வாய்த் தடவரை வாயல்ல தில்லையிப் பூந்தழையே. எனவும்

2. வழியு மதுவன்னை யென்னின் மகிழுஞ்வந் தெந்தையுநின்
மொழியின் வழிநிற்குஞ் சுற்றமுன் னேவய மம்பலத்துக்
குழியும்ப ரேத்துமெங் கூத்தன் குற்றாலமுற் றும்மறியக்
கெழியும் மவேபணைத் தோள்பல வென்னோ கிளக்கின்றதே.

எனவும் வரும் செய்யுட்களிற் காணப்பெறுவதாகும்.

எழில்வாய் இளஞ்சியும் விரும்பும் என்னுந்தலைப்பினையுடைய இப்பாட்டு. சேட்படை யென்னுங்கிளவியின் படைத்து மொழியான் மறுத்தல் என்னுந் துறையாகும். சேட்படையாவது சேண்–படுத்தல் தலைமகனைக் குறைநயப்பித்து தன்னிழைய கூட்டங் கூட்டலுறுந் தோழியானவள், தலைமகளுடைய பெருமையும் தன்னுடைய முயற்சியருமையும் தோன்றுதல் காரணமாகவும்; இத்துணையருமை யுடையாள். இனி நமக்கெய்துதற் கருமையுடையாளென இதுவே புணர்ச்சியாக நீட்டியாது விரைய வரைந்து கோடல் காரணமாகவும் தலைமகனுக்கியைய மறுத்துக்கூறுநிற்றல்

படைத்து மொழியான் மறுத்தல் (என்பது) நினைவு அறிந்தல்லது ஏலேம் என்றது மறுத்துக் கூறியவாறன்று. நினைவறிந்தால் ஏற்பேம் என்றவாறும் என உட்கொண்டு நிற்ப, சிறிது புடைபெயர்ந்து அவள் நினைவு அறிந்தாளாகச்சென்று இத்தழையயானேயன்றி அவளும் விரும்பும். ஆயினும் இது குற்றாலத்துத் தழை யாதலான், இத்தழை இவர்க்கு வந்தவாறு என்னோவென்று ஆராயப்படும் ஆதலான் இத்தழை யெமக்காகாதென்று மறுத்துக்கூறுநிற்றல்.

" அருந்தழை மேன்மேற் பெருந்தகை கொணரப்
படைத்துமொழி கிளவியிற் றடுத்தவண் மொழிந்தது ".

ஒருவரை யொருவர் பார்க்கும்போது, உரையாடற்கியைபாக கையுறையோடு சேறல் பண்டையர் மரபு. ஈண்டு விழைதக் கனவாய கிடைத்தற்கரிய தழைகளை மேலும் மேலும் ஆடவரிற் சிறந்த தலைவன் கொண்டு வந்து குவித்தலைப்புரிய தோழியானவள் தன்னுனிசுழ்ந்த கூட்டம் வெளிப்படின் ஐயுறுவர் கொல் என்றெண்ணி, தானே சிலவற்றினைக் கற்பித்துக்கொண்டு உரையாடி மறுத்துக் கூறியது என்பதாம்.

(எழில்வாய் இளவஞ்சியும்) என்ற பாட்டின் பொருள் வருமாறு தோழியானவள் தலைவனைப் பார்த்து, நின்பாற்றழை கோடற்கு யானேயன்றி எழில் வாய்த்த இளைய வஞ்சியையொப்பாளும், (தலைவியும்) விரும்புவள். **ஆயினுஞ் சிறிது குறையுண்டு.** அழலிடத்துளதாகிய விளங்கும் ஒளியாயுள்ளான், அம்பலத்தின்கண் ஆடும் அழகிய சோதி அழகிய இனிய குழலோசை போலும், மொழியினையுடைய மங்கையது கூற்றையுடையான் (பகுதியினை) **அவனது குற்றாலத்தின்கண்** உளதாகிய அழகினையுடைய அசோகப்பொழில் வாய்த்த பெரிய தாள்வரையிடத்தல்லது. வேறோரிடத்து இப்பூந்தழை இல்லை. அதனால் இத்தழை இவர்க்கு எவ்வாறு வந்ததென்று ஆராயப்படும் ஆதலான் இவை கொள்ளேம் என்பதாம்.

இத்திருக்கோவையார் செய்யுளில், குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தன்றன் பெருந்தேவி குழல்வாய் மொழியம்மை யென்பது குறிக்கப்பெற்றிருப்பது போற்றற் குரித்தாம். பங்கன் என்றமையின் (பாட்டுடைத்தலைவனை) நீயும் இத்தலைவி பங்கனாகவேண்டுமென்னும் உட்கிடக்கையும் புலனாகின்றது. பிண்டி, அசோகம், சோகந்தணிப்பது அசோகம் ஆகலின் அசோகந்தழை கொண்டு வந்தனன் போலும். இம்மரம் (அசோகம்) இன்னதென்றறிவதற்கின்று ஒருசிலர் நெட்டிலிங்கையென்னு மரத்தினையே சுட்டுகின்றனர் அஃதெவ்வாறாயினுமாகுக.

2. "வழியுமதுவன்னை யென்னின் மகிழும் வந்தெந்தையுநின்
மொழியின் வழிநிற்குஞ் சுற்றமுன் னேவய மம்பலத்துக்
குழியும்ப ரேத்துமெம் கூத்தன்குற் றாலமுற் றும்மறியக்
கெழியும்ம வேபணைத் தோள்பல வென்னோ கிளக்கின்றதே".

இப்பாட்டு பகற்குறிக்கண் எதிர்கோள் கூறி வரைவுகடாதல் என்னுந் துறையாகும். பகற்குறியென்பது தலைமகளைத் தழையேற்பித்த தோழி தலைமகனுடன் அவளைப் பகற்குறிக்கட்டலைப் பெய்வியா நிற்றல். இக்கிளவி முப்பத்திரண்டு துறைகளையுடைத்து அவற்றுள் எதிர்கோள் கூறி வரைவு கடாதல் இருபதாவது துறையாகும். தமர் நினைவு உரைத்து வரைவுகடாயதோழி (மணம் புரிந்து கோடல் வேண்டுமென்ற தோழி) தலைவனை நோக்கி நீ வரைவொடுவரின், அன்னையும் ஐயன்மாரும் அயலவரும் நின் வரவு எதிர்கொள்ளா நிற்பர். இனிப் பல நினையாது பலருமறிய விரைவொடு வருவாயாகவென எதிர்கோள் கூறி வரைவு கடாவா நிற்றல்.

வழியுமதுவன்னை என்னும் பாட்டின் பொருள் வருமாறு:— தோழியானவன் தலைவனைப் பார்த்து, தலைவியாகிய இவளை நீ யெய்துதற்கு முறைமையும் வரைவு வேண்டுதலே இவள் நலத்திற்குத் தக்கானோர் கணவனை வேண்டுவாளாகலின், நீ வரைவு வேண்டுமிடத்து அன்னை என்னைப்போல

மகிழ்வாள். உலகியலான் மறுத்தகன்று நின்றாளாயினும் தகுதி நோக்கி வந்து எந்தையும் நின்மொழியினைக் கடவாது அதன்வழியே நிற்பான் இவளோடு நின்னிடை நிகழ்ந்தது குறிப்பான் அறிந்தது ஆகலின், நீ வரைவு வேண்டுவதன் முன்னே சுற்றத்தினரும் நின்வசமாக இருப்பர். மேலும் மேலும் பலவற்றினைச் சொல்லுகின்றதென்? திரண்டு உம்பரானேத்தப்படும் அம்பலத்தின்கண் உளனாகிய எம்முடைய கூத்தனது, குற்றாலம் முழுதும் அறியப் (குற்றால நகரின்கண் உள்ளாரனைவரும்) பொருந்திய உம்மனவே (உம்முடையனவே) பணைத் தோள்கள் ஐயுறவேண்டா என்பதாம். மலையாகிய குறிஞ்சி நிலத்திடைக் கூட்டமும் (புணர்ச்சியும்) அதன் நிமித்தமும் உரிப்பொருள் நிகழும் எனல் மரபு. அந்நிகழ்ச்சிக்குப் பின் மகிழ்ச்சிக்குரிய மணவினை நிகழல் வேண்டும். இதுவே களவின் வழிவந்த கற்பாக நிகழும். இவ்விரண்டு கட்டளைக்கலித்துறையினாலும் குற்றால நகரின் திருக்கோயில் கொண்டிலகும் பிரான் அம்பலத்தாடியே யென்பதும் இறைவியின் நாமம் குழல்வாய் மொழியம்மை யென்பது அன்பு அருள்வடி வடிவாகிய அம்மையப்பர் திருவடியொன்றலே குறிக்கோள் என்பதும் இல்வாழ்க்கைக்கணின்றே இறையடி வழுத்தல் ஏற்றமுடைத் தென்பதும் உள்ளுறுத்தப் பெற்றது என்று கோடல் நன்றென்னு புலப்படுகின்றது.

4. பதினொன்கினுளொன்றாய் கோவையாரிற் கண்ட கோயில்கள் நான்கனுள் ஒன்றாய் விளங்கும் திருச்சுழியல் என்னுங் கோயிலைப்பற்றி யொரு சிறிது குறிப்பாம் இத்தலம் மதுரையாகிய கூடலம்பதிக்கு தென்கிழக்கில் 38 கல் தொலைவில் உள்ளது பாண்டிநாடாகிய நங்கைக்குக் கொப்பூழ் எனக் கூறப்பட்டுளது. இத்தலம் சதாநந்தர் பூசித்த தலம். இவ்வூர்க்குப் புராணம் (செய்யுள் வடிவில்) உள்ளது. பார்வதிதேவியார் தம்மைச் சிவபெருமான் திருமணம் புரிந்துகொள்ளுமாறு பூசனை யாற்றிய தலம். "மலைமகளை, விரதயோகநெறிநின்று மணந்தார் சுழியல் வியனகரும்" எனத் திருவிளையாடற் புராணம் செப்பும். இவ்வூரினைப்பற்றிச் சுந்தரர் தேவாரப் பாடல் உண்டு. திருக்கோயில்முன் கவ்வைக்கடல் எனப்பெயர் பெற்ற தீர்த்தக் குளம் உண்டு. அழகிய திருக்கோயிலாக இன்னும் காணப்பெறுகின்றது. இவ்வூர்ப் பரமனாகிய இறைவன் இறைவியின் பெயர்களாவன. திருமேனிநாதர் துணைமாலை நாயகி யென்பதாகும்.

> "கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
> கொவ்வைத்துவர் வாயார்க்குடைந் தாடுஞ் திருச்சுழியல்
> தெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவார்
> அவ்வத்திசை கரசாகுவர் அலரான் பிரியாளே". சுந்தரர் தேவாரம்.

இப்பாடலைத் தினந்தோறும் சிந்தித்து வந்திப்பவர்க்குச் செல்வங் கைகூடும் என்பது கண்கூடு. இதனைச் சுந்தரர் வற்புறுத்தியருளியுள்ளார்கள்,

“ உற்றனமக் குயரும்மதிச் சடையான் புலனைந்தும்
செற்றார்திரு மேனிப்பெரு மானூர் திருச்சுழியல்
பெற்றானினி துறையத்திறம் பாமைத் திருநாமம்
கற்றாரவர் கதியுட்செல்வ ரேத்தும்மது கடனே. (சுந்தரர்)

இப்பாடலில் ஆண்டவனின் திருப்பெயர் திருமேனிநாதர் என்பது குறிப்பிடப் பட்டுள்ளது.

திருக்கோவையார் திருப்பாட்டு வருமாறு ;—

“ அன்புடை நெஞ்சத்திவள் பேதுறவம் பலத்தடியார்
என்பிடை வந்தமிழ் தூறநின் றாடி யிருஞ்சுழியல்
தன்பெடை நையத் தகவழிந் தன்னம் சலஞ்சலத்தின்
வன்பெடை மேற்றுயி லும்வய லூரன் வரம்பிலனே என்பதாம்.

இப்பாட்டு பரத்தையிற் பிரிவில் உழையர் இயல் பழித்தல் என்னுந்துறையாகும். கற்பொழுக்கின்கண் பிரியும் பிரிவில் பரத்தையிற் பிரிவும் ஒன்றாம். பரத்தையிற் பிரிவாவது தலைமகளை (தலைவியை) வரைந்தெய்திய பின்னர். இல்லற வாழ்வு வாழ்கையில் நாடொறும் நற்பால் நுகர்பவன் ஒருவன் இடையே. புளிங்காடியும் நுகர்ந்து அதன் இனிமை யறிந்தாற்போல, அவள் நுகர்ச்சி இனிமை யறிதற் பொருட்டு. புறப்பெண்டிர்மாட்டுப் (பதியிலார்–பொதுமகளிர்) பிரியா நிற்றல். அதுவன்றியும் பண்ணும் பாடலும் ஆடலும் முதலாயின காட்டிப் புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தாற் றானெல்லார்க்குந் தலைவனாகலின் அவர்க்கும் இன்பஞ் செய்யப் பிரியாநிற்றலும் ஆம். அதுவன்றியும் தலைமகளை ஊடலறிவித்தற்குப் பிரிதல் என்றும் ஆம். “ ஊடலில்வழியுப் பின்றாங்காமம் ” என்றும்

“ ஊடுதற் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப்பெறின் ”

எனவும் வரும் குறட்பாட்டுக்களும் ஊடற்பெருமை யுணர்த்தாநிற்கும்.

உழையரிற் பழித்தல் என்பது:—தோழியானவள் தலைமகனை (தலைவனை) இயல்பழித்துக்கூறா நிற்பக்கேட்டு, தன்மாட்டன்புடை நெஞ்சத்தையுடைய இவள் பேதுற. இதற்குப் பரியாமையின் (வருந்தாமையின்) வயலூரன் வரம்பிலன் (முறை) என உழையர் (பக்கத்தவர்) அவனை இயல் (தன்மை) பழித்துக்கூறா நிற்றல்.

அன்புடை நெஞ்சத்து இவள் என்னுமுதற்குறிப்புப்பாட்டின் பொருளாவது:— அடியவர் என்புகள் (எலும்புகள்) எலும்புகள் இடையே அமிழ்தம் வந்தூற அம்பலத்தின்கண் நின்றாடுவானது பெரிய சுழியலின்கண் தன்பெடை வருந்தத் தகுதிகெட்டு. அன்னஞ்சலஞ் சலத்தினது வலிய பெடைமேற் கிடந்துறங்கும். வயலாற் சூழப்பட்ட ஊரையுடையவன். தன் மாட்டன்பையுடைய நெஞ்சத்தை யுடைய இவள் மயங்காநிற்ப இதற்குப்பரியாமையின் தகவிலன் ஆவன் என்பதாம்.

அன்புடை நெஞ்சத்திவள், தலைவி யென்றதனுல் பொருட் பெண்டிராகிய பரத்தையர்தம் அன்பின்மை கூறப்பட்டதாம்.

> " பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
> ஏதிற் பிணந்தழீஇ யற்று "

என்ற குறட்பாக்கருத்தினையும் பார்த்தல் வேண்டும். இருஞ்சுழியல் ஆகிய வயலூரன் என்பது போந்த பொருள். இவ்வூரினைப்பற்றி யீண்டாராய வேண்டியதாவசியமாகின்றது இருஞ்சுழியல் என்பதற்குப் பேராசிரியர் ஒரு திருப்பதி யென்றுரை கூறியிருப்பவும். இதனையுமோராது. பெரிய திருவலஞ்சுழி என்னும் படைவீடு என்றுரைகூறல் பொருந்துமா ?

சுழியல் என்பதற்கும் திருவலஞ்சுழி என்பதற்கும் தொடர்பு சிறிதுமின்று. சுழியல் பாண்டிநாட்டுத் திருப்பதி. திருவலஞ்சுழி சோணுட்டுத்திருப்பதி. வயலூரன் -மருதநிலத்தூரன் என்பது. படைவீடு என்றல் யாது காரணம்பற்றி எனில் விடையின்றாய் முடியும். படைவீடு – பகைமேற்சென்றோர் உறைவிடம் என்பது பொருள். ஆற்றுப்படை – ஆறுபடை வீடு என. முருகனமர் திருக்கோயில்களைக்கூறல் சாலப்பொருத்தமற்றதென மறுத்துரைக்கும் இக் காலத்தில் இங்ஙனம் கூறல் பொருந்துமா? பொருந்தாதன்றோ! இதனைப் பற்றியே தனியாக ஒரு ஆய்வுக்கட்டுரை வரைதல் வேண்டும். மருத நிலத்திடை நிகழ்வது ஊடலும் (புலவியும்) ஊடல் நிமித்தமும் ஆம். பரத்தையிற் பிரிவு காரணமாகத் தலைவிக்கு தலைவன் மாட்டுச் சிறுசண்டை (பிரணயகலகம்) நிகழும், ஊடல் நீக்கற்குரியரால் அது நீக்கப்பெறும். அஃதொருவ மருவியின்புறுவர் என்பது மரபு. அன்னப்பறவை வெண்மையுடைத்து. சங்கும் வெண்மையுடைத்து சங்கும் வளப்பமார்ந்த நீர்வளமுடையவிடத்திற் றோன்றும் திருக்கழுக் குன்றத்துச் சங்கமுண்டாதல் இன்றுங்கண்கூடாகக் காணலாம். இச்சங்கம், இடம்புரி, வலம்புரி, முச்சங்கு (திரிசங்கு) சலஞ்சலம் பாஞ்சசன்னியம் (ஐஞ்சங்கு) எனப் பல்வகைப்பிரிவினையும் ஏற்றத்தாழ்வினையும் உடைத்து சலஞ்சலம், இடம்புரி வலம்புரி முதலிய சங்கினங்கட்கெல்லாம் மேலானது. இஃது தோன்று மிடம் ஏற்றமுடைத்தென்பது புலனுகும் வளப்பமார்ந்தது என்பது. அன்னப் பறவை ஐயறிவுடையது. சலஞ்சலமாகிய சங்கு ஈரறிவுடையது. ஐயறிவுடைய அன்னம் (ஆணன்னம்) ஈரறிவுடைய பெண்ணினத்தைச்சார்ந்த (பெடை) வெண்மையாகிய சலஞ்சலத்தின் வன்மையாகிய கூட்டுடன் கிடந்துறங்கும். என்றதால் அன்னத்தின் மென்மையும் சங்கின் வன்மையும் புலனுகும். வன்மை யுடன் மென்மை கூடல்வழக்கன்று. இன்பமுமாகாது. அஃதேபோல. ஆறறிவுற்ற மக்கட் பகுதியிற்சார்ந்த தலைவன். தக்கவின்ன தகாதனவின்ன வென்று ஒக்க

வுன்னலர் விலங்கினுள் வைத்தெண்ணப்படுவர். ஆகலின் ஐயறிவினையுடைய பரத்தையர் மாட்டுக் கூடியின்புறல் இழிதகவுடைத்தன்றே! அதனாற்றான் இருஞ்சுழியல் வயலூரன் வரம்பிலன் தகவிலன் எனச் சாதிக்கப்பட்டான். தன் பெடைநைய, கிடந்துறங்கும் அன்னம் என்றதனால், தலைமகன் தலைவியின் துன்புறல் காணாதே பரத்தையர்மாட்டுச் செயலற்றுக்கிடத்தலையும் புலப்படுக்கும். "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே யின்பம்" இதனால் காதன்மனையாளும் காதலனும் மாறின்றித் தீதில் ஒரு கருமஞ்செயல்வேண்டு மென வற்புறுத்துவாராயினர் சான்றோர் (காதல் – அன்பு) அம்பலத்து நின்றாடி- என்பது பெயர் ஈண்டு இறைவனையுணர்த்திற்று. இப்பாட்டில் வரம்பு தகுதி என்றவிரு சொற்கள் ஆளப்பட்டுள. மக்களாய்ப் பிறந்தவர் வரம்பும், தகுதியும் உடையவராயிருத்தல் நன்றென்பது வற்புறுத்தப்பெற்றது.

श्रीश्श्रीदा लोकजननी कलशाम्बुधिकन्यका ।
गङ्गातनूजा निधिजा विष्णुवक्षस्स्थलालया ॥ ११ ॥

राघवो जानकीकान्तो रामो रावणसूदनः ।
अग्रजन्मा दाशरथिः साकेतनिलयो हरिः ॥ १२ ॥

लक्ष्मणस्तूर्मिलाकान्तो महेन्द्रद्वेषिसूदनः ।
अनिद्रस्सुन्दरश्शूरो लक्ष्मीवान् लक्ष्मिवर्धनः ॥ १३ ॥

भरतः कैकयीपुत्रः सुमित्रापुत्रसेवितः ।
लवणघ्नो महावीरश्शत्रुघ्नोऽमितविक्रमः ॥ १४ ॥

सौमित्रिस्सुन्दरश्श्रीमान् कुमारो विश्ववल्लभः ।
रामस्य चापे धर्माङ्गश्शातवानन्दभैरवः ॥ १५ ॥

तूणीरस्तस्य शरधिस्सर्वतोमुख इत्यपि ।
हिरण्यकशिपुद्वेषी नृसिंहो विश्वविक्रमः ॥ १६ ॥

उपेन्द्र इन्द्रावरजो वामनो बलिकण्टकः ।
आदित्यवटुकश्च स्यात्त्रिविक्रमपुरुक्रमौ ॥ १७ ॥

द्युपदस्सर्वतोभद्रो रामः परशुभृत्कविः ।
रामस्सङ्कर्षणः पौरो बलदेवो हलायुधः ॥ १८ ॥

बलभद्रः प्रलम्बारिस्तालाङ्को मुसली हली ।
भद्राङ्गो भद्रवलनस्सात्वतस्तु सितासितः ॥ १९ ॥

संवर्तकं हलं तस्य मुसलं तु सुनन्दकम् ।
कृष्णो दामोदरो गोपो दाशार्हो नरकान्तकः ॥ २० ॥

शौनिः कंसरिपुश्शौरिः सारथिस्तस्य दारुकः ।
प्रद्युम्नो मन्मथः कामो रामो मनसिजः स्मरः ॥ २१ ॥

कन्दर्पो दर्पकोऽनङ्गो मीनाङ्को मकरध्वजः ।
शूर्पकारिर्मधुसखः पञ्चेषुर्विषमायुधः ॥ २२ ॥

बन्धुर्वामो जराभीरुः हृच्छयो मधुसारथिः ।
ब्रह्मसूस्त्वनिरुद्धः स्यादृश्यकेतुरुषापतिः ॥ २३ ॥

सुखोदयस्सर्वमुखो गुणीकृतशिलीमुखः ।
तस्य चापेऽथ तूणीरे मधुर्माधव इत्यपि ॥ २४ ॥

अथान्येऽप्यवताराः स्युर्नरनारायणावृषी ।
अश्वो हयशिराश्शेषः कपिलो व्यास इत्यपि ॥ २५ ॥

दत्तात्रेयश्च कल्की च बुद्धश्चेत्येवमादयः ।
कपिलस्तु महाविष्णुः व्याससस्सत्यवतीसुतः ॥ २६ ॥

पराशरात्मजः कृष्णद्वैपायन इतीर्यते ।
अष्टकर्मपरिभ्रष्टः श्रीधनस्सुगतो मुनिः ॥ २७ ॥

मुनीन्द्रो निर्गुरुश्शास्ता बुद्धो विद्यातनूद्भवः ।
गरुडः काश्यपसुतो गरुत्मानुरगाशनः ॥ २८ ॥

सुपर्णितनयस्तार्क्ष्यो वैनतेयो महेन्द्रजित् ।
पन्नगारिर्विष्णुरथो विनायकविहङ्गमौ ॥ २९ ॥

वज्रपक्षः श्वेतमुखः किरीटिस्सर्पकुण्डलः ।
भद्रेश्वरश्चन्द्रमौलिश्श्रीकण्ठः पाण्डुचन्दनः ॥ ३० ॥

गर्गो दक्षाध्वराराति: कामारिः प्रमथाधिपः ।
भीमः परशुहस्तश्च मृगपाणिर्जटाधरः ॥ ३१ ॥

कटाटङ्को जटाटीकः सर्वज्ञो नन्दिवर्धनः ।
चण्डीकान्तो रेरिहाणो जटाक्षाटो महानटः ॥ ३२ ॥

कङ्कटीकः कलामूर्तिः कण्ठेकालः कपालभृत् ।
बहुरूपोऽर्धमकुटो दशबाहुर्दशाव्ययः ॥ ३३ ॥

खट्वांगश्च कपर्दश्च झांडटांडो युगान्तकः ।
आषाढभूतिदमनो रुद्रः स्थाणुरुमापतिः ॥ ३४ ॥

लम्बोदरो हस्तिमुखो द्वैपायनगुहाग्रजौ ।
एकदन्तश्शूर्पकर्णो लेखको लेख्यदन्तकः ॥ ३५ ॥

व्यासशिष्यस्तूपरुद्रो विष्वक्सेनो गणाधिपः ।
कुमारश्शरजः स्कन्दस्तारकारिरुमासुतः ॥ ३६ ॥

महासेनो महातेजा वह्निभूश्शिखिवाहनः ।
देवसेनापतिः कान्तो ब्रह्मगर्भष्षडाननः ॥ ३७ ॥

तस्य शक्तिः सुवेलं स्याद्ध्वजस्तस्य तु खेचरी ।
उमा मेनात्मजा रौद्री रुद्राणी विश्ववल्लभा ॥ ३८ ॥

आर्याऽद्रिजा विश्वमाता मृडानी सर्वमङ्गला ।
गौरी तु गौतमी नन्दा बाभ्रुविभ्रामती शिवा ॥ ३९ ॥

सती च रेवती कृष्णा भवानी नन्दिनी मही ।
नन्दयन्ती कालरात्री महाराली कपालिनी ॥ ४० ॥

एकवर्णा भद्रकाली कराली कैटभी हिमा ।
बर्हिध्वजा शतमखी योगिनी परमेष्ठिनी ॥ ४१ ॥

यमेन्द्रकृष्णमैनाकरामाणां भगिनी स्वसा ।
विन्ध्यमन्दरकान्तारमलयेषु च वासिनी ॥ ४२ ॥

भूरिश्रवाश्चित्ररथस्सुनासीरी युधिष्ठिरः ।
परमन्युर्वज्रपाणिश्शतमन्युर्विभीषणः ॥ ४३ ॥

खदिरो माहिषी दार्वी बिडौजास्सितकुञ्जरः ।
प्रासादो वैजयन्तोऽस्य वैजयन्तो ध्वजोऽपि च ॥ ४४ ॥

धनुस्तस्य तु वाल्मीको वार्षिकं मेखरंजिनी ।
पुलोमजा शचीन्द्राणी पौलोमी जयवाहिनी ॥ ४५ ॥

सर्वयज्ञफला नित्या देवाधिपतिसुन्दरी ।
शतसारं सहस्रारं वज्रं वज्रायुधं पविः ॥ ४६ ॥

अग्निर्वैश्वानरो वह्निर्वीतिहोत्रो धनञ्जयः ।
रोहिताश्वो बृहद्भानुर्दहनो हव्यवाहनः ॥ ४७ ॥

कृपीडयोनिरर्चिष्मान् धूमकेतुर्दुरासदः ।
आश्रयाशो वातसखः कृशानुर्वातसारथिः ॥ ४८ ॥

स्वाहादेवी महाग्नेयी पेचाधीना तु तत्प्रिया ।
तुषाग्निर्मुमुरश्च स्यात्काष्ठाग्निः स्यात्सकन्दकः । ४९ ॥

छागणस्तु करीषाग्निः क्रत्वग्निः स्यादपान्नपात् ।
गार्हपत्यो ग्रहपतिः पवमानश्च पश्चिमे ॥ ५० ॥

शं स्यादाहवनीयश्च पूर्वाग्निर्हव्यवाहनः ।
ब्रह्मौदनाग्निर्भरतः यविष्ठस्सवनाहुतौ ॥ ५१ ॥

महिमा तु विवाहाग्निर्वैश्वदेवाग्निरद्भुतः ।
पाकयज्ञस्तु सुलभः अपसव्यस्तु सूतके ॥ ५२ ॥

धूमस्तरीर्मेघवाही यूपोसौगन्धवासितः ।
झलका तु महाज्वाला प्रवर्गो नीलकोऽपि च ॥ ५३

अङ्गारस्तु प्रशान्तार्चिरिङ्गालः कलिकाग्निवित् ।
वीरचूर्णं तु भसितं निर्गुरुर्भस्म इत्यपि ॥ ५४ ॥

गुरुभस्म महाभस्म वेधार्हं वाद्जीवितम् ।
अग्नीन्द्रियं शातकुम्भं तपनीयं महोदयम् ॥ ५५ ॥

रुक्मं कार्तस्वरं स्वर्णं हिरण्यं जातरङ्गकम् ।
दाक्षायणं श्रीमकुटं शुक्रं चिह्नं महोदरम् ॥ ५६ ॥

गारुडं तारुडं यक्षं रक्षगं नरजीवनम् ।
अग्निशुक्लं लोहवरं किरीटं सर्वमङ्गलम् ॥ ५७ ॥

डाम्बरं वेधजं वेधा वेदार्हं रसवेधजम् ।
निर्दुष्टकं च चामीरं श्रीघनं यक्षपोषिनम् ॥ ५८ ॥

सिद्धवेद्यं महावर्णं पुण्डरीकं तु चन्द्रकम् ।
दुर्वर्णं रजतं वण्डि चन्द्रभीरु यमोदरम् ॥ ५९ ॥

अर्धोदयं सितं कुम्भं तारकं तु रसोदयम् ।
तुषाग्निजं श्वेतचन्द्रं चान्द्रकं रसतारकम् ॥ ६० ॥

ताम्रं शुल्वं मर्कटाख्यं रक्तं व्यष्टं कनीयसम् ।
म्लेच्छं वरिष्ठं म्लेच्छास्यं श्रेष्ठं रिष्टमुदुम्बरम् ॥ ६१ ॥

पित्तलं त्वारकूटं च पीतलोहं घनोदरम् ।
लघुवर्णं द्राविडकं द्राविडीभूषणं तथा ॥ ६२ ॥

नीलिकायां तसरिधिर्निष्ठुरं दारुकण्टकम् ।
गुरुज्येष्ठं सिह्मलं च पञ्चलोहान्यलोहके ॥ ६३ ॥

कांस्यं तु कृत्तिमं नाट्यं प्रभा...मसुराह्वयम् ।
घण्टास्वनं भूरिलोहं रवणं लोहजं मलम् ॥ ६४ ॥

सीसं वङ्गं च योगेष्टं लघुतारं भुजङ्गकम् ।
सर्पं कुम्भीनसं वित्तं मृद्भवं सर्वतोमुखम् ॥ ६५ ॥

अयःकालायसं... शस्त्राख्यमिषमायसम् ।
धीवरं भीमकं लोहं लोहकालदहानि च ॥ ६६ ॥

... ... ।
हासन्तिका हसन्ती स्यात् शीतघ्नं हिमवारणम् ॥ ६७ ॥

चूलिका गृहमेधिः स्यात्पाकाद्यं पूर्ववेदिका ।
कुण्डिका कुम्भिका तस्य महामुख इतीर्यते ॥ ६८ ॥

इष्टका करणिर्मुग्धा स्थूला संवर्तदारुका ।
चूर्णागः स्यात्करीषान्तः कोपिका खरधूपिका ॥ ६९ ॥

सुब्रह्मण्यो नागयन्तः स्फटिका धनुराख्यकः ।
देववेदिर्जीवनदो हुताशार्हो महस्तपः ॥ ७० ॥

शतघ्नी भाण्डिका तु स्यात्कृतघ्नी मेघनादिनी ।
एकघ्नी तु तुपाकिः स्यात्काकनादानुनादिनी ॥ ७१ ॥

शोभाग्निश्च विधूमः स्यात्कालाग्निर्लोहबन्धनः ।
तप्तमुद्रा श्वपदका चूटिका वातिकापि च ॥ ७२ ॥

जाठरस्त्वौदराग्निः स्या ... ... ।
... ... द्राडवो बडवानलः ॥ ७३ ॥

वैणवो वेणुसम्भूतश्शमनो दार्विकः स्मृतः ।
पवित्रं च कराग्निः स्यात्पैतृकः कव्यवाहनः । ७४ ॥

कारुजैंवातृकश्शुष्मा दवो वनहुताशनः ।
यमः कालो दण्डधरः श्राद्धदेवोत्तरोद्यमः ॥ ७५ ॥

समवर्ती शीर्णकण्ठः कृतान्तो यमुनाग्रजः ।
सूर्यपुत्रस्सत्यधर्मस्सर्वज्ञस्सात्विकप्रियः । ७६ ॥

आषाढनिलयो धर्मराजो रागविलोचनः ।
धूमोर्णावल्लभश्शम्भुः कृष्णाङ्गो महिषध्वजः ॥ ७७ ॥

परेतराजश्शमनो धर्मगुप्धर्मवर्धनः ।
लेखकश्चित्रगुप्तः स्यात्काणाची तु विलातिका ॥ ७८ ॥

विचारभूः पैतृवणं ग्रसन्नाली तु पश्चिका ।
नरको नारकोऽपि स्याद्दुर्गतिर्निरयोऽपि च ॥ ७९ ॥

वैतरण्यज्ञसुलभा प्रेतावासाग्निवाहिनी ।
नारका जन्तवः प्रेता याम्या अप्यातिवाहिकाः ॥ ८० ॥

यातना कारणा दुःखमामनस्यं प्रसूतिजम् ।
स्यात्कष्टं कृच्छ्रमामीलं क्लेशं दुःसहमित्यपि ॥ ८१ ॥

रक्षो निशाचरो यातु राक्षसो जाललोहित ।
रात्रिंचरो रात्रिचरः क्रव्यात्क्रव्याद इत्यपि ॥ ८२ ॥

नैकपेयो यातुधानः पुरुषादः प्रवाहिकः ।
नैर्ऋतो हनुषोपि स्याद्विधुरो नीलविग्रहः ॥ ८३ ॥

अभाग्या निर्ऋतिर्ज्येष्ठा त्वलक्ष्मीर्लोहभूषणे ।
दशास्यो विंशतिभुजो रावणस्तु हरन्नतः ॥ ८४ ॥

लङ्केश्वरो विश्वमुखश्चतुराम्नायमन्दिरः ।
चन्द्रहासस्तु खड्गोऽस्य क्रीडाभूस्त्वमरावलिः ॥ ८५ ॥

अशोकवनिकोद्यानं त्रिशिरस्समनि ... पदः ।
इन्द्रजन्मेघुनाथः स्यात्प्रहस्तः स्यादलम्बुसः ॥ ८६ ॥

अतिकायश्चित्रदेहस्सर्वभद्रास्य वल्लभा ।
वरुणश्शीतलो वामो दुन्दुभिस्त्वंभसां पतिः ॥ ८७ ॥

जलवासोंबुकान्तारः पाशी मकरवाहनः ।
तस्य प्रिया तु गौरी स्याद्वासभूमिस्तु शार्वरम् ॥ ८८ ॥

अभ्रो मेघो वारिवाहो जलदो धूमसंभवः ।
जलमुक् पुष्पदः कन्दो बलाहकवलाहकौ ॥ ८९ ॥

तडित्पतिर्महानादधीरः पर्जन्य इत्यपि ।
आकालिका शतावर्ता चञ्चला चपला अपि ॥ ९० ॥

नागरोधी झलाका स्याद्विद्युन्माली महाह्रदा ।
क्षणप्रभा वज्रकला जलदा घनवल्लभा ॥ ९१ ॥

गर्जितं स्तनितं जीर्णं गर्जा गर्जनमित्यपि ।
निर्घोषो घनघातः स्यान्महावात इतीर्यते ॥ ९२ ॥

वर्षो वृष्टिर्वर्षणं च घनाघनमणिर्मणिः ।
वटिका वटिकश्च स्यात्करकः पुंजिकापि च ॥ ९३ ॥

धाराधारस्तु सम्पातस्सारणिर्धोरणीति च ।
पुषस्तुषारो बिंदुश्च ... ... ॥ ९४ ॥

वर्षांकः श्रीफलो बीजो बिन्दुपूरस्तुषारकः ।
गिरेर्निर्गलितं वारि कोलाहल इतीर्यते ॥ ९५ ॥

तत्समूहे झरा तु स्याज्झरीति परिकीर्तितः ।
पयः कीलालममृतं पुष्करं सर्वतोमुखम् ॥ ९६ ॥

महासुखं मेघपुष्पं जीवनं जीवितं शरम् ॥
जीवनीयं शुचिस्सारं शंवरं चाप्यधोमुखम् ॥ ९७ ॥

तरङ्गिणी शैवलिनी तटिनी ह्रादिनी धुनी ।
वाहिनी निम्नगा वाही निम्नोन्नतविचक्षणा ॥ ९८ ॥

சுக்கிர தோஷம் ஐந்தின் குணம்

விரணசுக்கிரன், கருத்த சுக்கிர லக்ஷணங்கள்

அள்ளிலை நடுவேற் கண்ணாய்! சுக்கிரனைந்தின் பேர்கேள்
ஒள்ளிய மணியின் மீதே யுறுவது விரணசுக்கிரன்
தெள்விழிச் சுற்றிற் றோன்றி திளத்திடு முளுந்துபோலும்
உள்ளது கண்டால் நன்று கருத்தசுக் கிரனென் றோதே. (32)

(இ-ள்) கருவிழியில் உண்டாவது விரணசுக்கிரனாகும். உளுந்துப் பிரமாணமுள்ள கொப்புளங்கள் கருவிழியைச் சுற்றிலும் உண்டானால் அது கருத்த சுக்கிரன் என்ற கண் சுக்கிரனாகும்.

விழி முழுங்கி சுக்கிரன்

ஓதிய கருவிழிக்கீழ் வரியிடை யொள்ளிதாக
மோதிய வெள்ளுசீழ்போல் முழியது பொதிந்து மூடும்
வேதனை மிகுதியாக வெரித்திடு மிடியு மாறா
தீதினை விழிமுழுங்கி சுக்கிர னென்னப் பேசே. (33)

(இ-ள்) கருவிழிக்குப் கீழ்பாகம் வெண்மையாகிக் கண்களை மூடித் திறக்க முடியாது. அதிகமான எரிச்சலுண்டாகும். மிகவும் கெடுதலை யுண்டாக்கும். இதற்கு "விழிமுழுங்கி சுக்ரன்" எனப் பெயர்.

வெள்ளைச் சுக்கிர லக்ஷணங்கள்

நடுவிழிப் பக்கத்தின்மேல் நனிபலித் துளிபோலுந்திச்
சுடுமணல் போலக்காந்தித் தோன்றிடு மெழுச்சி போலக்
கடுகவே விரணமுற்றுக் கருவிழி மறைத்து தாகில்
விடர் செய்யும் வியாதிதானே வெளுத்தசுக் கிரனுமென்றே (34)

(இ-ள்) கருவிழியின் மத்தியில் பனித்துளிபோல் விரணமேற்பட்டு, சுடுகின்ற மணல்போலாகித் திரண்டு வளர்ந்து கருவிழியை முற்றும் மறைத்து விட்டால் இது வெளுத்த சுக்கிரன் என்ற ரோகமாகும்.

அனற் சுக்கிர லக்ஷணங்கள்

பானலங் கண்ணினுள்ளே பகர்கரு விழியை விட்டுத்
தானம்வெண் விழியின் மேல தாகவே தழல்போற் றோன்றும்
ஊனமா யிடியுண்டாகு மொள்ளழல் போலக் காந்துந்
தேன் விழிக்குழலாய்! கேளாய்! அனற்சுக்கிரனென்று செப்பு (35)

(இ-ள்) கருவிழியல்லாமல் வெள்விழிக்கு மேல் எரிச்சல் தோன்றும். குத்துவலி காணும். எரிகின்ற தணல்போல் காந்தும். இது அனல் சுக்கிர லக்ஷணங்களாகும்.

சுக்கிர ரோகத்தின் ஸாத்யா ஸாத்யங்கள்

செப்பிய ரோகமஞ்சின் செய்தறி யறிந்துகொண்டு
தப்புறு சாத்தியங்க ளசாத்திய முரைப்பக் கேளா
யொப்புறு மணியின் மீதே யுறவெழு விரண சுக்கிரன்
வெப்புறு கருத்தச் சுக்கிரன் விழியினை விழுங்கியாமே. (36)

ஆகிய மூன்றுந்தானே யசாத்திய மென்னலாகுந்
தோகையே வெள்ளைச் சுக்கிரன் றுளங்கண்ட சுக்கிரனிரண்டும
வேகவே தீருமென்று தானமாய் விளம்பலாகுந்
தோகையே யிதற்குச் செய்யு மருந்தினைச் சொல்லக்கேளே. (37)

(இ-ள்) விரணசுக்கிரன், கருத்தசுக்கிரன், விழிமுழுழுங்கி, இம்மூன்றும் அஸாத்யம். வெள்ளைச்சுக்கிரன், உளங்கண்ட (அனல்) சுக்கிரன் இவ்விரண்டும் தீரக்கூடியவை.

திமிரரோக நிதானம்

வெள்ளெழுத்து	வாததிமிரம்
மாலைக்கண்	சிலேத்மதிமிரம்
அமுதவறட்சி	மேகத்திமிரம்
நீர்த்திமிரம்	

என்று ஏழு வகைப்படும்.

திமிரத்தின் வாக்கியம்

மின்னன்னும்! திமிரம் ஏழும் விரித்து நான் விளம்பக்கேளாய்
அன்னதோர் விழிமயக்கம் வெள்ளெழுத் ததுமாலைக்கண்
பின்னமோர் சிரத்தில் மூளை வறட்சி செய் பித்தச்சிலேத்மம்
அன்னநீர் வாயுவேழில் சாத்திய மூன்றதாமே. (38)

(இ-ள்) விழிமயக்கம், வெள்ளெழுத்து, மாலைக்கண், சிரோவறட்சி, பித்தச்சிலேத்ம வறட்சி, அன்னவறட்சி, வாயுவறட்சி முதலியன.

வெள்ளெழுத்தின் விபரம்

தெளிவுறவொளியாய் நிற்குந் தீங்கில்லை முப்பத்தேழில்
ஒளிவுறப் புகைந்து சற்றே யொதுங்கிடும் நாற்பத்தைந்தில்

வெளிவுற விருளதாகும் மேவிய வன்பத்தொன்றில்
வளியுற விருளுங் கண்க ளாண்டுநூ ருகுமென்றே (39)

(இ-ள்) 37 வயதில் ஏற்படும் பார்வைக்குறைவு 45ல் குறைவடையும். 51ல் கண்கள் மறுபடியும் மங்கும். 100 வயதிலோவெனில் கண்கள் முழுதும் இருண்டுபோம்.

வெள்ளெழுத்தின் குணம்

கூர்விழி மணியினுள்ளே குழம்புமை முகிலேபோலக்
கார்கிளர்ந் தொதுங்கி நிற்குங் காண்பது பஞ்சள்போலாம்
வார்முலை மானே! கொள்கை வைத்துநோ விதற்குக்காணும்
ஏற்குணங் கண்டவாறே வெள்ளெழுத் தென்னலாமே. (40)

(இ-ள்) விழியின் நடுவிலுள்ள பாப்பா கருநிறமான குழம்பைப்போலவும் மையைப்போலவும் அல்லது மேகத்தைப்போன்ற நிறமாகவும் காணும். பார்வையும் மஞ்சணிக்கும். கண்களில் வலியும் ஏற்படும். இதுவும் வெள்ளெழுத்தாகும்.

மந்தாரதிமிரத்தின் குணம்

சேர்கருமணியின் மீதே செறிந்திடு மஞ்சுபோலக்
கூரிருள் நேரமானாற் குழம்பியே வலிக்குங் கண்டாய்
சீரொரு சாமஞ் சென்றுற் றெளிவுறு மேதோவென்றும்
வார் முலைமானே! கேளாய்! மந்தாரத் திமிரமாமே. (41)

(இ-ள்) கருவிழில் பனிபடர்ந்தாற்போலாகும்: இரவு நேரங்களில் பார்வை குறைந்து வலியும் உண்டாகும் ஒரு சாமங்கழித்து மறுபடியும் பார்வை தெளிவடையும். இவை மந்தாரத் திமிரத்தின் லக்ஷணங்களாகும்.

அமுத வறட்சித் திமிரம்

மூளையிற் பித்தம் நின்று முதிரவே வறட்சியானல்
நாளிலே யவியுமந்தம் நடுநரம் புரளக் குந்தும்
பீளையும் நீருமாறு திக்குணம் பெருகக் கண்டால்
வாளினை வென்ற கண்ணாய்! வறட்சியாந் திமிரமென்னே. (42)

(இ-ள்) பித்தம் மூளையிலதிகரித்து வறட்சியை யுண்டாக்கும். நாளாக ஆக பார்வை குறைவடையும். கண்களுக்குச் செல்லும் நரம்பில் குத்துவலியேற் படும். பீளைசாறும், நீரும் பொசியும். இவை "வறட்சித்திமிர" லக்ஷணங்களாகும்.

நீர்வாதத் திமிரம்

கபமது வமுதமீது கதித்து நீர் மிகுதியாகி
நவிலுமூக் கடைத்து அண்ணாக் கதுதனிற் புண்ணுநாடுங்
குவையிரு புறமுங் குத்துங் கூர்விழிப் புகைச்சலுண்டா
மவையினை நீரின் வாதத் திமிரமென் றறிந்து பாரே (43)

(இ-ள்) கண்களில் நீர்கோர்த்து மூக்கையும் அடைத்துக்கொள்ளும். அண்ணாக்கில் புண்களேற்படும். கண்களின் இரு புறங்களிலும் குத்துவலி யுண்டாகும். விழிப்புகைச்சலும் உண்டாகும். இவை நீர்வாதத்திமிரத்தின் லக்ஷணங்களாகும்.

பூ மூன்றுக்கும் பெயர்

பூவையே! பூ மூன்றென்று புகலும் பேரதனைக் கேளாய்
தாவுவை சூரியால் வெய்யத் தழலெழு வியாதியாலு
மேவிய நீரினாலும் விழியிடை மூன்று ரோகங்
கூவிய வாணியுந்தல் குழம்பிபு கைபோல் மூன்றே. (44

(இ-ள்) வைசூரியினாலும், உஷ்ணரோகங்களினாலும் கண்களில் நீர் சேருவதனாலும் கண்களில் "பூ" விழுகிறது. இவைகள் முறையே ஆணிப்பூ, உந்தல்பூ, புகைப்பூ என்பவைகளாகும்.

பூவில் சாத்பாஸாத்யம்

மூன்றினிலாணி யுந்தல் சாத்திய மென்பார் முன்னோ
ரூன்று வெண் புகைபோலொன்று மொழியுமென் றுணர்ந்துகொள் நீ
கான்றெழு பூ மூன்றுக்குங் கருதிய குணத்தைக் கண்டு
சான்றிடு மருந்து தன்னைச் சாற்றக் கேள் தகவில் மானே. (45)

(இ-ள்) அம் மூன்று வகைகளில் ஆணிப்பூவும், உந்தல்பூவும் அஸாத்யமாகும். புகைப்பூ ஒன்றுதான் சாத்யமானது.

குந்தரோக நிதானம்

குறித்திடுங் குந்த மூன்றின் குணமது கூறக்கேளா
யுறித்திய தசையுமொன்று வுதிரமொன் றடநீரொன்று
மருத்திடு ரோகமூன்றின் சாத்தியம் மானே! கேளாய்!
செரித்திடும் மணியை விட்டுத் திரண்டெழில் சதைநீர் தீரும். (46)

(இ-ள்) தசைக்குந்தம், ரத்தக்குந்தம், நீர்க்குந்தம் என்று மூவகைப்படும். இவற்றுள் ரத்தக்குந்தம் தவிர மற்ற தசைக்குந்தம், நீர்க்குந்தம் என்ற இருவகைகளும் தீரும்.

சாத்யாஸாத்யக் குறிகள்

ஒள்ளழல் போலெழுந்த வுதிரத்தின் குந்தந்தன்னைத்
தள்ளிடுமசாத்தியமென்று சதை நீருங் குந்தந்தீரு
மள்ளிலை நடுவேற் கண்ணுபசாத்தியஞ் சாத்தியத்தை
மெள்ளவே யறிந்துகொண்டு விதிமுறை யறிந்து செய்யே. (47)

(இ-ள்) ரத்தகுந்தத்தை அஸாத்யமென்று நீக்கவும். மற்றபடி சதை குந்தத்திற்கும் நீர்க்குந்தத்திற்கும் தக்கபடி மருந்துகளைக்கொண்டு நிவர்த்தி செய்யவும்.

குந்தரோக நிதானம் முற்றும்.

சாத்யம் இருபத்திரண்டு அசாத்யம் இருபத்துமூன்று
ஆக கருவிழிதோஷம் நாற்பத்தைந்தும் முற்றும்.

வெள்விழி தோஷ நிதானம்

வெள்விழித் தோஷம் 20-ன் பெயர்

1. எழுச்சி வகைகள்
   - வரியெழுச்சி
   - விரணயெழுச்சி
   - குவையெழுச்சி
   - நீரெழுச்சி
   - உந்தெழுச்சி — ஆக 5
2. படர்த்தி வகைகள்
   - சதைப் படர்த்தி
   - வரிப்படர்த்தி
   - இரத்தப்படர்த்தி — ஆக 3
3. நெரிசல் வகைகள்
   - துளி நெரிசல்
   - உந்து நெரிசல்
   - விரண நெரிசல் — ஆக 3
4. புற்று வகைகள்
   - சதைப்புற்று
   - இரத்தப்புற்று
   - அனல் புற்று — ஆக 3
5. குமிழ் வகைகள்
   - நீர்க்குமிழ்
   - இரத்தக்குமிழ்
   - மாங்கிஷக்குமிழ் — ஆக 3
6. வரிவகைகள்
   - வெள்வரி
   - நீலவரி
   - சுரோணித வரி — ஆக 3

மொத்தம் 20

வெள்ளை விழி தோஷத்திற்கு வாக்கியம்

சொல்லிய வெழுச்சி யைந்துந் துலங்கிய படர்த்தி மூன்றும்
புல்லிய நெரிசல் மூன்று புற்றொடு குமிழு மூன்றும்
நல்வரி மூன்று மாக நாலைந்து தோஷப் பேர்கள்
வல்லிகே ளெழுச்சி யைந்தின் குணத்தினை வகுத்துச் சொல்வார் (48)

(இ-ள்) எழுச்சி ரோகத்தில் 5 வகைகளும், படர்த்தி நெரிசல், புற்று, குமிழ், வரி முதலான ரோகங்களில் தனித்தனியே 3 வகைகளும் உள்ளன.

நாகமுனிவர் கூறிய எழுச்சிகளின் லக்ஷணங்கள்

தோன்றிய வரியெழுச்சி சுணங்குபோ லுருண்டு காட்டும்
கான்றெழு விரணயெழுச்சிக் கருங்குன்றி போன்றுகாட்டு
மூன்றிய குவையெழுச்சி யுழுந்தது போலவாகு
மான்றநீ ரெழுச்சி காணே யம்பினிற் றுளிபோ லாமே. (49)

ஆகமுந் தெழுச்சி தானே யமன்றெழும் பருத்திக்காய் போற்
ரேகையே யெழுச்சி யைந்திற் ரேன்றுமுந் தெழுச்சி யோடும்
வேகமாம் விரணயெழுச்சி யிரண்டுமே மீளா தாகும்
நாகமா முனிவன் சொன்ன நயனத்தின் விதியின் வாறே. (50)

(இ-ள்) வரி எழுச்சியில் வெள்விழியில் தேமலைப்போன்ற நிறத்துடன் உருண்டையான வளர்ச்சி உண்டாகும். விரண எழுச்சியில் கருங்குன்றி போன்ற மாம்ஸ முளை உண்டாகும். உழுந்தைப்போன்ற வளர்ச்சி வெள்விழியிலேற் பட்டால் அது குவையெழுச்சியாகும் நீரெழுச்சியில் நீர்துளியைப்போன்ற கொப்பளம் வெள்விழியில் ஏற்படும். உந்தெழுச்சியிலோ பருத்திக்காய் (விதை) போன்ற சதை வளர்ச்சி வெள்விழியிலேற்படும். அதில் எரிச்சலும் உண்டாகும். ஷ்டி 5 வகைகளில் உந்தெழுச்சியும், விரணயெழுச்சியும் தீராது.

சாத்தியமாகும் எழுச்சிகள்

ஓங்கிய வரியெழுச்சி யோடுந் நீ ரெழுச்சி மற்றும்
வீங்கிய குவையெழுச்சி மூன்றுமே மீளு மென்க
வாங்கவிக் குணங்களெல்லா மடைவிலே யறிந்துகொண்டு
பூங்கொடி மயிலே! செய்யும் சிகிச்சையைப் பொருந்தச் செய்யே.

(இ-ள்) வரி எழுச்சி, நீரெழுச்சி குவையெழுச்சி, ஆகிய இம்மூன்று வகைகளே குணமாகும். ஆகவே மேற்கூறிய குறிகுணங்களை மனதில் வைத்துக் கொண்டு தக்கபடி சிகித்ஸை செய்யவும்.

புற்று மூன்றின் பெயரும் சாத்யாசாத்யமும்

* அன்னமே சதையின் புற்று அரும்புநீர்ப் புற்றிேைடு
வன்னமாங் கிஷத்தின் புற்று வருத்திடு ரோகமூன் றின்
முன்னமே யுரைத்த மாங்கிஷப் புற்றும்நீர் முந்தப் புற்று
அன்னது சாத்தியங்க ளதிலொன்ற சாத்தியமாமே (52)

(இ-ள்) சதைப்புற்று, நீர்ப்புற்று, அனல்புற்று என்று மூவகைப்படும். அதனுள் நீர்ப்புற்றும், அனல் புற்றும் சாத்தியமாகும். சதைப்புற்று அஸாத்ய மாகும்.

புற்றுகளின் குறிகுணங்கள்

சதைவளர்ந் தெழுந்தபுற்று தடித்திடு மிரத்தம் போலாம்
பதையும் நீர்ப் புற்றின் செய்கை பகரில்நீர்க் குமிழி போலாம்
விதனமா மனலின் புற்று விம்பம்போன் றெழுந்து காட்டு
மதைபுணர்ந் தார்க்குச் செய்யும் மருந்தினை யறிந்துகொள்ளே. 53)

(இ-ள்) சதைப்புற்று ரோகத்தில் கண்களில் சிவப்புநிறமுள்ள மாம்ஸ தடிப்பு உண்டாகும். நீர்ப்புற்றில் நீர்க்குமிழி போன்ற கொப்பளம் ஏற்படும். அனல்புற்று ரோகத்தில் பிம்பம் போன்ற எழுச்சியும் உண்டாகும்.

குறிப்பு :—பொதுவாக எழுச்சி ரோகத்தில் மாம்ஸ வளர்ச்சி ஒரே சீராக இருக்கும். ஆனல் புற்று நோயிலோ மாம்ஸ வளர்ச்சி ஒன்றன் மேலொன்ருக இருக்கும். வளர்ச்சியின் மேல் பல கண்களும் காணும்.

குமிழரோகங்களின் வகைகளும் சாத்யாசாத்யமும்

கொடியிடைமானே ! கேளாய் ! குமிழமூன் றேதோவென்னில்
வடியுநீர்க் குமிழிரத்த மாங்கிஷ மென்னு மூன்ரு
மடவிலே யறிந்து கொள்நீ யசாத்தியம் மாங்கிஷமற்று
மிடரில்லை நீரிரத்த மேதுமென் றியம்பினுரே (54)

(இ-ள்) நீர்குமிழ், இரத்தக்குமிழ், மாங்கிஷக்குமிழ் என்று மூவகைப்படும்.

குமிழரோகங்களின் குறிகுணங்கள்

நாரியே ! நீரினுலே நயந்தெழு கொப்புளந்தான்
கூறிய சங்கங்காயின் பழம்போலக் குவியும் ரத்தஞ்

* மாங்கிஷப்புற்று என்பதும் சதைப்புற்று என்பதும் ஒன்ருகவே கொள்ள வேண்டும். ஆகவே " அனல் புற்று " என்று அடுத்த செய்யுளில் கூறப்பட்டிருப்பதே சரியாகத் தோன்றுகிறது.

சேருமக் கொப்புளந்தான் செங்குன்றி வடிவதாகும்
பார்சதைக் கெழுந்த தாகிற் பணைத்தெழுங் கருமையாமே. (55)

(இ-ள்) நீர்க்குமிழ் ரோகத்தில் சங்கம்பழம் போலக் குவிந்து கொப்புள முண்டாகும். இரத்த குமிழ் ரோகத்திலுண்டாகும் கொப்புளம் சிவப்புக்குன்றி மணியை யொத்திருக்கும். சதைக்குமிழ் ரோகமானுல் கருமையான மூங்கிற் குருத்துப்போன்ற மாம்ஸ வளர்ச்சியுண்டாகும்.

வரிரோக பேதங்கள்

அம்புய வதனமானே ! வரியதன் குணத்தைக் கேளாய்
பம்புவெள் வரியாமொன்று பகர்நீல வரியாமொன்று
வெம்பிய இரத்தமொன்று விளம்பிய மூன்று ரோகம்
நம்பிநீ யரிவைநீல வரியொன்று மசாத்தியம் நாடே.

(இ-ள்) வெள்வரி, நீலவரி, இரத்தவரி என்று மூவகைப்படும். இவற்றுள் நீலவரி யொன்றுதான் அஸாத்யம்.

* வரிரோக லக்ஷணங்கள்

விளப்புவெள் வரியின் செய்கை மீன்சிலாம் பெழுதல் போலாந்
துளங்கிள மயிலே நீல வரியது துருள போலாந்
தளங்கிய இரத்தத்தாலே சார்வரி சிவப்பதாமென்
றுளங்கொள நீயிதற்குச் செய்மருந் தறிந்து செய்யே. (57)

(இ-ள் வெள்வரியில் கண்களின் வெள்விழியில் மீன் சிலம்பைப்போல வெள்ளை நிறமாக சதை துருத்தும். நீலவரி ரோகத்தில் துருசின் நிறமாக சதை வளரும். இரத்த வரி ரோகத்திலோ சிவப்பாகச் சதை வளரும்.

குறிப்பு :—வரி எழுச்சியில் மாம்ஸ வளர்ச்சி இருக்கும். ஆனுல் வெள் வரியில் மாம்ஸ வளர்ச்சி கோடுபோல் காணப்படும். நெரிசல் ரோகத்தைப்பற்றி முன்னமேயே கூறப்பட்டுள்ளது. உஷ்ண நெரிசல் என்றும் இரத்த நெரிசல் என்றும் 2 வகையாகப் பிரிக்கப்பட்டு மருந்தும் கூறப்பட்டுள்ளன. அது அநேக மாக அகஸ்தியர் நயனவிதி முறைப்படியிருக்கலாம் என்று தோன்றுகிறது. இம் மாதிரியே வரிரோகத்தையும் நீர்வரி, வடுவரி, இரத்தவரி என்று 3 வகையாக முன்னமேயே பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே தற்போது மேற்கூறிய ரோகங்களைக்கூறும் செய்யுட்கள் நாகமுனிவரின் அபிப்ராயம் என்று தெரிந்து கொள்ளவேண்டும். படர்த்தி ரோகத்தைப்பற்றி யாதொன்றும் கூறப்படவில்லை

* வரி என்பதற்கு "கோடு" என்று பொருள்-அதாவது கண்களில் மேற்கூறிய நிறங்களில் கோடுகள் உண்டாதல் என்று கூறுவதே பொருந்தும்.

இமைத்தோஷங்கள் 16ன் பெயர்

பில்லம்		பற்பம்	
நீர்ப்பில்லம்		நீர்ப்பற்ப ரோகம்	
அமரபில்லம்		இரத்தபற்ப ரோகம்	
குடாருருப்பில்லம்	ஆக 3	மாங்கிஷபற்ப ,,	ஆக 3

தடிப்பு		கழல்	
இமைத்தடிப்பு		நீர்க்கழல்	
இழிசற்கண்		இரத்தக்கழல்	
முடமயிர்	ஆக 3	சதைக்கழல்	ஆக 3

பொது ரோகங்கள்

இமைநீர்ப்பாய்ச்சல்	சுற்றுக்குலவு	
இமைப்புழுக்கடி	இமை வறட்சி	ஆக 4

நீர்ப்பில்லத்தின் குணம்

மெல்லிய யிமையு மூர்ந்து வீழும் நீர் மிகுதியாகிக்
கல்லெனக் கனத்து விம்மிக் கண்சுற்றுப் புருவமுச்சி
சில்லென விடித்து நோவாய் திமிர்த்திடு மிக்குணங்கள்
வல்லெனு முலையாய்! சொன்னேன் வருத்துநீர்ப் பில்லமாமே (58)

(இ–ள்) இமை கனத்துக் கண்ணீர் மிகுதியாகப் பொழியும். கண்களின் வெளிப்புறங்கள், புருவம், உச்சி முதலான இடங்களில் தாங்கமுடியாத வலி யுண்டாகும். இவை நீர்ப்பில்லரோக லக்ஷணங்களாம்.

அமர பில்லத்தின் குணம்

சொல்லிய இமையினுள்ளே சோரிபோற் சதையுந்துன்றிப்
புல்லிடு மொளி மயங்கிப் பொசிந்துநீர் வடிந்து காட்டி
யொல்லையி னிமை மடிந்துக் கீழிமை யுறுத்து மாகில்
வல்லியங் கோதை நல்லாய் (அமரத்தின்) பில்லமாமே (59)

(இ–ள்) இமையின் உட்புறங்களில் இரத்த நிறமாகச் சதை முளைகள் தோன்றும். கண்களில் பார்வை குறையும். கண்ணீரும் வடியும். இமையின் நுனிபாகம் உள்புறமாக வளைவதனல் இமைமயிர் கண்களில் உறுத்தும். இவை "அமர பில்ல ரோக" லக்ஷணங்களாம்.

குடநுருப்பில்ல ரோக லக்ஷணங்கள்

இமையடிப் புருவமுற்றி யிளகிய நீருமாறி
யமை பசு நரம்பு துன்றி யதுகனத் திடுமே யாகிற்
குமுதமா விழியினுளே ! குடருருப் பில்லமென்று
மிமையவ ரறியச் சொன்னே மிதுபுறப் பில்லமாமே. (60)

(இ-ள்) இமையின் அடிப்புறத்தில் புருவத்தின் கீழே கண்களின் பச்சை நரம்புகள் தடித்துக் கனத்து நீர் விடாமல் பொசியும். இப்பேர்ப்பட்ட புறப் பில்ல ரோகத்தை குடருருப்பில்ல ரோகம் என்று கூறுவர்.

பில்ல ரோகத்தில் சாத்யாசாத்யம்

இமையிநீர்ப் பில்லந்தானே யசாத்திய மென்னலாகு
மமையி லமரப் பில்ல முள்ளிமை சதை வளர்ந்து
திவளினு மருந்திற் றீருஞ் செப்பிய குடரின் பில்ல
முவளிமை தடித்து நான்கு குருவெனத் திமிர்க்குங் காணே (61)

(இள்) நீர்ப்பில்லம் அசாத்யம். அமரப்பில்லம் மருந்தினுல் தீரும். குடருருப்பில்லமும் சாத்யம்.

இமைத்தடிப்பின் குணம்

ஐயறு பரநத கண்ணிற் பறபறப்பதிகமாகி
வெய்யநீர் ததும்பி விம்மித் திமிர்த்திடும் விருவிருப்பா
லுய்யிவை விழியில் மெத்த வுறுவிளிம் பது கனக்குஞ்
செய்யிமைத் தடிப்புத்தானே யசாத்தியமென்று செப்பே (62)

(இ-ள்) கண்களில் பறபறப்பு அதிகமாகும். கண்ணீர் ததும்பும். இமைகள் கனக்கும். மதமதப்பு உண்டாகும். இமைகளின் விளும்புகள் வீங்கிக் கனக்கும். இவை இமைத்தடிப்பின் லக்ஷணங்களாகும். இது அஸாத்யமாகும்.

இழிசற் கண் குணம்

கூறிய இமைவிளிம்பு கொழுகொழுத் ததில் நீரோடி
ஊறிடும் புண்ணதாகி யொடுவது மாருதாகும்
பார்விழி விழிக்கிற் கூசும் பலப்பட விதனமாகும்
வார்முலை மானே ! கேளா யிழிசற்கண் சாத்யமாமே. (63)

(இ-ள்) இமைகளின் விளும்பு தடித்துப்போய் நீர்கோர்த்துவிடும். சிறு சிறு புண்களும் உண்டாகும். கண்களில் கூச்சம் அதிகமாகும். இவைகள் இழிசற் கண்ணின் குறிகளாகும். சாத்யமானது.

முடமயிரின் குணம்

பொருந்திய விமைமடிந்து நீரினுற் புண்ணேயாகுஞ்
சரிந்திமை ரோமமுள்ளே சார்ந்துறக் குத்திநோவாம்
தெரிந்திடு மணி வெளுத்துத் திமிரமே சேருங் கண்டாய்
அறிந்தியிவ்(வகையாம்)ரோக முடமயிர் சாத்பமாமே (64)

(இ-ள்) இமையின் ஓரங்கள் கண்களின் உட்புறமாக மடிந்து. கண்களில் இருந்து நீரை வருவித்துப் புண்களையுண்டாக்கும். மேலும் இமையின் ரோமங்கள் கண்களைக் குத்தி வலியைக் கொடுக்கும். கண்களின் பார்வை வெளிறிப்போய், திமிர (பார்வைக் குறைவை) ரோகத்தை உண்டாக்கும். இது முடமயிர் ரோக லக்ஷணங்களாம். இந்நோய் தீரக்கூடியது

பற்ப ரோகத்தின் வகைகள்.

சொல்லிய பற்பரோகம் நீரொன்று தளங்கி ரக்த
மல்லியங் கோதாய் நீ கேள் சாற்றவுஞ் சதைநோயென்று
வல்லியே நீரிரத்தஞ் சாத்திய மாகு மீது
பல படத் தீருமென்று பகர்ந்தன மறிந்துகொள்ளே. (65)

(இ-ள்) பற்பரோகம் நீர், இரத்தம், சதை என்று மூவகைப்படும். நீர் பற்பரோகமும், இரத்த பற்பரோகமும் சாத்யம். மருந்துகளினுல் குணம் உண்டாகும். சதைப் பற்பநோய் அஸாத்யமாகும்.

பற்ப ரோகங்களின் குறிகுணங்கள்.

நீருறு பற்ப ரோகக் குணங் கண்ணீர் மிகுதியாகிச்
சோருமீரிமை கனத்து சோர்ந்திடு மிரத்தத்தாலே
சேருமே ரோகச் செய்கை இமைகளுஞ் சிவந்து செந்நீர்
வாரு மாங் கிஷமுந்தானே தடித்துள்ளே வளருங்காணே. (66)

(இ-ள்) நீர் பற்பரோகத்தின் கண்ணீர் மிகுதியாகப் பொழியும். இரு இமைகளுங் கனத்துச் சோரும். இரத்த பற்பரோகமெனில் இமைகள் சிவந்து செந்நீர் வடியும். மாங்கிஷ பற்பரோகத்தில் சதைத் தடிப்பு உண்டாகும்.

*கழலைகளின் வகைகளும் சாத்யாசாத்யங்களும்.

இயம்பிய சழலைநீரா லிரத்தத்தாற் சதையினுலே
வயங்கிமை மேலெழுந்து வளர்ந்திடும் ரோகந்தானே
தயங்கிய ரத்தத்தாலே சார்ந்திடுங் கழலை தீரா
தியங்கிய சதையுந் தீருந் தீர்ந்திடு மியல்பு சொல்வோம். (67)

* உருண்டையான கட்டி இதனை Cyst என்று கூறுவர்.

(இ-ள்) இமையின் மேலுண்டாகும் கழலை. நீர், இரத்தம், சதை என மூவகைப்படும். ரத்தக்கழலை ரோகம் மாத்திரம் தீராது. மற்ற வகைகள் தீரும்.

இமை நீர்ப்பாய்ச்சல் குணம்.

சிரமதிற் சிலேத்மம் நின்று சொரியும் நீர் விழிநரம்பில்
மருவியே கண்டாயூர்ந்து மதர்த்தது கனத்து வீங்கி
முருகவிழ் குழலினாளே! மொழியிமை நீரின் பாய்ச்சல்
விரவதின் குணங்கள் சொன்னோம் விருப்பியே யறிந்துகொள்ளே.

(இ-ள்) சிரஸில் கபம் சேர்ந்து, விழிநரம்பில் நீர் சோர்த்துக்கொள்ளும். பின்னர் கண்களின் இமைகள் திமிர்த்துக் கனமாகி, வீக்கம் உண்டாகிக் கண்ணீர் வடியும். இவை "இமைநீர்ப் பாய்ச்சலின்" குணங்களாகும்.

சுற்றுக்குலைவின் குண?.

அன்னமே யிமையில் ரோம முதிர்ந்திடும் புண்ணேயாகும்
பன்னிய நீரும் பாயும் பலப்பட வலிக்குங் குத்தம்
கொன் விழி மயக்கமுண்டாங் கொழுத்து நீரோடும் பீளை
யின்னிவைக் குணங்கள் சுற்றுக் குலைவென யிசைக்கலாமே. (69)

(இ-ள்) கண்களின் இமைமயிர் உதிர்ந்து புண்களேற்படும். கண்ணீர் பொசியும். கண்களில் குத்துவலியும் உண்டாகும். கண்கள் மயங்கும் பீளை அதிகமாகச் சாறும். இவை சுற்றுக் குலைவின் குணங்களாம்.

புழுக்கடிக் குண?.

உள்ளிமை விளிம்பி லூறு ரோமமுதிர்ந்து புண்ணு
மொள்ளழல் போலக்காந்து மோடிடுஞ் சீயிரத்தம்
வெள்ளிடை சிவந்து வீங்கித் தடித்திடு மிக்குணங்கள்
அள்ளிலை நடுவேற் கண்ணாய்! புழுக்கடிக் குணமிதாமே. (70)

(இ-ள்) இமை விளும்பிலுள்ள ரோமங்கள் சிற்சில இடங்களில் உதிர்ந்து புண்களேற்படும். அந்த இடம் அனல்போல் காந்தும். சீழ், இரத்தம் இவைகளுடன் சிவந்த நிறமாகப் புண்களுண்டாகி இமையும் வீங்கும். இவை புழுக்கடிக் குறிகளாகும்.

இமை வறட்சிக் குறிகள்.

சீதஞ்சேரு மிமை வறட்சி செய்ய பில்லம் போலெழுப்பு
மோது மிமையிற் றேஷமிவை யுற்ற நான்கு மறிந்தீரேல்

வாததோஷம் வகூரி தன்னில் மற்றும் விரண ரோகத்தி
லேதுவாக யிமை மருவி யெழுப்பும் வியாதி சாத்தியமே. (71)

(இ-ள்) இமை வறட்சி ரோகத்தில் கண்களில் குளிர்ச்சி அதிகரித்து பில்ல ரோகத்திற்கான குறிகளையுண்டாக்கும். இமைகளிலுண்டாகும் நான்குவித வியாதிகளையும் தெரிந்துகொண்டு வாததோஷத்திற்கான சிகித்ஸை, வகூரிக்கான சிகித்ஸை முறைகள், விரண ரோகத்திற்கான சிகித்ஸை முறைகள் இவைகளை யனுசரித்துத் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

கண்ணோடுவின் குணம்.

மூக்கடி கடையினுள்ளே முளைத்தெழுங் குமிளமாகத்
தாக்கிய சவ்வுமூடி வெடித்ததில் சலமுமாறு
நோக்கிடி லசாத்தியந்தா நுவல்கின்ற வேதஞ் சொல்லும்
பார்படு மூலையினுளே! கண்ணோடு வாகுமென்றே. (72)

(இ-ள்) மூக்கின் சமீபத்திலுள்ள கடைக்கண்ணில் சிறிய குமிழ்போன்ற முளையெழும்பும். அதன்மேல் சவ்வு மூடும். அமுக்கினால் நீர் பொசியும். இந்நோய் அசாத்தியமாகும். இந்நோய்க்குக் "கண்ணோடுவு" என்ற பெயர்.

இதவுமது

இளகிய பீளைநிற்கும் இடப்பரந்தி தனின் மேலே
வளமுறு பருத்திபோலே யெழும்பிடு மானே கேளா
யுளைவுறு வோடும் பாயுஞ் சாத்திய முணர்ந்து கொள்நீ
விளைவினுற் கருவி சோத்தி வேதனைத் தீர்த்திடாயே (73)

(இ-ள்) கண்களிலிருந்து பீளைசாறும். கடைக்கண்ணில் சதை படர்ந்து அதன்மேல் பருத்தி விதையைப்போன்ற மாமிஸ வளர்ச்சியுண்டாகும். இது சாத்யமாகும். ஆயுதங்களை உபயோகித்து வேதனையைத் தீர்க்கவும்.

*படர்த்திகளின் சாத்யாசாத்யம்

இளகிறு கடையினுள்ளே யெழுப்புநீர் சதையிரத்தம்
அழலெழப் படகு மானே! யசாத்திய மல்ல மூன்றும்
வழுவற வீதற்கு முன்சொல் பொடிமருந் ததனுற்றீரு
மழவிடை யுயர்ந்தோன் சொன்ன வாகடத் தியல்புதானே (74)

(இ-ள்) கண்கள் இரு புறங்களிலிருந்து வளரும் எரிச்சலோடுகூடிய

---

*படர்த்தி ரோகத்தைக் கடைக்கண்களின் ரோகத்தில் சேர்க்கப்பட்டதால் இதனை இங்கு கூறுகிறார்.

நீர்ப்படர்த்தி, சதைப்படர்த்தி, இரத்தப் படர்த்தி, இம்மூன்றும் பொடிகளின் உபயோகத்தால் தீரும்

நீர் குவையின் குணம்

சொல்லுநீர்ச் சதையிரத்தந் தன்றிய குன்றிபோலக்
கல்லெனப் புடைத்தெழுந்துக் கடைவிழியிரண்டிற் றோன்று
முல்லைபொண் பல்லினளே ! யிக்குண முயலுமாகி
லெல்லையில் விதனஞ் செய்யு நீர்க்குவை யென்று சொல்லே (75)

(இ-ள்) நீர்க்குவை, சதைக்குவை, ரத்தக்குவை என்று மூவகைப்படும். அதனுள் நீர்க்குவையில் இரு கடைக்கண்களிலும் குன்றிமணிபோன்று கடினமான வளர்ச்சி தோன்றும் மிகுந்த வேதனையையும் தரும்.

*பக்கவாத தோஷக் குறிகள்

கண்ணிடை பக்கவாத தோஷங்கள் சுதித்து நின்றால்
நண்ணிமை யடர்ந்து கொட்டி நடுங்கிடுங் குறைக்கண்ணுக்கு
மண்ணவா னுரைத்தசெய்கை சாத்யமதுவாகுந்தான்
திண்ணமாய் புருவத்தின் மேலறிவு (லறுகு) செய்திடவே தீரும் (76)

(இ-ள்) இமைகள் கனத்து இமை மயிர்கள் விழுந்து அடிக்கடி நடுக்கம் உண்டாகும். (கண்களைச் சிமிட்டுவான்) இதுவும் சாத்யரோகமாகும். இந் நோய்க்குப் புருவத்திற்கு மேல் அறுகு செய்திடத்தீரும்.

குறிப்பு

அறுகிடுதல்: — கண்களுக்குச்செல்லும் இரத்தக்குழாயின்மேல், மஞ்சளினால் சுட்டுப்புண்களுண்டாக்கிப்பின்னர் தக்க மருந்துகளை உபயோகித்து ஆறவைத்தல்

விரணப்பருவின் லக்ஷணம்

கடைவிழியதனிற் றோன்றும் விரணம்பரு கடகடென்னும்
மிடருறு வியாதி வந்தா லிளகமா மருந்து செய்து
உடையவே நிதானத்தன்னு லோதிய நூலிற் கண்டு
அடவிலே செய்முன் சொன்னபருவொன்றும் சாத்தியமாமே (77)

(இ-ள்) கடைக்கண்ணில் தோன்றும் விரணத்தின் மேல் பருவைப்போல் முளையுண்டாகும். நூல்களில் கூறப்பட்ட நிதானத்தையும் மருந்துகளையும் தெரிந்து கண்களில் இடவும். இதுவும் சாத்தியமாகும்.

* பக்க என்பது "பக்ஷ்ம" என்பதின் திரிபு

நயன வாயு லக்ஷணம்

நயனத்தில் வாயுநின்று நவில்புரு வத்தில் குத்திச்
செயல்கெட விரண முண்டாய்த் திரண்டுநீர் மூக்கால் வீழு
மியல்பினை யறிந்து கொண்டு யிவ்வுரோ கத்தை மாற்றப்
பயனுரை செய்த வுண்மை மருந்தினை யறிந் துகொள்ளே ! (78)

(இ-ள்) கண்களில் வாயு அதிகரித்துப் புருவங்களில் குத்தவலியை யுண்டாக்கும் பின்னர் கண்களில் சிறு சிறு விரணங்கள் ஏற்பட்டுக் கண்ணீர் மூக்கினுல் பொசியும். இதற்குத் தக்க மருந்துகளை உபயோகிக்கவும்.

கண்ணோய் வரக் காரணங்கள்

உஷ்ண மதனினுலு முறுவெயிற் காற்றினுலுங்
கட்டமாஞ் சுமையினுலுங் கடுகிய நடையினுலு
மட்டவிழ் குழலினுளே ! வந்திடும் விழிக்குள் நோவாம்
இட்டமா யறிந்து கொண்டு யிதற்கிடு மருந்துகேளே (79)

(இ-ள்) உஷ்ணம் அதிகரித்தலாலும் வெய்யில், காற்று இவைகளில் அதிகமாகச் சஞ்சரிப்பதினுலும், தலையில் அதிகமாகச் சுமையைச் சுமப்பதினுலும் வேகமாக நடந்து செல்வதனுலும் கண்களில் ரோகங்கள் சம்பவிக்கும். இவைகளுக்குத் தக்க மருந்துகளை யுபயோகித்துத் தீர்த்துக்கொள்ளவும்.

சந்நி நிதானம்.

சந்நியீ ராறுடொன் றிற் ருழ்ந்திரி தந்திரீக
மின்னிய சிவுகஞ் சித்தம் விப்புரு பிரலாபந்தான்
கன்னிக மிவையோ ராறும் சாத்திய மாகுங் கண்டாய்த்
துன்னிய குணமும் நாளுஞ் சங்கையுங் சொல்லக்காணே. (1)

(இ-ள்) சந்நி 13ல் *(1) தாழ்ந்திரிகம், (2) தந்திரீகம், (3) சிவுகம், (4) சித்தவிப்புரு, (5) பிரலாபம், (6) கன்னிகம் என்று 6 வகைகளும் சாத்யம் ஆகும்.

தந்திரீக சந்நி லக்ஷணங்கள்.

காணுமே வீக்கம் காலிற் கடுக்குஞ்சந் துழைந் தைதக்கு
மூணவே யுறங்குஞ் சென்னி யுருட்டுந்தொண் டையினிற் கட்டி
பூணுமே சிலேற்ப மென்னிற் பொருந்துதந் திரீக மாகுந்
தோணும்கா ளேழுந் தோஷந் தோகையே யறிகுவாயே. (2)

---

* (1) தாந்திரீகம், (2) சந்திரிகம், (3) சீகுவிகன், (4) சித்தவிப்ரமம், (5) பிரலாபகன், (6) கர்ணீக சந்நி என்றும் அகஸ்தியர் 2000ல் காண்க.

(இ-ள்) காலில் வீக்கம் ஏற்படும். கடுப்புவலி மேலிடும். தொடை இடுக்குகள் வீங்கும். கண்களில் உறக்கம் மேலிடும். தலையை அடிக்கடி உருட்டுவான். தொண்டை கட்டிப்போம். கபம் அதிகரிக்கும். இந்நோய் 7 நாட்கள் உடலை வருத்தும்.

தாந்திரிக சந்நிக் குறிகள்.

அரிகுரல்நெரிதல் தூங்கல் அயர்ந்துநாத் தடித்து முள்ளுப்
பெறல் வயிறழிதல் காத்தல் சொரிதல்மேல் மூச்சுக் கண்ணீர்
சோறவே மாறிப் பார்க்க ... ...
றுகுணந் தாந்திரீக மோதுநா ளிருபத்தைந்தே. (3)

(இ-ள்) குரல் மாறுபடுதல், உறக்கம், நாக்குத் தடித்து முட்கள் உண்டாகும். வயிற்றலைவு, தேக எரிச்சல், அரிப்பு, மேல்மூச்சு, கண்ணீர் சோரல் முதலான குறிகளும் காணும். இந்நோய் 25 நாட்கள் உடலை வருத்தும்.

சிவுக சந்நி லக்ஷணம்.

அஞ்சியே ஊமைப்பித்தன் செவிடன்போல் மூச்சடக்கி
எஞ்சியே பிரலாபித்துக் கூப்பிடு மிருத்தி வைக்குஞ்
செஞ்சவே தலைநில்லாது வலித்தது நடுக்கல் தேகம்
வஞ்சியே! சிவுகசந்நி வருத்து *நா ளிரெட் டாமே. (4)

(இ-ள்) ஊமை, பித்துப்பிடித்தவன், செவிடன் முதலியோர்களைப்போல் மூச்சை அடக்கிக்கொண்டு பிதற்றுவான். சம்பந்தமில்லாது கூப்பிடுவான், நிறுத்திவைப்பான். தலை ஒரே நிலையில் நில்லாது தேகத்தில் வலி, நடுக்கம் முதலியவைகளுண்டாகும். இச்சந்நி 16 நாட்கள் தேகத்தை வாட்டும்.

சித்த விப்ரம சந்நிக் குறிகள்

ஆகிய வுடம்பிடுப்போ டலகது கடுக்கு மாடுங்
தேகமஞ் சணிக்கும் வாடுஞ் சிரித்தடிக் கடி மயக்கும்
சோகமாய் வாய்பேசாமற் கிடந்து பின் சோகம் நீங்கும்
வேகநாள் மூவேழ் சித்த விப்ரம மென்று சொல்லே (5)

(இ-ள்) உடம்பு முழுவதிலுமோ அல்லது இடுப்பிலோ தாங்கமுடியாத கடுப்புவலியுண்டாகித் தன்னையறியாமல் ஆடும். தேகத்தில் மஞ்சள் நிறமதிக மாகும். தேகம் சோர்ந்து போம். காரணமில்லாமல் சிரிப்பான். அடிக்கடி மயங்கி விழுவான். வருத்தத்துடன் வாய்பேசாமற் கிடப்பான். சிறிது நேரஞ் சென்று எழுந்திருப்பான். இந்நோய் தீருவதற்கு 21 நாட்கள் ஆகும்.

---

* அகஸ்தியரில் இந்நோய் 7 நாட்கள் காணும் என்றிருக்கிறது.

பிரலாப சந்நிக் குறிகள்

சொல்பிர லாபம்விக்கல் சுவாசமோ டிளைப்புத்தாக
மேல்மிட ரதுசிலேற்ப மேவுதல் சுரமேகாய்தல்
அல்செறி குழலாயிந்தக் குணம்பிர லாபமாகும்
புல்லிய நாளீரேழும் பொருந்துமென் றறிந்துகொள்ளே

(இ-ள்) பிதற்றல், விக்கல், மேல்மூச்சு, இளைப்பு, தாகம், கபம் அதிகரித்தல், சுரமடித்தல் முதலான குறிகளேற்படும். இந்நோய்க்கு அதிகாரம் 14 நாட்களாகும்.

கன்னிக சந்நியின் குறிகுணங்கள்

மின்னிய நாவிரிந்து காதின்கீழ் வீக்கமாகி
துன்னிலே செவிகேளாமற் பிரலாபஞ் சுவாசம் விக்கல்
மன்னிய வுடல்நடுக்கல் வந்திடில் மானே! கேளாய்!
கன்னிக சந்நிவேகம் தொண்ணூறு நாளுங் காணே. (7)

(இ-ள்) நாக்கில் வெடிப்புகளுண்டாகும். காதிற்குக் கீழே வீக்கம் உண்டாகும். காது கேளாது. பிதற்றல், சுவாசம், விக்கல், உடல் நடுக்கல் முதலான குறிகளுமுண்டாகும். இவ்வகைச் சந்நி தீருவதற்கு 3 மாதங்களாகும்.

அஸாத்யம் ஏழு சந்நிகளின் பெயர்

காணுமந்தக ருத்தாகஞ் சீதாங்கங் கண்டகுச்சந்
தோணிய ரத்தசாட்டிய பினியாசந் தோகைநல்லாய்!
நாநிலந் தன்னிற் புக்கு நேத்திர மிவையோரேழும்
பூணுமே லசாத்தியந்தா னென்னவே புகலுவாயே. (8)

(இள்) அந்தகம், *ருத்தாகம், சீதாங்கம், கண்டகுச்சம், ரத்த சாட்யன் அபின்யாசன், புக்குநேத்திரன் ஆகிய ஏழு வகை சந்நிபாத ரோகங்களும் அஸாத்யங்களாகும்.

அந்தக சந்நியின் குறிகள்

ஆயமேதோர் தலைநடுக்கல் அதிதாக மயக்கம் வாந்தி
வாயது பிதற்றல் விக்கல் மருவிடுமுடம்பு காய்தல்
யோயபேய் போற்றுணுக்கிட் டெழுந்திருந் திடுதலென்னிற்
றீபவந் தகமாம் சந்நி தீது நாள் பத்ததாமே. (9)

(இ-ள்) தலை நடுக்கல், தாங்கமுடியாத நாவரட்சி, மயக்கம், வாந்தி,

* ருத்தாகம் என்பதை "உருத்திரன்" என்று அகஸ்தியர் கூறுகிறார்.

வாய்பிதற்றல், விக்கல், ஜ்வரம், பேயைக் கண்டவன்போலத் திடுக்கிட்டு எழுந்திருந்து ஓடுதல் முதலான குறிகள் உண்டானால் அது அந்தக சந்நிபாதக் குறிகளாகும். இது பத்து நாட்களில் நோயாளியைக் கொன்றுவிடும்.

ருத்திராக சந்நிக் குறிகள்

பத்திரமாக வார்த்தைப் பகர்ந்திட லுடல் நடுக்க
லத்ததாம் பிரலாபித்தல் மோகித்தல் பிதற்றல் சோம்பல்
குத்திடும் பிடர்கடுத்தல் கொளுங்களம் நெற்றிவேர்த்த
வித்திறம் பெருத்திராக சந்நிநா ளிருபதாமே. (10)

(இ-ள்) மிகவும் மெதுவாகப் பேசுவான். உடலில் நடுக்கம் உண்டாகும். தன்னையறியாமல் பிதற்றல் மயங்கிவிழுதல், சோம்பல், பிடரியில் கடுப்புவலி, நெற்றியில் வியர்வை முதலான குறிகள் ருத்திராக சந்நியின் லக்ஷணங்களாம். இது 20 நாட்களில் உயிரைப் போக்கும்.

சீதாங்க சந்நி லக்ஷணங்கள்

இரும்பொ றுத்ததுகடுக்கு மிளைப்புமேல் மூச்சுவாந்தி
பொருந்து மெய்குளிர்ந்து வேர்க்கும் புகையடிக்கடிநடுக்கும்
வருந்தவே தாபமூர்ச்சை வயிறது கழிதல் விக்கல்
திருந்திடுங் குணஞ்சீ தாங்கந் தீதுநாளொருபத்தஞ்சே. (11)

(இ-ள்) உடலில் கடுப்புவலி ஏற்படும். மேல் மூச்சு, மூச்சுத்திணறல், வாந்தி, தேகத்தில் குளிர்ச்சி, (தொட்டால்) வியர்வை, நடுக்கம், புகைச்சல், உள்காந்தல், மூர்ச்சை, வயிறு கழிச்சல், விக்கல் முதலான குறிகள் ஏற்பட்டால் அது சீதாங்கசந்நியின் லக்ஷணங்களாம். இது 15 நாட்களுள் நோயாளியைத் தீர்த்துவிடும்.

கண்டகுச்ச சந்நிக் குறிகள்

அஞ்சவே தாகமோகம் அழன் றுடல் கடுத்தெரித்து
மிஞ்சியே சொரிதல் வாந்தி விக்கல்கால் கையடித்தல்
செஞ்சவே தலைநில்லாது வலித்தது நடுக்கல் தேகம்
பஞ்சியாய் வளைத்தல் கண்டகுச்சம்நாள் பதிமூன்றாமே. (12)

(இ-ள்) தீராத தாகம், மயக்கம், உடலில் அழற்சி, கடுப்பு, எரிச்சல், வாந்தி அதிகமாக எடுத்தல், விக்கல், கால் கைகளை அடித்தல், தலையைத்தூக்க முடியாமை, தலைவலி, தலை நடுக்கம், தேகம் வில்போல் வளைதல் முதலான குறிகள் காணப்படில் அது கண்டகுச்சசந்நியாம். இது 13 நாட்களுள் உயிரை நீக்கும்.

இரத்த சாட்டியசந்நியின் லக்ஷணங்கள்

பதிந்திடு முதடும் நாவும் விரிந்ததி லிரத்தம் பாயு
மலர்ந்திடு நரம்பு காதின் கீழ்வீக்க மயக்க மூர்ச்சை
யதிர்ந்திடு சுரம் சிலேற்ப மதிசாரந் தாக மோக
மெதிர்ந்திடும் பிரமை ரத்த சாட்டி நாள் பத்ததாமே (13)

(இ-ள்) உதட்டில் வெடிப்புகளுண்டாகும். நாக்கிலும் வெடிப்புகளேற்பட்டு அதிலிருந்து இரத்தம் வெளிவரும். நரம்புகளில் வலியேற்படும். காதின் கீழே வீக்கமும் உண்டாகும். மயக்கம், தீராத ஜ்வரம், கபக்கட்டாக மலம் வெளியாதல், நாவறட்சி, பிரமை முதலான குறிகளும் காணப்படில் இது 'ரத்த சாட்டிய சந்நி'யின் குறிகள். 10 நாட்களுள் நோயாளியைக்கொன்று விடும்.

அபிந்யாச ஸந்நிபாதக் குறிகள்

ஏய்ந்திடுந் திரிதோஷங்க ளெழுஞ்சுரஞ் சுவாசந்தாகம்
வாய்ந்தகை காலயர்ச்சி வாய்திறந் துறங்கல் தாபம்
ஓய்ந்திடும் பொறுத்துத் தோரும் முளைந்திடும் பயம் வெருட்சி
ஆய்ந்திடு மபினியாச சந்நிநா ளிருபத் தஞ்சே. (14)

(இ-ள்) ஜ்வரம், சுவாசம், தாகம், கைகால்களில் அயர்ச்சி, வாயைத் திறந்துகொண்டு தூங்குதல், உடலில் எரிச்சல், மூட்டுகள் தோறும் உளைச்சல், பயம், மருட்சி முதலான குறிகள் காணும். இந்நோய் கண்ட 25 நாட்களுள் நோயாளி உயிரிழப்பான்.

புக்குநேத்திர சந்நியின் குறிகள்

சேர்ந்திருகண்ணும்மூடிச் செனித்துநீர் வடிந்திருக்கும்
வ:ர்ந்துடல் நடுநடுக்கும் வாயது மிகப் புலம்பும்
பேர்ந்திடு மறிவுதானும் பேதமாங் குணங்களாகுஞ்
சோர்ந்திடும் புக்கு நேத்ரஞ் சொல்லில்நா ளெட்டதாமே. (15)

(இ-ள்) இரு கண்களும் மூடிப்போம். கண்களிலிருந்து கண்ணீர் வடியும். உடலில் நடுக்கம் உண்டாகும். வாய் புலம்பும். சுய அறிவுடன் நோயாளி இருக்கமாட்டான். இவை புக்கு நேத்திரச்சந்நியின் லக்ஷணங்களாகும். 8 நாட்களில் கொல்லும்.

ரோகங்களையனுசரித்து வரும் சந்நியின் குணங்கள்

வாதசந்நிக் குணமிருமும் வயிறு பொருமும் இளைப்பெடுக்கும்
போதக்காயும் வியர்த்துவிடும் புரண்டு மருண்டு பயந்தோன்றும்

வேதையுடனீர் கடுகடுக்கும் மேனிவெளுத்துக் கடுகடுக்கும்
சீதம் பிறக்கு மிடுப்புளையுஞ் செய்யுங் குணங்கள் கண்டீரே (16)

(இ-ள்) இருமல், வயிற்றுப் பொருமல், மேல் சுவாசம், ஜ்வரம், அதிக மான வியர்வை, அடிக்கடி படுக்கையில் புரளுதல், மயக்கம், திடுக்கிடுதல், வேதனை யுடன் நீர் கடுத்து இறங்கல், உடல் வெளுத்துப்போதல், உடம்பு வலி, இடுப்பிலும் வலி, தொட்டால் குளிர்ச்சி முதலான குறிகள் காணப்படில் அது வாத சந்நியாம்,

பித்த சந்நிக் குறிகள்

பெருகும் பித்த சந்நியது பிதத்து மழந்து மெய்சுழிக்கும்
புருவ நெரித்து மோகிக்கும் போத மழிய வாய் புலப்பும்
மருகுங் கருகுங் கண்சிவக்கு மைந்து புலனும் வேறுபடுங்
கருகியுடம்பு மிகவாடிக் காணுங் குணங்க ளறிவீரே (17)

(இ-ள்) பிதற்றல், உடலில் காங்கை, உடல் குன்றுதல், புருவத்தை யடிக்கடி உயர்த்தல், மயக்கம், வாய் புலம்பல், கண்களில் சிவப்பு, ஐம்புலன்களும் தங்கள் தொழிலை செய்ய இயலாமை, உடம்பு கருநிறமடைந்து வாடுதல். முதலான குறிகளுண்டானால் அது பித்த சந்நியின் குறிகளாகும்.

சிலேத்ம சந்நிக் குறிகள்

மார்பின் மிசையே குறுகுறென்று மலமூத்திரங்கள் வெளுப்பெய்தும்
வேர்வை பெருக்கும் வெறுப்புண்டா மிக்கநாவு வழுவழுக்கும்
சோருமயக்குங் கண்மயக்குந் தோன்றுதோன்றுந் துணைதேடுஞ்
சேரவெறுக்கும் வண்டுறுக்குஞ் சிலேற்பன சந்நி யிதுவாமே (18)

(இ-ள்) மார்பில் கபம் அடைத்துக்கொண்டு "குர் குர்" என்ற சப்தத்தை உண்டாக்கும். மூத்திரம், மலம் இவ்விரண்டும் வெளுப்பாகும் வியர்வை அதிகரிக்கும். தேகத்தில் காங்கையுண்டாகும். நாக்கில் வழுவழுப்புத் தோன்றும். சோர்வு, மயக்கம், கண்கள் மயங்குதல், பார்வை மந்தம், பீதியினால் துணையைத் தேடுதல் முதலான குறிகளும் காணப்படில் அது "சிலேத்ம சந்நி" யாம்

திரிதோஷ சந்நி குறிகள்

மூன்றுங் கூடிக் கோபித்தால் முடுகிப்பிதற்றும தப்பியத்தைத்
தோன்றும் யானை மதப்பட்டாப்போலே கடிந்து சொல்லுமுறுப்
பேன்று குத்துந் தெருத்தலையி னிடையேயோடும் பித்தனென்னும்
ஞான்று நாணந் தனைக் கெடுக்கும் நாடுஞ்சிரத்தை யில்லையென்னே (19)

(இ-ள்) வாதம், பித்தம், கபம் என்ற தோஷங்களும் ஒருமித்துக் கூடிய சந்நியில் பிதற்றல் அதிகரிக்கும். மதம்பிடித்த யானையைப் போல வெருண்டு "பொருக்கமாட்டேன்" என்று சொல்லி தலையில் குத்திக்கொண்டு தெருவில் ஓடவாரம்பிப்பான். உடையும் தளரும். பித்தனைப் போலாவான். ஒரு காரியத்திலும் சிரத்தை வைக்கமாட்டான். வெட்கம் நீங்கும்.

பித்தமோகச் சந்நியின் லக்ஷணங்கள்

அனலெழு மேனிதானும் அயர்ந்து நாவுலர்ந்துதாழு
மனமெலா மருவருக்கு மதமதா யுறக்கந் தோன்றுங்
கனவெலா மிகவுங் காணும் கரங்கள் கால் முடங்கவாங்கும்
நினைவிலாப் பித்தமோகச் சந்நியி னிலைமை தானே. (20)

(இ-ள்) உடம்பு அனலைப்போல் சுடும். நாக்குத் தளர்ந்து உலர்ந்து, புரட்டமுடியாமல் போகும். மனதில் அருவருப்புத் தோன்றும். மதமதப்புடன் தூக்கம் உண்டாகும். தூங்குகையில் கனவுகள் காணுவான். கை கால்கள் முடங்கும். இவைகள் பித்தமோகச் சந்நியின் குறிகுணங்களாம்.

சுக சந்நிக் குறிகள்

துணுக்குத் துணுக்கா யெடுத்தெரியுந் துகிலைக்கீறி விரைவிரைக்கும்
பிணக்கிக்கேட்டால் வசைபேசும் எதிர்த்தார் முகத்தில் துப்பிவிடும்
தனக்குப்பேச வசைபேசும் தங்காதுட நீர் மலந்தின்னுங்
கணக்குப் படியே சுகசந்நிக் கருதிப்பார்க்க வேண்டாமே. (21)

(இ-ள்) ஆடையைச் சிறிது சிறிதாகக் கிழித்து எரிவான். மர்மஸ்தானங்கள் பூரிக்கும். அதட்டிப் பேசினால் வைவான். எதிர்த்துப் பேசியவர்களின் முகத்தில் எச்சிலைத் துப்புவான். தன்னைத்தானே வைதுகொள்வான். தன்னுடைய மலத்தையும் மூத்திரத்தையும் உட்கொள்ளவாரம்பிப்பான். இவைகள் "சுக சந்நி" யின் குறிகுணங்களாகும்.

முகவாத சந்நிக் குறிகள்

கண்ணிற் றலையிற் புருவத்திற் காதிலலகிற் குத்துண்டாய்ப்
பண்ணிப் பதைக்கும் முகந்தன்னைப் பக்கம் பரியத்திரிவிக்கு
மெண்ணிச் சொல்லு முகவாதத் தெழுந்தசந்நி யீதென்றே
நண்ணிச் சொன்னேஞ் சிலர் வாழ நாடுங் குணங்களிவையென்றே. (22)

(இ-ள்) கண்கள், தலை, புருவம், காது, பொட்டு முதலான இடங்களில் குத்துவலி உண்டாகும். பீதியையுண்டாக்கும். முகத்தை ஒரு பக்கமாக இழுத்துவிடும். இது "முகவாதச் சந்நி" யின் குறிகளாகும்.

கபாலச் சந்நிக் குறிகள்

உச்சியிடிக்கு மயிர்முறியு முறக்கம் பெரிதாமுகங்கனக்கும்
அச்சந் தோன்றுங் கால்கைக ளயரும் வேர்க்கும் விழிசிவக்கும்
பச்சென்றிருக்கும் நாசியிற் சீழ் பாயும் நாறும் பறபறியும்
சச்சின் கனக முலையாளே! கபால சந்நியெனக்கருதே (23)

(இ-ள்) தலையுச்சியில் தீராதவலி ஏற்படும். மயிர் உதிரும். தூக்கமும் அதிகரிக்கும். ஆனால் முகம் கனக்கும். மனதில் பயம் உண்டாகும். கை, கால்கள் சோர்வடையும். வியர்வையும் உண்டாகும். விழிகள் சிவப்பாகும், நாசியிலிருந்து பச்சையாகச் சீழ், துர்நாற்றத்துடன் வெளியாகும். அது பட்ட இடங்களில் அரிப்பும் ஏற்படும். இவை கபாலச் சந்நியின் லக்ஷணங்களாம்.

பாரிசவாத சந்நிக் குறிகள்

கையுங் காலுமொருபக்கங் கனக்குந்திமிர்க்கு மயர்வாகும்
மெய்யு மறவேமே...வெதும்பும் நாவு தடுமாறுஞ்
செய்யுங் குணங்கள் பாரிசத்திற் சேரும் வாத சந்நிபாதா
முய்யும் படியே ஆயுள்மறை யுலகமறிய வுரைத்தோமே (24)

(இ-ள்) ஒரு புறத்துக்கையும், காலும் கனக்கும். மதமதப்புடன், சோர்வும் உண்டாகும். நாக்குத்தடுமாறும். உடம்பில் எரிச்சலும் அதிகரிக்கும். இவைகள் பாரிச வாத சந்நிக் குறிகளாகும்.

அயர் சந்நிக் குறிகள்

அம்மு மயக்கு மறிவை யறவழிக்கும்
விம்முஞ் சலம் போல் விறைப்பிக்குஞ்
மறைக்கு மயர்சந்நி யென மானிலத்திலாயுள்
முறைக ளுயர் முன்னோர் மொழி (25)

(இ-ள்) மயக்கம், அறிவு தடுமாற்றம், உடல் விறைப்பு முதலானவை அயர்சந்நிக் குறிகளாகும்.

உட்குத்துச் சந்நிக் குறிகள்

வேர்த்து வெதும்பி பற்கிட்டி விறைத்துக் குத்தித் தாகித்துத்
தீர்த்த மருந்து மனந்தன்னைத் தேடிக்கொள்ள வொட்டாது
பார்த்து மனித ரிருந்தாலும் பரியும்வாயுக் கீழ்நோக்கிப்
பேர்த்துப் பகரா தட்குத்துச் சந்நி யெனவே பேசுவரே. (26)

(இ-ள்) வியர்வை அதிகரித்து பற்கள் கிட்டி உடல் விறைப்பாகும். அதிகமாகத் தாகவறட்சி ஏற்படும். மருந்துகள், ஆகாரம், தண்ணீர் இவைகளை உட்கொள்ளமாட்டான். பற்பல மனிதர்களிருந்தாலும் கூசாமல் அபான வாயுப் பரியும்.

பிளவை நிதானம்

நிலந்தனில் மாந்தர் செய்த நெறிவழு வியாதியாகிப்
பலந்தரு பிளவையென்னப் பெயரெட்டுங் கொண்டதம்மா
வெலுஞ்சரா விகந்தான் கச்ச விகங்க(பாவிக)மத்தி விதாரி
செலும்புத்தி ரிணிமசூரி சாலினி வித்துருத்தி (1)

(இ-ள்) சராவிகா, கச்சபிகா, பாவிகா, விதாரி, புத்திரிணி மஸூரிகா, சாலினி, வித்ருதி என்று எட்டுவகைப்படும்.

சராவிகா பிளவையின் குணங்கள்

சொல்லறு கினிலுயர்ந்து நடுத்தாழ்ந்து தொலைவிலாத
அல்லல்வே தனையுண்டாகி யகத்தில்நீர் பொசிந்துகாட்டி
நல்லுலை மூடிபோன்று நவில்நிறம் பச்சையாகப்
புல்விடு விவையேசாரா விகமெனப் புகலலாமே. (2)

(இ-ள்) பிளவைப் புண்ணின் வரம்புகள் உயர்ந்து மத்திய பாகம் தாழ்ந்துபோம். தாங்கமுடியாத குத்துவலிபுண்டாகும். புண்ணிலிருந்து சதா நீர் வடியும். உலையின் மூடியைப்போல் உட்குழிவாகும். நிறம் பச்சையாகும். இவைகள் "சராவிகா"ப் பிளவையின் குறிகள்.

கச்சபிகா, சாலினி, புத்திரிணி, விதாரி முதலான
பிளவைகளின் குணங்கள்

புகல் கச்ச விகந்தானுமை கவிழ்ந்தது போலவாகும்
பகருஞ்சா லினிதிரண்டு வெருவலி காந்தல் பற்றுந்
தகுபுத்தி ரிணிசிறுத்துத் தான்வரும் விதாரியாதல்
வெகுகிழங் கீரல் போன்று கெட்டியாய் மேவுமென்னே. (3)

(இ-ள்) கச்சபிகா என்ற பிளவை ஆமை முதுகை யொத்து இருக்கும். "சாலினி"யில் புண் திரண்டு, வலி, எரிச்சல் முதலானவைகளுடன் இருக்கும். புத்திரிணியில் புண் சிறுக்கும். பலகண்களும் உண்டாகும். விதாரிப் பிளவையோ வெளியில் ஈரலைப் போலக் கெட்டியாய் இருக்கும்.

வித்ருதி, பாவிக, மசூரி முதலான பிளவைகளின் குறிகள்

மேவிடும் வித்ருதியுந்தி முதுகினில் விளங்கிநோவு
தீவிர மாகிநீருஞ் சிறுத்ததிற் பொசிந்து காட்டிப்
பாவிகம் பவளம் போன்று பதிந்துகட்டியதாய்த் தோன்றுங்
கூவிடு மசூரியாகில் வசூரிபோற் குணமதாமே. (4)

(இ-ள்) வித்ருதிப் பிளவை, வயிறு, முதுகு முதலான இடங்களில் ஏற்பட்டு அதிக வலியைத்தரும். அதிலிருந்து துர்நீர் கசியும்.

பாவிகப் பிளவை :— பவளத்தைப்போல செந்நிறத்துடன் கட்டியாகத் தோன்றும்.

மசூரிப் பிளவை

குணங்கம கதியே நீல வன்னமாய்க் கொப்பளிக்குஞ்
சணஞ்சிறு கடுகுபோன்று சலங்கொண்டு வலிக்குமென்க
வினங்கிய வியாதியெட்டு மிப்படிக் குணங்கள் சொன்னோம்
பிணங்கிய வியாதித்தான மசாத்தியம் பேசுவோமே. (5)

(இ-ள்) மசூரிப்பிளவை ரோகத்திலோ, அம்மையைப்போன்று கடுகைப் போன்ற சிறு சிறு கொப்பளங்கள், நீல நிறமாய்க் கொப்பளிக்கும். அதில் நீர் கோர்த்து வலியையும் உண்டாக்கும். இவ்வாறு எட்டுவகைப் பிளவைகளின் குறிகள் மொழியப்பட்டன.

பிளவையின் ஸ்தானமும் ஸாத்யாஸாத்யமும்

பேசுவோ அபான மார்பு புறங்காலு (முழங்) காலங்கை
தேசுசேர் புறங்கை கொங்கை சிரசுச்சி முதுகந் தண்டு
பூசியகழுத்தெருத்தம் பொருந்திடிற் பிரயாசத்தால்
வாசியாம் பிளவை மேகம் வந்திடிற் நீராதென்னே (6)

(இ-ள்) குய்யம், மார்பு, புறங்கால், முழங்கால், புறங்கை, ஸ்தனம். சிரசின் உச்சி முதுகில் முள்ளந்தண்டுப் பிரதேசம், கழுத்து முதலான இடங்களில் பிளவை ஏற்பட்டால் கஷ்டப்பட்டுச் சிகித்ஸை செய்யவேண்டும். நீர் ரோகத்தின் மேல் வந்த பிளவை தீராது.

என்னுமித் தானமின்றி யிசைந்த மற்றிடங்கள் சேரி
லன்னவன் கரப்பன் மேக மணைந்துளோ னல்லனாகிற்
பின்னுமே ... ... பிரமையு மில்லாதாகிற்
பன்னுசென்றார் கண்டோர்கள் பாபம்போற் றீருமென்னே (7)

(இ-ள்) மேற்கூறிய ஸ்தானங்களைத்தவிர மற்ற இடங்களில் பிளவை ஏற்பட்டாலும், கரப்பான், மேகரோகம் முதலான ரோகங்கள் இல்லாதவனுக்கு ஏற்பட்டாலும், மயக்கம் இல்லாதவனுக்கு இந்நோய் கண்டாலும் பற்பல ஊர்களைக்கண்டு தீர்த்தத்தில் நீராடி நீக்கிய பாபம்போலப் பிளவை குணமாகும்.

not covered by the second member पूर्वा, the तदन्तविधि cannot apply. So such a compound will come under the prohibition against Bahuvrīhi. This is removed by this Sūtra which provides for an additional form as a Sarvanāma. This optionality is confined to cases coming under 2-2-26 (Vasu's Aṣṭādhyāyī).

(II. b.) When these words are proper names they are not Sarvanāmas.

This conclusion is obvious from the consideration that a proper name can only be the name of one and cannot be the name of all (सर्वनाम) So if a man is named "Sarva" or any other word in the 35, the declension (if the word ends in short अ) follows शिव.

Nom. plural सर्वाः, dat-sing. सर्वाय, abl-sing. सर्वात्, gen-plu. सर्वाणां, and loc-sing. सर्वे.

*What follows is a list of Sarvanāmas with their number, meaning and peculiarities.

S. No.	The Pronoun	meaning	Peculiarities
1	*सर्व	All	
2	*विश्व	Universal	
3	उभ	Both	Used only in the dual.
4	*उभय	a couple	Has no form in the dual according to the more prevalant opinion.
5	*इतर	one of two	Applied by the Sūtra कियत्तदोर्निर्धारणे (5—3—92)
6	*इतम	one of many	„ „ वा बहूनां (5—3—93) For the formation of bases with these two terminations see App. No. 5.
7	*अन्य	Another	
8	*अन्यतर	one of two	This is not got by adding इतर to a base for that termination can be added only to किं यत् & तत्. So this is specially mentioned.

*For a list see small S. K. p. 47.

S. No.	The Pronoun	Meaning	Peculiarities.
	अन्यतम	one of many	This अन्यतम follows शिव, because it is not included in the list nor is it formed by adding डतम. This is formed by adding तमप् by the sūtra अतिशायने तमबिष्ठनौ (5-3-55)S. K. 2001
9	इतर		Note :-The five Sarvanāmas (5 to 9) can be employed (like the other Sarvanāmas) in all genders. In the masculine and feminine genders, they follow सर्व & सर्वा respectively. In the neuter, they have certain peculiarities which are noted under the noun कतरत् in neutor bases ending in short अ.
10	त्वत्		
11	त्व		
12	नेम		
13	सम	1. All 2. Similar	This is Sarvanāma only when meaning all. When meaning similiar it follows शिव, because of the use of समानां in the Sūtra "यथासङ्ख्यमनुदेशस्समानाम्" 1—3—10. (S. K. 128)
14	सिम		
15	पूर्व	East or Eastern	
16	पर	Subsequent	
17	अवर	Posterior in time or space	
18	दाक्षिण	1. South 2. Clever	Only in this sense it is Sarvanāma In this sense it follows शिव.
19	उत्तर	North	
20	अपर	Another, Hinder	
21	अधर	Lower, Downwards	

S. No.	The Prononn	Meaning	Peculiarities.
22	स्व	Own	Only when meaning "own" it is a pronoun. When the thing owned is a relative or wealth, it follows शिव.
23	अन्तर	1 Outside 2 outer garment	Pronoun only in these two meanings. Balamanōramā P. 135:-अन्तर-अनावृत-प्रदेशः Unenclosed space. Ex. सालस्य अन्तरेषां गृहाणाम्-Houses outside the walls. अन्तरे अन्तरा वा गृहाः-Outside the House. अन्तरे अन्तरा वा शाटकाः By "पूर्वादिभ्यो नवभ्यो वा" (see ante 266) the nine pronouns पूर्व to अन्तर, follow the type सर्व, because they are mentioned in the list. In some special meanings they have another form like शिव, in three out of 5 places where a pronoun differs.
24	त्यद्	Other	By an इष्टि "द्विपर्यन्तानामेवेष्टिः" the term त्यदादि extends only as far as द्वि. These (24 to 31) become bases ending in short अ during declension by "त्यदादीनामः" 7—1—102 (S. K. 265) Of course these come under the general rule, but when these are names or when they merge in a compound they cease to be pronouns.
25	तद्	That	
26	यद्	That which	
27	एतद्	This	
28	इदम्	This	
29	अदस्	That	
30	एक	One	
31	द्वि	Two	
32	युष्मत्	You	
33	अस्मद्	I	
34	भवत्	Thou	
35	किम्	What	

Those marked with a star follow the type सर्व.

Irregular bases ending in short अ.

S 273. जराया जरसन्यतरस्याम् 7—2—101. (S. K. 227) जराशब्दस्य जरस वा स्यात् अजादौ विभक्तौ।

Tr. The word जरस् is optionally substituted for जरा before vowel terminations.

(न विद्यते जरा यस्य सः) निर्जरः-He who has no old age.

निर्जरः	निर्जरौ निर्जरसौ	निर्जराः निर्जरसः
निर्जरम् निर्जरसम्	,, ,,	निर्जरान् निर्जरसः
निर्जरेण निर्जरसा	निर्जराभ्याम्	निर्जरैः
निर्जराय निर्जरसे	,,	निर्जरेभ्यः
निर्जरात् निर्जरसः	,,	,,
निर्जरस्य निर्जरसः	निर्जरयोः निर्जरसोः	निर्जराणाम् निर्जरसाम्
निर्जरे निर्जरसि	,, ,,	निर्जरेषु

Note on the irregular bases ending in short अ.

Certain nouns ending in short have got an additional base ending in a consonant, after all declensional terminations beginning with शस्. So in all these places they have two forms. One of these forms follows the type शिव, the other depends on the consonant. So we have to anticipate under this heading devoted to bases ending in short अ, a number of bases

ending in consonants. The formation of consonantal bases will be explained in this context under the heading हलन्त.

The rule introducing these irregular bases is :—

§ 274. पद्दन्नोमास्हृन्निशसन्यूषन्दोषन्यकञ्छकन्नुदन्नासञ्छस्प्रभृतिषु। 6—1—63. (S. K. 228)

पाद दन्त नासिका मास हृदय निशा असृज् यूष दोष यकृत् शकृत् उदक आस्य एषां पदादयः आदेशाः स्युः शसादौ वा।

Tr. These thirteen bases पाद दन्त etc. ending in short अ, are optionally substituted by पद् दत् etc, respectively before all the terminations from शस् (acc. plu.)

१. पाद्-**Foot.**

पादः	पादौ	पादाः
हे पाद	हे ,,	हे ,,
पादम्	,,	पादान् पदः
पादेन पदा	पादाभ्याम् पद्भ्याम्	पादैः पद्भिः
पादाय पदे	,, ,,	पादेभ्यः पद्भ्यः
पादात् पदः	,, ,,	,, ,,
पादस्य पदः	पादयोः पदोः	पादानाम् पदाम्
पादे पदि	,, ,,	पादेषु पत्सु

(See under bases ending in द्)

२. दन्त-Tooth.

दन्तः	दन्तौ	दन्ताः
हे दन्त	हे ,,	हे ,,
दन्तम्	,,	दन्तान् दतः
दन्तेन दता	दन्ताभ्याम् दद्भ्याम्	दन्तैः दद्भिः
दन्ताय दते	,, ,,	दन्तेभ्यः दद्भ्यः
दन्तात् दतः	,, ,,	,, ,,
दन्तस्य दतः	दन्तयोः दतोः	दन्तानाम् दताम्
दन्ते दति	,, ,,	दन्तेषु दत्सु

(See under bases ending in त्)

३. नासिका-Nose.

नासिका	नासिके	नासिकाः
हे नासिके	हे ,,	हे ,,
नासिकाम्	,,	नासिकाः नसः
नासिकया नसा	नासिकाभ्याम नोभ्याम्	नासिकाभिः नोभिः

नासिकायै	नासिकाभ्याम्	नासिकाभ्यः
नसे	नोभ्याम्	नोभ्यः
नासिकायाः	,,	,,
नसः	,,	,,
,,	नासिकयोः	नासिकानाम्
,,	नसोः	नसाम्
नासिकायाम्	,,	नासिकासु
नसि	,,	नस्सु

(See under bases ending in स्)

४. मास-Month.

मासः	मासौ	मासाः
हे ,,	हे ,,	हे ,,
मासम्	,,	मासान् मासः
मासेन	मासाभ्याम्	मासैः
मासा	माभ्याम्	माभिः
मासाय	,,	मासेभ्यः
मासे	,,	माभ्यः
मासात्	,,	,,
मासः	,,	,,
मासस्य	मासयोः	मासानाम्
मासः	मासोः	मासाम्
मासे	,,	मासेषु
मासि	,,	मास्सु

(See under bases ending in स्)

५. हृदय-Heart.

हृदयं	हृदये	हृदयानि
हे हृदय	हे ,,	हे ,,
हृदयम्	,,	,, हृन्दि
हृदयेन हृदा	हृदयाभ्याम् हृद्भ्याम्	हृदयैः हृद्भिः
हृदयाय हृदे	,, ,,	हृदयेभ्यः हृद्भ्यः
हृदयात् हृदः	,, ,,	,, ,,
हृदयस्य हृदः	हृदययोः हृदोः	हृदयानाम् हृदाम्
हृदये हृदि	,, ,,	हृदयेषु हृत्सु

(See under bases ending in द् neuter)

६. निशा-Night.

निशा	निशे	निशाः
हे निशे	हे ,,	हे ,,
निशाम्	,,	,, निशः
निशया निशा	निशाभ्याम् निड्भ्याम्	निशाभिः निड्भिः

दर्शेऽग्निमुपसमाधाय प्रज्वाल्यालंकृत्य परिस्तीर्य वेष्टनवस्त्रं विमुच्याचार्यस्य मुखमभिदर्शयत्यग्निमादित्यमुदकुम्भमश्मानं वत्समाकाशं हिरण्यं च दर्शयित्वा, शिरोवेष्टनवस्त्रं गुरवे दद्यात् । वयस्सुपर्णा इत्यादित्यमुपतिष्ठते । एवमेवोत्सर्जनमाद्यचारिषमशकमराधीत्युपस्थाने विशेषः । समिद्धोमस्त्वयं विशेषो द्यौस्समिदिति चतस्रोभ्यादधाति । सर्वं पूर्ववत् कृत्वा निमीलनादिति च वर्जयेद्ब्राह्मणान् भोजयेदाशिषो वाचयेदित्याह भगवान् बोधायनः ॥ १२ ॥

इति द्वादशः खण्डः ॥

अथ स्नातकव्रतम्

वेदमधीत्य स्नास्यन् स्नानं करिष्य इति संकल्प्य प्रागुदयाद्व्रजं प्रविश्यान्तर्लोम्णा चर्मणा द्वारं पिधायास्ते । नयनमेतदहरादित्योभितपेन्मध्यन्दिनेऽग्निं प्रतिष्ठाप्याग्नीन्धनादि पात्रप्रयोगान्ते समित्सूत्रे वस्त्रे मणियुगळं स्रक्सुगन्धप्रवृत्तौ शीतोष्णाम्बुक्षुरकटयवच्छत्रदण्डाञ्जनदर्पणोपानद्द्वयकुशशकृत्स्नानचूर्णौदुम्बरकाष्ठानि सकृत्प्रयुञ्ज्यात् । आज्यभागान्ते इम॰स्तोममिति पालाशीं समिधमग्नावाधाप्यापरेणाग्निं कट उपविश्य त्र्यायुषमिति क्षुरमभिमन्त्र्य शिवो नामासीति यजुषा वप्त्रे प्रदायापांस॰सर्जनाद्याकेशनिधानात्समानम् । जघनार्धे व्रजस्योपविश्य विस्रस्य मेखलां ब्रह्मचारिणे प्रयच्छति । ता॰स इदमहमिति यजुषोदुम्बरमूले दर्भस्तम्भे वोपगूहति । अद्भिरापोहिष्ठेति तिसृभिर्हिरण्यवर्णा इति तिसृभिष्षड्भिः स्नापयित्वा अन्नाद्यायेत्यौदुम्बरकाष्ठेन दतो धावते । स्नानीयेनोद्वर्त्य स्नात्वा सोमस्येति यजुषाऽहतमुत्तरं वासः परिधाय सार्वसुरभिचन्दनं नमो ग्रहाय चेति प्रतिनमस्कारं देवताभ्यो रक्षणाय दत्वाप्सरस्त्वित्यात्मानमनुलिप्य मणि॰सौवर्णं सोपधानं सूत्रप्रोतमियमोषध इति उदकपात्रे त्रिः प्रदक्षिणं परिप्लाव्यापाशोस्युर इत्यर्धर्चत्रयेण कण्ठे बध्वा बादरमणिमप्येवं सव्ये पाणौ तूष्णीं बध्नात्यहतमुत्तरं वासः रेवतीस्त्वेति समानम् । तस्य दशायां प्रवर्तौ प्रबध्य दर्व्यामादायाज्येनाभ्यानयन् आयुष्यमिति प्रतिमन्त्रमष्टावाज्याहुतीर्हुत्वा समित्सन्नहनं जयादिब्रह्मविसर्जनान्ते आयुष्यमित्यादिभिः प्रवर्तमेकं दक्षिणकर्णे बध्नात्येताभिरेव सव्ये द्वितीयम् । शुभिकेशिर इति स्रजं शिरसि निधाय यामाहरदिति बध्वा यदाञ्जनमित्याञ्जनेन चक्षुषी आङ्क्ते । मयि पर्वतेति चतुर्णां यजुषामेकेन वा यन्मे वर्च इति आदर्शमीक्षते । प्रतिष्ठे स्थ इत्युपानहौ पादाभ्यां गृह्णाति । प्रजापतेश्शरणमसीति छत्रं देवस्य त्वेति वैणवदण्डमादाय वाचं यच्छत्यानक्षत्रोदयादुदितेषु नक्षत्रेषु प्राचीमुदीचीं वा दिशमुपनिष्क्रम्य देवीष्षडुर्वीरित्यर्धर्चत्रयेण प्रतिदिशमुपस्थाय माहास्महीति चन्द्रमसं च रातिना सम्भाष्य यथार्थं गच्छति *अपरं तूष्णीमेव तीर्थे स्नात्वा तूष्णीं समिधमादधाति ॥ १३ ॥

इति त्रयोदशः खण्डः ॥

* पक्षान्तरम् ॥

अथ पाणिग्रहणम्

